
www.padippakam.com

பிப்ரவரி 2008
ரூ. 7.00

# புதிய ஜனநாயகம்



மோடியின் குஜராத்தில்,
சொந்த இழப்புகளால்
துவண்டு போய்விடாமல்,
இந்துமதவெறி கிரிமினல்களைத்
தண்டிக்கப் போராடிவரும்
பில்கிஸ் பானு என்ற
சாமானியப் பெண்ணின் கதை

# இதுவன்றோ வீரம்!

படிப்பகம்

www.padippakam.com

# "ஆயிரக்கணக்கான முசுலீம்களைக் கொன்று குவித்த பயங்கரவாதி மோடியை விரட்டியடிப்போம்!"

## – புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம் – முற்றுகைப் போராட்டம்

பார்ப்பன நச்சுக் கிருமி துக்ளக் "சோ"-வின் பத்திரிகை ஆண்டு விழாவுக்கும், தமிழகத்தில் காலூன்ற பார்ப்பன-பாசிச ஜெயலலிதாவுடன் கூட்டணியை நிறுவவும் பயங்கரவாத மோடி சென்னை வருவதை அறிந்ததும், ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமக்கே உரித்தான போர்க்குணத்துடன் கடந்த ஜனவரி மாத மத்தியில் போராட்டத்தில் இறங்கின.

காமராசரைக் கொல்லத் துணிந்த இந்துவெறி பயங்கரவாதிகளுக்கு, காங்கிரசு கட்சியினர் காமராசர் அரங்கில் நிகழ்ச்சி நடத்த அனுமதி தருவது அயோக்கியத்தனம்; காமராசர் அரங்க அனுமதியை ரத்து செய்! எனத் துண்டுப் பிரசுரம் - சுவரொட்டிகளை வெளியிட்டுப் பிரச்சாரத்தை மேற்கொண்ட இவ்வமைப்புகள், அதன் தொடர்ச்சியாக 9.1.08 அன்று காலை 10 மணியளவில் தமிழ்நாடு காங்கிரசு கட்சி அலுவலகமான சத்தியமூர்த்தி பவனை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் தலைமையில் செங்கொடிகள் - பதாகைகளுடன் சத்தியமூர்த்தி பவனை நோக்கி முழக்கமிட்டபடியே ஊர்வலமாகச் சென்ற இவ்வமைப்புகளின் தோழர்களை வழிமறித்து போலீசு கைது செய்தது.

இப்போராட்டத்தால், "மரண வியாபாரி" என்று காங்கிரசுத் தலைவி சோனியாவால் குற்றம் சாட்டப்பட்ட கொலைகார மோடிக்கு காமராசர் அரங்கத்தை அனுமதிக்கும் காங்கிரசின் துரோகம் அம்பலமானதும், காங்கிரசு தலைவர் கிருஷ்ணசாமி "குஜராத்தில் நாங்கள் பேசியது அரசியல்; இங்கு அரங்கம் கொடுப்பது வியாபாரம்" என்று நாளேடுகளில் விளக்கமளித்து, காங்கிரசின் மதவெறி எதிர்ப்புப் பித்தலாட்டத்தை நாடெங்கும் பறைசாற்றினார். அதைத் தொடர்ந்து, "மோடி நடத்துவது மரண வியாபாரம் என்றால், நீ நடத்துவது என்ன வியாபாரம்? கிருஷ்ணசாமியே பதில் சொல்!" என்ற முழக்கத்துடன் இப்புரட்சிகர அமைப்புகள் நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டி காங்கிரசு துரோகிகளை அம்பலப்படுத்திக் காட்டின. இச்சுவரொட்டிகளைக் கண்டு காங்கிரசு கலங்கியதோ, இல்லையோ; 'சூத்திர' கருணாநிதி அரசின் போலீசு இதைக் கண்டு பீதியடைந்து இரவோடிரவாக இச்சுவரொட்டிகளைக் கிழித்தெறியும் மாபெரும் கடமையை விசுவாசமாகச் செய்தது.

இந்துவெறி பயங்கரவாத மோடியின் வருகையை ரத்து செய்யுமாறு தமிழக அரசைக் கோரியும், கொலைகார மோடியின் பார்ப்பன பாசிசத்துக்கு அங்கீகாரமளித்து வரவேற்கும் துக்ளக் "சோ", ஜெயலலிதா, பா.ஜ.க. வகையறாக்களை எதிர்த்தும், காங்கிரசு துரோகிகளை அம்பலப்படுத்தியும் 12.1.08 அன்று பத்திரிகையாளர் சந்திப்பை நடத்திய இவ்வமைப்புகள், மோடி சென்னைக்கு வரும் 14.1.08 அன்று காமராசர் அரங்கின் முன் முற்றுகைப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தன. இதையொட்டி பல்லாயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள், பேனர்கள் மூலமும், பேருந்துகள் - ரயில்களிலும் இவ்வமைப்பின் தோழர்கள் சூறாவளிப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்த போலீசு, இம்முற்றுகைப் போராட்டத்துக்குத் தடை விதித்தது.

ஜனவரி 14-ஆம் நாளன்று மாலை 5 மணியளவில் தி.நகர் பேருந்து நிலையம் அருகில் பு.ஜ.தொ.மு. தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் திரண்ட இவ்வமைப்புகளின் தோழர்கள் செங்கொடி ஏந்தி, இந்துவெறி பாசிசத்துக்கு எதிராக முழக்கமிட்டபடியே கொலைகார மோடி பங்கேற்கும் நிகழ்ச்சி நடக்கும் காமராசர் அரங்கை முற்றுகையிட ஊர்வலமாகப் புறப்பட்டனர். தடையை மீறிப் போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் அனைவரையும் கைது செய்த போலீசு, மோடி விமானமேறிய பிறகு பின்னிரவில் விடுவித்தது.

பல்லாயிரக்கணக்கான மக்களின் உற்சாகமான ஆதரவுடன், உரிய தருணத்தில் இந்துவெறி பாசிஸ்டுகளுக்கு எதிராக இப்புரட்சிகர அமைப்புகள் நடத்திய வீச்சான பிரச்சாரமும் போர்க்குணமிக்க போராட்டமும், பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகத் தொடர்ந்து வீதியில் இறங்கிப் போராடும் முன்னணிப் படை இவ்வமைப்புகள்தான் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது.

— பு.ஜ. செய்தியாளர்கள்.





படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 4**

பிப். 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561

# ஆட்சியாளர்களை முடிவு செய்வது சந்தர்ப்பவாத சேர்க்கைகளே!

அடுத்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களுக்கு இன்னமும் ஓராண்டுக்கு மேலும், தமிழக சட்டப்பேரவைத் தேர்தல்களுக்கு மூன்றாண்டுகளுக்கும் மேலாக அவகாசம் இருக்கிறது. என்றாலும் இப்போதே ஓட்டுக்கட்சி அரசியலில் செயற்கையாகச் சூடேற்றி மக்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. கூட்டணி அரசியல் குட்டை சகிக்க முடியாதவாறு நாற்றமெடுக்கும் அளவுக்குக் குழப்பி விடப்படுகிறது. அதைக் குழப்பிவிட்டு ஆதாயம் அடைவதற்கான முயற்சியில், கடந்த தேர்தல்களில் ஆட்சி அதிகாரத்தை இழந்த ஓட்டுக் கட்சிகளும், சந்தர்ப்பவாதக் கூட்டணி போட்டுத் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளக் கனவு காணும் ஓட்டுக் கட்சிகளும் மட்டுமல்ல, பிழைப்புவாத மற்றும் பார்ப்பனமயமான செய்தி ஊடகங்களும் தீவிரமாக இறங்கியுள்ளன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கடந்த நாடாளுமன்ற-சட்டப்பேரவைத் தேர்தல்களில் இந்து மதவெறி பார்ப்பன பாசிச ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வும் அதன் இயல்பான தோழமைக் கட்சியான ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வும் ஏறக்குறைய தனிமைப்படுத்தப்பட்டு தோற்கடிக்கப்பட்டன. ஆட்சியை இழந்தவர்கள் ஆத்திரத்தோடு பொங்கி எழுந்தார்கள்; வெற்றி பெற்ற கட்சிகளின் கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்தி, பிளவுபடுத்திக் கட்சிகளைத் தம் பக்கம் இழுக்கும் நோக்கத்தோடு, பிழைப்புவாத மற்றும் பார்ப்பனமயமான செய்தி ஊடகங்களைப் பயன்படுத்தி ஊகங்களையும் வதந்திகளையும் தொடர்ந்து திட்டமிட்டுப் பரப்பினர். இந்த முயற்சியில் கருணாநிதி தலைமையிலான கூட்டணியில் குழப்பமும் சலசலப்பையும் ஏற்படுத்துவதில் அவர்கள் வெற்றி பெற்றாலும், நம்பிக்கையான மாற்றுக் கூட்டணியை ஜெயலலிதா தலைமையில் ஏற்படுத்திவிடும் நோக்கம் இன்னமும் ஈடேறவில்லை என்றுதான் கூறவேண்டும்.

இந்த நிலையில் தமிழ்நாட்டின் பிரபல பார்ப்பன பாசிச அரசியல் தரகனான துக்ளக் ''சோ'' பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார். குஜராத் இந்து மதவெறி பாசிசக் கொலைகாரன் மோடியை முன்னிறுத்தி இதைச் சாதித்துள்ளார். மோடியைச் சிறப்பு விருந்தினராகக் கொண்டு 'சோ' நடத்திய துக்ளக் ஆண்டு விழாவில் பேசியபோது, ''தமிழகத்தில், பா.ஜ.க. - அ.தி.மு.க. மற்றும் நடிகர் விஜயகாந்தின் தே.மு.தி.க. கூட்டணி உருவானால் நூற்றுக்கு நூறு வெற்றி பெறும் என்று அரசியல் ஆரூடம் கூறியுள்ளார். இந்தக் கூட்டணியை உருவாக்கும் சகுனி வேலையில் மோடியால் ராஜகுரு என்றழைக்கப்பட்ட 'சோ' தீவிரமாக ஈடுபட்டுள்ளது தெரிகிறது. பா.ஜ.க.-அ.தி.மு.க. ஆகியவை மட்டும் கூட்டணி சேர்ந்து தமிழகத்தில் வெற்றி பெற முடியாது என்ற நிலையில், முன்பு எம்.ஜி.ஆரின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு தமது பார்ப்பன பாசிச நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டதைப் போல, நடிகர் விஜயகாந்தைப் பயன்படுத்திக் கொள்ள இப்போது அவர்கள் எத்தணிக்கிறார்கள்.

தேசியக் கட்சிகள் என்றழைக்கப்படும் பா.ஜ.க., காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டுகளிடையே கொள்கை, கோட்பாடு என்ற வகையிலான பெரிய வேறுபாடுகள் எதுவும் கிடையாது. காங்கிரசும் போலி கம்யூனிஸ்டுக் கட்சிகளும் இந்துத்துவ மற்றும் இசுலாமிய மதவாத சக்திகளுடன் மாறி மாறி சமரசம் செய்து கொள்பவைகளாக உள்ளன. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கம் என்ற துரோகக் கொள்கையை எல்லா ஓட்டுக் கட்சிகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரிக்கின்றன. குடும்ப-வாரிசு நலன்களை முன்னிறுத்தி கருணாநிதி நடத்திய கூட்டணி அரசியல் இரண்டு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டு விட்டதை உறுதிப்படுத்தின. இலவச-கவர்ச்சிவாத முகங்கொண்ட உலகமயமாக்கல் புதிய பொருளாதாரக் கொள்கைதான் ஓட்டுக்கட்சி அரசியலுக்கு இசைவானதாக இருக்க முடியும். எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை பெற்றுத்தரும் கூட்டணி அரசியலுக்கு இடமளிக்காதவாறும் வாக்கு வங்கிகள் சிதறிப் போய்விட்டன. அதாவது, அனைத்திந்திய அளவிலும் மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் ஒரு கட்சியின் பெரும்பான்மை ஆட்சி என்பது கூட பழங்கதையாகி விட்டது. இந்த நிலையில் ஓட்டுக் கட்சிகள் தேர்தல்களில் பெறும் சதவீதக் கணக்குகளே கூட்டணியைத் தீர்மானிப்பவையாக உள்ளன. இதனால் தேசியம், இந்துத்துவம் போன்றவற்றை ஆதரிக்கும் மேட்டுக்குடி அறிவுஜீவிகள் கேலி பேசும் நடிகரின் கட்சிகள், சாதிகளின் கட்சிகள், பிழைப்புவாதிகளின் கட்சிகள் கூட அவர்களே மதிக்கத்தக்க வேண்டிய அரசியல் கட்சிகளாகி விட்டன. நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயகத்தின் கீழ் தங்கள் ஆட்சியாளர்களை மக்களே தீர்மானிக்கிறார்கள் என்கிற திரை விலகி, சதவீதக் கணக்கு அடிப்படையில் முடிவாகும் சந்தர்ப்பவாதச் சேர்க்கைகளே தீர்மானிக்கின்றன என்பதாகிவிட்டது. •

படிப்பகம்

www.padippakam.com



# இதுவன்றோ வீரம்!

**மோடியின் குஜராத்தில், சொந்த இழப்புகளால் துவண்டு போய்விடாமல், இந்து மதவெறி பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராடி வரும் பில்கிஸ் பானு என்ற சாமானியப் பெண்ணின் கதை.**

குஜராத் முசுலீம் படுகொலைகள் தொடர்பான வழக்கொன்றில், குற்றவாளிகளைத் தண்டித்து, மும்பய்க் குற்றவியல் நீதிமன்றம் சனவரி மாத இறுதியில் தீர்ப்பளித்திருக்கிறது. இத்தீர்ப்பானது, ரவுடிகள், மாஃபியா கும்பலை விட, ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறி பாசிஸ்டுகள் வக்கிரமான கிரிமினல் பேர்வழிகள்; பஞ்சமா பாதகத்தையும் செய்யத் துணியும் பயங்கரவாதிகள் என்பதையும்; மோடி அரசிற்கும், இப்படுகொலைகளுக்கும் நேரடித் தொடர்புண்டு என்பதையும் மீண்டும் நிரூபித்திருக்கிறது. இன்னொருபுறம், இப்பயங்கரவாதிகளை எதிர்த்து மன உறுதியுடனும், துணிச்சலோடும் ஆறாண்டுகளாகப் போராடி வரும் பில்கிஸ் பானு என்ற வீராங்கனையையும் அடையாளம் காட்டியிருக்கிறது.

பில்கிஸ் பானு, குஜராத் மாநிலம் தாஹோட் மாவட்டத்திலுள்ள ரந்திக்புர் கிராமத்தைச் சேர்ந்தவர். தனது கணவர் யாகூப் ரசூல், மூன்றரை வயது பெண் குழந்தை சலேஹாவுடன் பக்ரீத் பண்டிகையைக் கொண்டாடுவதற்காகத் தனது பிறந்த வீட்டிற்கு பில்கிஸ் பானு வந்திருந்தபொழுதுதான், குஜராத்தில் இந்து மதவெறி பயங்கரவாதத் தாக்குதல் வெடித்தது.

ரந்திக்புர் கிராமத்தில் வசித்து வந்த முசுலீம்களின் 71 வீடுகளும்; அவர்களுக்குச் சொந்தமான 14 மளிகைக் கடைகளும்; வேறு சில பெட்டிக் கடைகளும் இந்து மதவெறிக் கும்பலால் முற்றிலுமாகத் தீக்கிரையாக்கப்பட்டன; அனைத்து முசுலீம் குடும்பங்களும் உயிரையாவது காப்பாற்றிக் கொள்ள, கிராமத்தைவிட்டு வெளியேறின.

பில்கிஸ் பானுவும், தனது கணவர், குழந்தை, தாயார், இரண்டு சகோதரிகள், இரண்டு சகோதரர்கள் உள்ளிட்டு தனது உறவினர்கள் 16 பேரோடு ரந்திக்புரிலிருந்து வெளியேறி, பரியா என்ற ஊரை நோக்கித் தப்பிச் செல்லத் தொடங்கினார். இந்து மதவெறியர்களின் கண்களில் அகப்பட்டுக் கொண்டு விடாமல் பில்கிஸ் பானுவின் குடும்பம் பதுங்கிப் பதுங்கிச் சென்று கொண்டிருந்த நேரத்திலே, அவரின் அத்தை மகளுக்கு குஜாவல் மசூதியில் பெண் குழந்தையும் பிறந்தது. இதற்கு மறுநாள் குத்ரா என்ற ஊருக்கு அவர்கள் வந்தபொழுது, அவ்வூரைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தனர்.

அங்கு இரண்டு நாட்கள் பாதுகாப்பாக இருந்துவிட்டு, மூன்றாவது நாள் ஒவ்வொருவரும் பழங்குடியினர் போல வேடமணிந்து கொண்டு, குத்ராவில் இருந்து வெளியேறி, சாபர்வாட் என்ற கிராமத்திற்கு வந்து, ஊருக்கு ஒதுக்குப்புறமான வயல்வெளியில் பதுங்கியிருந்தனர். அப்பொழுது அந்த வழியாக ஆயுதங்களுடன் சென்று கொண்டிருந்த இந்து மதவெறிக் கும்பலிடம் பில்கிஸ் பானு குடும்பம் மாட்டிக் கொண்டது. அக்கும்பலில் இருந்த ரந்திக்புர் கிராமத்தைச் சேர்ந்த இந்து வெறியர்கள் பில்கிஸ் பானுவை அடையாளம் கண்டு கொண்டு, தங்களின் வக்கிரமான தாக்குதலை நடத்தினர்.

ஷைலேஷ் பட் என்ற இந்து மதவெறியன் பில்கிஸ் பானுவின் குழந்தை சலேஹாவை அவரிடமிருந்து பிடுங்கி, அவரின் கண் எதிரிலேயே அக்குழந்தையை தரையில் அடித்துக் கொன்றான். பிறகு அவனும், அக்கும்பலைச் சேர்ந்த லாலா டாக்டர், லாலோ வக்கீல், கோவிந்த் நானா ஆகிய நான்கு பேரும் சேர்ந்து, பில்கிஸ் பானுவைக் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தினர். கர்ப்பமாக இருக்கும் தன்னைவிட்டு விடும்படி பில்கிஸ்பானு கெஞ்சியதை, கதறியதை அக்கும்பல் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. தங்களின் காமவெறியைத் தீர்த்துக் கொண்ட பிறகு, அக்கும்பல் பில்கிஸ் பானுவைத் தீர்த்துக் கட்டும் வெறியோடு தாக்கியதில், அவர் சுயநினைவு இழந்து விழுந்தார்.

பில்கிஸ் பானு மட்டுமின்றி அவரின் தாயார், சகோதரிகள் உள்ளிட்டு எட்டுப் பெண்கள் அக்கும்பலால் பாலியல் பலாத்காரப்படுத்தப் பட்டனர். பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் என அனைவரும் கத்தியாலும், ஈட்டியாலும், குண்டாந்தடிகளாலும் தாக்கப்பட்டனர்.

**தனது கணவர் யாகூப் ரசூல், குழந்தைகளோடு பில்கிஸ் பானு: போராட்டத்தில் தானே மகிழ்ச்சியைக் காண முடியும்.**





படிப்பகம்

www.padippakam.com

இரண்டு - மூன்று மணி நேரம் கழித்து பில்கிஸ் பானுவிற்கு நினைவு திரும்பிய பொழுது, தனது குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பெண்களும், நான்கு சிறுவர்களும் கொல்லப்பட்டுக் கிடப்பதைக் கண்டார்; மீதிப்பேர் இருந்த சுவடே தெரியவில்லை. பில்கிஸ் பானு, அந்தப் பலவீனமான நிலையிலும் நடந்து சென்று, வழியில் தென்பட்ட ஒரு பழங்குடி இனப் பெண்ணிடம் இரவலாக ஆடை வாங்கி அணிந்து கொண்டு, லிம்கேடா போலீசு நிலையத்திற்குச் சென்று இத்தாக்குதல் பற்றி புகார் கொடுத்தார். அப்பொழுதுதான், இந்து மதவெறிக் கலவரத்தின் சூத்திரதாரியாக மோடி அரசு இருப்பதை பில்கிஸ் பானு புரிந்து கொண்டார்.



பில்கிஸ் பானுவின் போராட்டத்தால் தண்டிக்கப் பெற்ற இந்து மதவெறி பயங்கரவாதிகளுள் இருவர்.

அப்போலீசு நிலையத்தில் தலைமைக் காவலராக இருந்த சோமபாய் கோரி, பில்கிஸ் பானு வாக்குமூலம் அளித்தபடி நடந்த சம்பவத்தைப் புகாராகப் பதிவு செய்யாமல், குற்றவாளிகளைக் காக்கும் நோக்கத்தோடு, ஒரு பொய்யான புகாரைப் பதிவு செய்தான். பில்கிஸ் பானுவைப் பரிசோதித்த மருத்துவர்களும், சம்பவம் நடந்த தேதி/நேரம், காயங்கள் பற்றிய குறிப்புகள் இன்றி, மொன்னையான அறிக்கையைத் தயார் செய்தனர். ''குற்றவாளிகளை அடையாளம் காட்ட முயற்சி செய்தால், விஷ ஊசி போட்டுக் கொலை செய்து விடுவோம்'' என போலீசாரால் பில்கிஸ் பானு மிரட்டப்பட்டார்.

இந்து மதவெறி பயங்கரவாதத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்காக நடத்தப்பட்ட கோத்ரா முகாமில், பஞ்சமஹால் மாவட்ட ஆட்சியர் ஜெயந்தி ரவியைச் சந்தித்த பில்கிஸ் பானு, தனது குடும்பப் பெண்கள் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டதையும்; தனது குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களும், சிறுவர்களும், தனது பெண் குழந்தையும் கொடூரமாகத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதையும்; குற்றவாளிகளை அடையாளம் காட்டக் கூடாது என போலீசாரால் தான் மிரட்டப்பட்டதையும் கூறினார். இந்து மதவெறியர்கள் நடத்திய தாக்குதலில் தப்பிப் பிழைத்த பில்கிஸ் பானுவின் இரண்டு உறவினர்களும் சாட்சியம் அளித்தனர். இதனையடுத்து இச்சம்பவம் பற்றி மீண்டும் போலீசு விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது.

எனினும், அவ்விசாரணை ஏனோ தானோவென்றே நடத்தப்பட்டு, ஒப்புக்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. குற்றவாளிகள் மிக விரைவாகவே பிணையில் விடப்பட்டனர். இவ்வழக்கின் முக்கிய சாட்சியான பில்கிஸ் பானு பல வழிகளில் மிரட்டப்பட்டதால், அவர் தலைமறைவாகப் போக நேர்ந்தது. குஜராத் படுகொலை தொடர்பான நூற்றுக்கணக்கான வழக்குகளைச் சாட்சியம் இல்லை என்று கூறி மோடி அரசு கைகழுவியபோது, கும்பலோடு கோவிந்தாவாக பில்கிஸ் பானு வழக்கையும் கைவிட்டது.

இதனை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார், பில்கிஸ் பானு. உச்சநீதி மன்றம், இவ்வழக்கை மீண்டும் புலன் விசாரணை செய்யுமாறு சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டது. சி.பி.ஐ. நடத்திய புலன் விசாரணையின் அடிப்படையில் அகமதாபாத் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்குத் தொடரப்பட்டது. ''சாட்சிகள் தொடர்ந்து மிரட்டப்படுவதால், இவ்வழக்கு குஜராத்தில் நடந்தால் நீதி கிடைக்காது; எனவே, வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டும்'' எனக் கோரி உச்சநீதி மன்றத்தில் மீண்டும் வழக்குத் தொடுத்தார், பில்கிஸ் பானு. இதனையடுத்து, இவ்வழக்கு மும்பய்க்கு மாற்றப்பட்டது.

மும்பய் குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடந்து வந்த இவ்வழக்கில், 20 பேர் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுள் இரண்டு மருத்துவர்கள், ஐந்து போலீசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏழுபேர் நிரபராதிகளாகத் தற்பொழுது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுதே குற்றவாளி ஒருவர் இறந்து போனதால், மீதி 12 பேரில் 11 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும்; பில்கிஸ் பானு அளித்த புகாரைப் பதிவு செய்ய மறுத்த போலீசு கான்ஸ்டபிள் சோமபாய் கோரிக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

•••

**பி**ல்கிஸ் பானுவின் விடாப்பிடியான போராட்டத்தின் காரணமாகத்தான் இத்தீர்ப்பு கிடைத்திருக்கிறதே யொழிய, நீதிமன்ற முனைப்பின் காரணமாக இந்தச் சிறிய வெற்றிக் கிடைக்கவில்லை. இந்து மதவெறிக் கும்பல் இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களை, தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தி, பக்கத்தில் இருந்த காட்டுப்பகுதிக்குக் கொண்டு சென்று புதைத்துவிட்டது. பில்கிஸ் பானுவின் மகள் சஹேலாவின் சடலம் எங்கோ மாயமாய் மறைந்து போனது. இதனைக் காட்டி, இப்படிப்பட்ட சம்பவமே நடக்கவில்லை என இந்து மதவெறிக் கும்பல் வாதாடியது.

பில்கிஸ் பானுவின் உறவினர்களின் சடலங்களை இரண்டாம் முறை பிரேதப் பரிசோதனை செய்வதற்காக சி.பி.ஐ., தோண்டியெடுத்த பொழுது, அச்சடலங்கள் தலையற்ற முண்டங்களாக இருந்தன. சடலங்களை அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காகவே, அவ்வுடல்களில் இருந்து தலைகள் ''மர்மமான'' முறையில் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. சடலங்கள் விரைவாக அழுகிப் போய்த் தடயங்கள் மறைந்து போய்விடவேண்டும் என்பதற்காகவே, சடலங்களின் உடம்பு முழுவதும் உப்பு தடவப்பட்டிருந்தது.

தாக்குதல் தொடர்பான முக்கியமான சாட்சியங்கள் அனைத்தும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுவிட்ட நிலையில்,

www.padippakam.com

பில்கிஸ் பானு மற்றும் அச்சம்பவத்தில் தனது தாயைப் பறி கொடுத்த மற்றொரு சிறுவனின் வாக்குமூலங்கள்தான், இவ்வழக்கிற்கே உயிர்நாடியாக இருந்தன. பெஸ்ட் பேக்கரி வழக்கின் முக்கிய சாட்சியான ஷஹீரா ஷேக்கை மிரட்டிப் பணிய வைத்ததைப் போல, பில்கிஸ் பானுவையும் மிரட்டிப் பணிய வைக்க முயன்றது, இந்து மதவெறிக் கும்பல். இதற்கெல்லாம் அஞ்சி விடாத பில்கிஸ் பானு, கடந்த ஆறாண்டுகளாகத் தலைமறைவாக வாழ்ந்து கொண்டே, வழக்கையும் நடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

குற்றவாளிகளுக்குத் தூக்கு தண்டனை தர மறுத்துவிட்ட நீதிமன்றம், அதனை நியாயப்படுத்த, ''அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே தூக்கு தண்டனை வழங்க முடியும்; இக்குற்றவாளிகளுள் யார் யார் என்னென்ன குற்றங்களைச் செய்தார்கள் என்பது தெளிவாக நிரூபிக்கப்படவில்லை'' என்று கூறியிருக்கிறது.

குஜராத்தில் இந்து மதவெறி பயங்கரவாதிகள் நடத்திய கலவரத்தில், ஏறத்தாழ 2,000-க்கும் மேற்பட்ட அப்பாவி முசுலீம்கள், வக்கிரமான முறையில் தான் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது வெட்ட வெளிச்சமான பிறகும், நீதிமன்றம் பில்கிஸ் பானு வழக்கை ஏதோ தனித்ததொரு சம்பவமாகப் பிரித்துப் பார்த்திருப்பதே நாணயக்கேடானது. மேலும், இந்து மதவெறியர்கள் ஒவ்வொரு கலவரத்திலும், ''கும்பலாகச் சென்று முசுலீம்களைத் தாக்குவது; முசுலீம் பெண்களைப் பாலியல் பலாத்காரப்படுத்துவது'' என்பதை ஒரு உத்தியாகவே செயல்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில், ''இந்து மதவெறிக் கும்பல் எப்படிப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும் அவர்களின் உயிரை நீதிமன்றம் பறித்து விடாது'' என்று உத்தரவாதமளிப்பதாகவே, இத்தீர்ப்பு அமைந்துள்ளது.

குண்டு வைக்கும் முசுலீம் பயங்கரவாதிகளுக்கு சர்வ சாதாரணமாகத் தூக்கு தண்டனை அளிக்கும் இந்திய நீதித்துறை, கும்பல் வன்முறையில் ஈடுபடும் இந்து மதவெறி பயங்கரவாதிகளுக்குத் தண்டனை அளிக்கும் போதோ, ''நிதானமாக'' நடந்து கொள்கிறது. இந்திய நீதிமன்றங்களிடம் காணப்படும் இந்தக் காவிப் பாசத்தை நிரூபிப்பதற்கு ஏராளமான தீர்ப்புகளை ஆதாரமாகக் காட்ட முடியும்.



**குஜராத் படுகொலை தொடர்பாக 1,600 வழக்குகள் பதிவாகியுள்ளன. சங்கப் பரிவார அமைப்புகளைத் தடை செய்வதோடு, இவ்வழக்குகளை விசாரிக்க, நூரம்பர்க் விசாரணை போன்ற சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தால் தான், பாதிக்கப்பட்ட முசுலீம்கள் அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்ய முடியும்.**

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இரண்டு மருத்துவர்களும், ஐந்து போலீசு அதிகாரிகளும், ''தங்களின் கடமையை முறையாகச் செய்யாமல், நடந்த குற்றத்தை மூடி மறைத்து, இந்து மதவெறி பயங்கரவாதிகளுக்கு உதவியிருக்கிறார்கள்'' என நீதிமன்றமே ஒத்துக் கொண்ட பிறகும், ''அவர்களுக்கு இச்சதிச் செயலில் பங்கில்லை'' என்ற காரணத்தைக் ''கண்டுபிடித்து'' அவர்களை விடுதலை செய்திருக்கிறது. காவிமயமாகி வரும் இந்திய அதிகார வர்க்கத்திற்கு, இதைவிட இனிப்பான தீர்ப்பு வேறெதுவும் இருக்க முடியாது.

இவர்களின் விடுதலையை எதிர்த்து மோடி அரசு மேல் முறையீடு செய்ய வேண்டும் எனக் கோரியிருக்கிறார் பில்கிஸ் பானு. இந்தக் கோரிக்கை மோடிக்கு மட்டுமல்ல, ''மோடியை இந்து மதவெறியன் அல்ல'' எனச் சப்பைக் கட்டு கட்டும் ''சோ'' போன்ற நயவஞ்சகப் பேர்வழிகளுக்கும் விடப்பட்டுள்ள சவால்.

●●●

தீர்ப்பு வெளிவந்த பிறகும், தான் தொடர்ந்து மிரட்டப்படுவதாகக் கூறியிருக்கும் பில்கிஸ் பானு, ''இத்தீர்ப்பு முசுலீம்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து விடும் என நான் கருதவில்லை'' எனப் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்துள்ளார். தீர்ப்பு வெளிவந்த நாளன்று, ரந்திக்புர் கிராமத்தைச் சேர்ந்த 60 முசுலீம் குடும்பங்கள் தங்களின் பாதுகாப்பு கருதி, கிராமத்தைவிட்டு வெளியேறி விட்டனர்.

இந்து மதவெறியர்களைத் தெருவில் எதிர்த்து நின்று போராடக் கூடிய வலிமை கொண்ட ஜனநாயக இயக்கங்கள் இல்லையென்றால், நீதிமன்றத் தீர்ப்புகளால் முசுலீம்களைப் பாதுகாத்து விட முடியாது என்பதை அவர்கள் உணர்ந்திருப்பதையே இவ்வெளியேற்றம் எடுத்துக் காட்டுகிறது. உண்மை இப்படியிருக்க, முதலாளித்துவப் பத்திரிகைகளோ, இத்தீர்ப்பைக் காட்டி, ''சட்டத்தின் மூலமே இந்து மதவெறியர்களைத் தண்டித்து விட முடியும்'' என்ற மாயையைப் பரப்பி வருகின்றனர்.

குஜராத் படுகொலை தொடர்பான 1,600 வழக்குகள் கடந்த ஆறாண்டுகளாக விசாரணை நிலையிலேயே உள்ளன. பில்கிஸ் பானுவைப் போல, எத்தனை சாட்சிகளால், தலைமறைவாக வாழ்ந்து கொண்டு, இந்து மதவெறியர்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றுவிட முடியும்?

இரண்டாம் உலகப் போரில் யூதர்களுக்கு எதிராக நாஜிகள் நடத்திய இனப் படுகொலையை விசாரிக்க நூரம்பர்க் நீதிமன்றம் அமைக்கப்பட்டதைப் போல, குஜராத் படுகொலையை விசாரிக்கவும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்; இப்படுகொலையை நடத்திய சங் பரிவார அமைப்புகள் அனைத்தும் தடை செய்யப்பட வேண்டும். இதன் மூலம் மட்டும்தான், பாதிக்கப்பட்ட முசுலீம்கள் அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்ய முடியும்.

ஆனால், இந்தியக் 'குடியரசோ' இதனைச் செய்ய மறுத்து வருகிறது. எனவே, பில்கிஸ் பானு போராடி பெற்ற இத்தீர்ப்பை, மதச்சார்பின்மைக்குக் கிடைத்த வெற்றியாக இந்திய ஆளும் கும்பல் கொண்டாடத் துடிப்பதை நாம் அனுமதிக்கக் கூடாது.

● அழகு

www.padippakam.com

# காவிமயமாகும் சி.பி.எம்.

## கம்யூனிசத்திற்கு மட்டுமல்ல, நாத்திகக் கொள்கைகளைக் கூடக் கைகழுவிவிட்டது, சி.பி.எம்.

தமிழ்நாட்டில் இருக்கும் சி.பி.எம். அணியினர் இனிமேல் இருமுடி கட்டிக் கொண்டு ''சாமியே சரணம் அய்யப்பா'' என கோசமிட்டபடியே சபரிமலை ஏறலாம். செய்வினை, பில்லி-சூனியம் வைப்பதற்கென்றும் குறி சொல்வதற்கென்றும் தனிப்பிரிவை கட்சியே இனி அமைக்கலாம். எல்லாவற்றிற்கும் ''கேரளத்தைப் பார்'' என நமக்கு வழிகாட்டும் இவர்களது கேரள சி.பி.எம். கட்சி காட்டும் பாதை அப்படித்தான் உள்ளது.

சென்ற டிசம்பர் மாதம் 30-ஆம் தேதியன்று சபரிமலையில் தேவசம் போர்டால் கட்டப்பட்ட மருத்துவமனையைத் திறந்து வைக்கச் சென்ற கேரள முதல்வர் அச்சுதானந்தன் 6 கி.மீ. வரை பாதயாத்திரையாகவே நடந்து மலை ஏறியுள்ளார்.

கால்நடையாக நடக்கும் பக்தர்களின் சிரமத்தை அறிந்து கொள்ளத்தான் 'காம்ரேட்' நடந்து சென்றதாக இச்செயலை நியாயப்படுத்துகின்றனர். அவருக்கு அப்படியே தீக்குழி இறங்குவதன் வேதனையையும், வேப்பிலை கட்டி கையில் தீச்சட்டி எடுப்பதன் மகிமையையும் அறிந்து கொள்ளக் கோரி யாராவது ஆலோசனை சொன்னால் பொருத்தமாயிருக்கும். எப்படியும் அடுத்த ''பொலிட் பீரோ'' கூடும் முன்பே செய்து முடித்து விடுவார்.



கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை எனச் சரணம் போடாத குறையாக, தனது பரிவாரங்களோடு சபரிமலைக்குச் செல்லும் கேரள சி.பி.எம். முதல்வர் அச்சுதானந்தன் (வலமிருந்து மூன்றாவது).

மருத்துவமனையைத் திறக்கத்தான் சென்றார் என்றால், அதனை ஒரு ரிப்பன் வெட்டியே செய்திருக்க முடியும். ஆனாலும் ''கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை'' எனப் பாடாத குறையாக நடந்த தோழர், கேரள வகைக் குத்துவிளக்கை ஆன்மீக முறைப்படி ஏற்றிவைத்து, அய்யப்பன் கோவிலுக்கு வந்த முதல் 'கம்யூனிஸ்ட்' தலைவராகி இருக்கிறார்.

அங்குள்ள அய்யப்பன் கோவிலில் வெடி வெடித்தும் வழிபட்டிருக்கிறார் 'தோழர் அச்சு சுவாமி'. இவரை இனி 'தோழர்' என்று அழைப்பதா, 'குருசாமி தோழர்' என்று அழைப்பதா என்று சி.பி.எம்.காரர்கள் விவாதித்துக் கொண்டுள்ளார்களாம்!

சிறு குழந்தைகளைப் பார்ப்பன முறைப்படி பள்ளிக்கூடங்களில் சரஸ்வதி பூசை அன்று சேர்க்கும்போது, மந்திரங்கள் ஓதி குழந்தையின் நாக்கில் எழுதிடும் 'அட்சர' பூசைச் சடங்கையும் ஏற்கெனவே நடத்தியவர்தான் அச்சுதானந்தன்.

இவர் மட்டும் என்றில்லை. இவருக்கு எதிராக செயல்படும் பினாரயி விஜயன் கோஷ்டியும் மூடநம்பிக்கையில் மூழ்கி முத்தெடுப்பவர்கள்தான். சென்ற ஆண்டு விஜயனின் குடும்பத்தினர் அவரது மகன் தலைமையில் இரகசியமாக 'சத்ரு சம்கார' பூசை ஒன்றை அச்சுதானந்தனுக்கு எதிராக நடத்தி இருக்கின்றனர். தனக்கு வேண்டாத ஒருவனை இப்பூசை மூலம் சாகடித்து விட முடியும் என்ற பார்ப்பன நம்பிக்கை கேரளத்தில் நிலவுகிறது. அதற்காகத்தான் இந்த 'சிவப்புப் பூசை'!

அச்சுதானந்த சுவாமியின் குருசாமியான மறைந்த இ.எம்.எஸ். நம்பூதிரிபாடோ, பழனிக்கு பாதயாத்திரை வந்தவர்தான். சோம்நாத் சாட்டர்ஜி உள்ளிட்ட முன்னணியினர் பலரும் பூணூல் பூசை நடத்தி பார்ப்பனியத்திற்கு பாதபூசை செய்பவர்கள்தான்.


கேரளத்தில் பத்தாண்டுகளுக்கு முன்னர் வரை ஓட்டுக்காக இந்துவெறி ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிராக சி.பி.எம். இளைஞர் அமைப்பினர் களத்தில் இறங்கித் திரும்பித் தாக்கிடும் அளவிற்கு செயல்பட்டிருக்கின்றனர். இன்று நிலைமை மாறி இருக்கின்றது. இன்றோ இந்து மதவெறியுடன் அனுசரித்துப் போகின்றது கட்சியின் தலைமை. அதனால்தான் இன்றைக்கு வெளிப்படையாகவே அச்சுதானந்தன் தனது பக்தியை ஊரறியச் செய்கிறார்.

சபரிமலை தந்திரி கண்டரேரு மோகனருவின் காம வெறிக் களியாட்டங்கள் புழுத்து நாறியபோதும் அவர் சம்பந்தப்பட்ட வழக்குகளை அப்படியே அமுக்கி விட்டது போலி கம்யூனிஸ்ட் அரசு. அவ்வளவு பக்தி! இப்போது பக்தி முற்றிப்போய், பக்தர்களுக்கு இடையூறாக இருக்கக் கூடாதென்று, சபரிமலைக் கோவில் அமைந்திருக்கும் பத்தனம் திட்டா மாவட்டத்தில் மண்டல பூசை நடைபெறும் இரண்டு மாதங்களுக்கு எவ்வித ஆர்ப்பாட்டமோ அரசியல் இயக்கங்களோ நடத்தமாட்டோம் என்று பா.ஜ.க.; காங்கிரசுக் கட்சியுடன் சேர்ந்து சி.பி.ஐ., சி.பி.எம். கட்சியினரும் மாவட்ட ஆட்சியரிடம் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து அதனை நடைமுறைப்படுத்தியும் உள்ளனர்.

மக்கள் போராட்டங்கள் அய்யப்பனுக்குச் சரணம். கட்சியோ தரகு முதலாளிகளுக்குச் சரணம். நல்ல முன்னேற்றம்தான்!

● சந்திரன்

www.padippakam.com



# ஜல்லிக்கட்டு: தமிழர்களின் பாரம்பரியமா? ஆதிக்கசாதி அடையாளமா?

ஜல்லிக்கட்டிற்கு அண்மையில் உச்சநீதி மன்றம் தடை விதித்ததும் தமிழர்கள் பொங்கியெழுந்து வீதிக்கு வந்து போராட்டம் நடத்தியதாகவும் பொது மக்கள் ஆத்திரமடைந்து கருப்புப் பொங்கலாக அறிவித்துப் பொங்கல் விழாக்களைப் புறக்கணித்து விட்டதாகவும் செய்தி ஊடகங்கள் பரபரப்பூட்டின.

முரட்டுத்தனமான இந்த விளையாட்டில், மனிதர்கள் மாண்டு போகும் கவலையைவிட, காளை மாடுகள் மீது கரிசனம் கொண்டு, ஜல்லிக்கட்டுக்குத் தடைகோரி சென்ற ஆண்டு ஜூலையில் விலங்கு நல வாரியம் உச்சநீதி மன்றத்தில் முறையிட்டது. இந்த வழக்கில் நீலச் சிலுவை சங்கமும் (புளு கிராஸ்) தன்னை இணைத்துக் கொண்டது.

வழக்கை விசாரித்து வந்த உச்சநீதி மன்றம், பொங்கலுக்கு ஒரு வாரம் முன்பாக ஜல்லிக்கட்டுக்குத் தடை விதித்துத் தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பில், ''ஜல்லிக்கட்டு போட்டியை அனுமதிக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் கூறவில்லை'' என்றும், ''அதேநேரத்தில் ரேக்ளா எனப்படும் மாட்டு வண்டிப் பந்தயத்தை நடத்த எந்தத் தடையுமில்லை'' என்றும் கூறியிருந்தது. உச்சநீதிமன்ற நீதிபதிகளிடம் ''ரேக்ளா பந்தயத்தை மட்டும் எந்தச் சட்டம் அனுமதிக்கிறது?'' என்று யாரும் கேட்கவில்லை.

ஜல்லிக்கட்டுக்குத் தடை வந்ததும் ஓட்டுக்கட்சிகள் அனைத்திற்கும் 'தமிழன் வீரம்' பற்றிய நினைப்பு வந்து,

www.padippakam.com

அறிக்கைகளால் பத்திரிகைகளை நிரப்பி விட்டன.

சி.பி.எம். கட்சியோ ''முழுமையான காவல்-பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து ஜல்லிகட்டு நடத்த அனுமதிக்க வேண்டும்'' எனக் கூறி, நிலப்பிரபுத்துவக் கலாச்சாரமான ஏறு தழுவுதலுக்கு ஆதரவாக வரிந்து கட்டியது. ஏகாதிபத்தியத்தைக் கட்டிக் காக்க நந்திகிராமம்! நிலப்பிரபுத்துவத்தைக் கட்டிக் காக்க அலங்காநல்லூர்! ஆனால், பெயர் மட்டுமோ 'கம்யூனிஸ்ட்' கட்சி!

பா.ம.க.வின் இராமதாசு, ''தமிழர்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் அழியாத சில அடையாளங்கள் இருக்கின்றன. அந்த அடையாளங்களை அழித்து விட அனுமதிக்கக் கூடாது'' என்று சீறினார். தமிழனின் நீரும் நிலமும், உழவும் நெசவும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களால் நாசமாக்கப்பட்டு, அவற்றின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு வரும் நிலையில், ஜல்லிக்கட்டுத்தான் தமிழனின் அழியாத அடையாளமாக இந்த மருத்துவருக்குத் தெரிகிறது.

ஓட்டுக்கட்சிகளும் ஊடகங்களும் உசுப்பேற்றியதும், ஜல்லிக்கட்டு போட்டியை ஆண்டுதோறும் நடத்திவரும் மதுரை - அலங்காநல்லூர், பாலமேடு வட்டார மக்கள், உச்சநீதி மன்றத் தடையைத் துச்சமாக மதித்து இவ்வாண்டும் ஜல்லிக்கட்டை நடத்தப் போவதாக அறிவித்தனர். ''காவிரி ஆற்று நீர் சிக்கலில் கர்நாடகமும், முல்லைப் பெரியாறு தாவாவில் கேரளமும் உச்சநீதி மன்றத் தீர்ப்பை மதிக்காத போது, நாங்கள் மட்டும் ஏன் தீர்ப்பை மதிக்க வேண்டும்?'' என்று நியாயவாதம் பேசினர்.

''அலங்காநல்லூர் வட்டாரத்தில் கருப்புக் கொடி ஏற்றினர். ரேசன் அட்டை, வாக்காளர் அடையாள அட்டைகளை அரசிடம் திருப்பிக் கொடுக்கப் போவதாக சுவரொட்டி ஒட்டியுள்ளனர். கருப்புப் பட்டை அணிந்து தொடர் உண்ணாவிரதம் இருந்தனர். மூன்று நாட்களாகக் கடைகள் அடைக்கப்பட்டன'' என்றெல்லாம் 'குமுறி எழுந்த தமிழர்களின் கோபாவேசத்தை' ஊடகங்கள் வர்ணித்தன.


ஓட்டுக் கட்சிகளும் ஊடகங்களும் ஊதிப் பெருக்குவது போல, ஜல்லிக்கட்டு என்பது ஒட்டுமொத்த தமிழர்களின் அடையாளமல்ல. தென்மாவட்ட ஆதிக்க சாதியினரின் சாதித் திமிரைப் பறைசாற்றும் ஓர் ஆதிக்கப் பண்பாட்டுச் சின்னம்தான். இது ஒட்டுமொத்தத் தமிழர்களின் அடையாளம் என்றால், ஏறு தழுவுதலில் தேவர் சாதிக்காரன் வளர்த்த காளையை அடக்கும் உரிமை தாழ்த்தப்பட்டோருக்கு ஏன் இல்லை? வாடிவாசல் முன் திரண்டு நிற்கும்

## தமிழர்களின் பாரம்பரிய வீரவிளையாட்டு:
# ஜல்லிக்கட்டா? மஞ்சு விரட்டா?

தமிழகத்தில் கி.மு. 1500 காலத்தில் (அதாவது, இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்பு) ''மஞ்சு விரட்டு'' அல்லது ''எருது கட்டுதல்'' என்ற வீர விளையாட்டே பாரம்பரியமாக நிலவியது. பொங்கல் விழாக்களின் போது காளைகள் நெடுஞ்சாலைகளில் அவிழ்த்து விடப்பட்டு, கிராமத்து இளைஞர்கள் அவற்றை விரட்டிக் கொண்டு ஓடுவர். சாலையின் இருமருங்கிலும் மக்கள் திரண்டு ஆரவாரிப்பர். அப்பந்தயத்தில் முதலில் வந்து வெற்றிபெறும் வீரருக்குப் பரிசளிக்கப்படும். இதில் மாடுகளுக்கோ மனிதர்களுக்கோ காயமேற்படாது.

நீண்ட நெடுங்காலமாக தமிழர்களின் பாரம்பரியமாக நிலவி வந்த ''மஞ்சு விரட்டு'', ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்பு நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் மாட்டை அடக்கும் ஜல்லிக்கட்டாக மாறியது. நாயக்கர் ஆட்சியில் படிப்படியாக ஜமீன்தாரி முறை உருவாகி வந்தது. ஜமீன்தார்கள் தமது ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் பறைசாற்றும் அடையாளமாக உருவாக்கியதுதான் ஜல்லிக்கட்டு. ஜமீன்தார்களே ஜல்லிக்கட்டு காளைகளை வளர்த்து, அதை யாராலும் அடக்க முடியாது என்று வீரப் பெருமை பேசினர். மாடுகளின் கொம்புகளில் தங்கக் காசுகளைப் பையில் போட்டுக் கட்டி, அதை அடக்குவோருக்கு அப்பரிசுத் தொகை வழங்கப்படுவதாக அறிவித்தனர். ஜமீன்தார்களின் ஆதிக்கம், சாதி ஆதிக்கமாகவும்; காளையை அடக்கும் வீரம், தாழ்த்தப்பட்ட சாதியினரை ஒடுக்கும் வீரமாகவும் வேர் விட்டது.

இந்த உண்மைகளை தொல் ஓவிய வரலாற்றாளரான காந்திராஜனும், சென்னை கவின்கலைக் கல்லூரி முதல்வரான பேராசிரியர் சந்திரசேகரனும் வெளிக் கொணர்ந்துள்ளனர். நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகிலுள்ள கருக்கியூர் குன்றில் ஏறத்தாழ 3500 ஆண்டுகளுக்கு முந்தைய ஓவியத்தில் காணப்படும் மஞ்சு விரட்டு காட்சியையும், மதுரை - திண்டுக்கல்லுக்கிடையே கல்லூத்து மேட்டுப்பட்டியிலுள்ள தொன்மை வாய்ந்த குகை ஓவியத்தையும் ஆதாரமாகக் காட்டி, மஞ்சு விரட்டுதான் தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டாகத் திகழ்ந்ததை வரலாற்று அறிவியல் முறைப்படி நிரூபித்துள்ளனர்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகில் உள்ள கருக்கியூர் குன்றில் ஏறத்தாழ 3,500 ஆண்டுகளுக்கு முந்தைய ஓவியத்தில் காணப்படும் மஞ்சு விரட்டு காட்சி: மஞ்சு விரட்டு அல்லது எருது கட்டுதலே தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு என்பதற்கான சான்று.

www.padippakam.com

இளைஞர்கள், சாதி அடையாளத்தைக் குறிக்கும் மஞ்சள் நிறச் சீருடையை அணிவது ஏன்? தாழ்த்தப்பட்டோர் தாங்களாகவே தனியாக ஜல்லிக்கட்டு நடத்தினால் இவர்கள் ஏற்றுக் கொள் வார்களா? ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்காமல் தொடர்ந்து நடத்தக்கோரி நீதிமன்றம் சென்றவர்களில் பலரும் தேவர் சாதித் தலைவர்களாகவே உள்ள னரே, அது ஏன்?

''யார் தடுத்தாலும் நாங்கள் ஜல்லிக் கட்டை நடத்தியே தீருவோம்; ஜல்லிக் கட்டு என்பது வீரத்தின் அடையாளம்'' என்று மீசையை முறுக்குபவரோ ஜல் லிக்கட்டு பாதுகாப்புக் கழகம் எனும் லெட்டர்பேடு தேவர்சாதி அமைப்பின் தலைவரான செந்தில் தொண்டைமான். இன்னொருவர், அமைச்சர் சுப.தங்க வேலனின் பேரனும், தேவர் சாதிய அடையாளத்துடன் தனக்குத்தானே கட்-அவுட் வைத்துக் கொள்ளும் கருப் புப் பண சினிமா நடிகனும்; 'தமிழர் வீர விளையாட்டுப் பாதுகாப்புக் குழு'வின் தலைவருமான ஜே.கே. ரித்தீஸ். ஜல் லிக்கட்டை நடத்தாவிட்டால், 'தெய்வக் குற்றம்' ஏற்பட்டுவிடும் என்று கூறி, தடையை மீறி சிவகங்கை மாவட்டம் எம்.சூரக்குடியில் ஜல்லிக்கட்டு போட் டியை நடத்தியதற்காகக் கைது செய்யப் பட்ட நாட்டாமைகளும் தேவர் சாதிக் காரர்களே.

ஜல்லிக்கட்டு என்பதை தேவர் ஜெயந்திக்கு இணையான சாதிய ஆண வச் சின்னமாகத்தான் தேவர் சாதியினர் பார்க்கின்றனர். ஜல்லிக்கட்டினைப் பாரம்பரியமாக நடத்திவரும் இந்த ஆதிக்க சாதியினர், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் எங்களைப் பாதிக்கின் றது என்று கூடப் பேரணி நடத்தியிருக் கின்றனர். காளைகளிடம் மட்டும் தானா இவர்கள் விளையாடியிருக்கின் றனர்? மேலவளவு முருகேசனின் தலை யைச் சீவி, சாதிவெறியோடு மீசையை முறுக்கி கோரத் தண்டவமும் ஆடியி ருக்கின்றனர். இருப்பினும், தேவர் சாதி யினரின் குல தெய்வமான முத்துராம லிங்கத் தேவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடச் சொன்ன 'சேரிப்புயல்' தொல்.திருமா இதுவும் போதாதென்று, ''ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடை யானது, இந்த விளையாட்டைப் பாரம் பரியமாக நடத்திவரும் மக்களை இழி வுபடுத்துவதாக உள்ளது'' என்று வேத னைப்படுகிறார்.

ஓட்டுக்காக இக்கட்சிகள் இருவிழி சிவந்து கனற்பொறி தெறிக்க பத்திரிக் கைகளில் அறிக்கைகளை வெளியிடு வது ஒருபுறமிருக்க, 400 ஆண்டுகளாக இவ்வீர விளையாட்டு பாரம்பரியமாக நடந்து வருவதாக தமிழக அரசே உச்ச நீதி மன்றத்தில் தெரிவித்திருக்கிறது.

ஏறு தழுவுதல் மட்டும்தான் பாரம்ப ரியமாக வந்ததா? சாதி-தீண்டாமை, வலங்கை-இடங்கை வெறியாட்டங்கள் கடப் பாரம்பரியமாக வந்தவைதான். அதற்காக அவற்றையெல்லாம் ஆத ரிக்க முடியுமா? பாரம்பரியமாக நீடித் துவந்த பொட்டுக் கட்டுதலைச் சட்டம் போட்டுத் தடுக்க முற்பட்டபோது, பார்ப்பன-ஆதிக்க சாதியினர் பதறிய தைப் போலத்தான் இருக்கிறது, சாதி வெறியை மறைத்துக் கொண்டு 'தமிழன் வீரம்', 'பாரம்பரியம்' எனப் பூசி மெழு கிடும் வாதமெல்லாம்.

பா.ஜ.க.வின் இல.கணேசன், அகண்ட பாரதத்திலிருந்து இறங்கி வந்து 'தமிழரின் பாரம்பரியம்' பற்றி அங்கலாய்க்கிறார். ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து சிவ சேனா குண்டர்களோ மதுரையில் ரயில் மறியல் செய்கின்றனர். அதேசமயம், தடை கோரி வழக்கு போட்ட விலங்கு நல வாரியத்தை, பா.ஜ.க.வோ, சிவசே னாவோ எதிர்க்கவில்லை. ஏனெனில், இதே விலங்கு நல வாரியம்தான் 'கோ சாலை'களை (பசு பாதுகாப்பு மையம்) நவீனப்படுத்த நிதியுதவி செய்கிறது. பசு வதை கூடாது என்று சீறும் இந்த இந்து வெறிக் கட்சியினர்தான், காளைகளின் கண்களில் எலுமிச்சை சாறையும் மிளகாய்ப் பொடியையும் தூவி நடத்தப் படும் காளை வதை 'பாரம்பரிய' ஜல் லிக்கட்டுக்காக வரிந்து கட்டுகின்றன.

இவை ஒருபுறமிருக்க, உச்சநீதி மன் றத்துக்கு காளைகள் மீது திடீர்க் கரி சனை ஏன்? ''இது காட்டுமிராண்டித்த னமான விளையாட்டு; இதனால் பல ருக்குப் படுகாயங்களும் ஒரு சிலர் பலி யாவதும் நடக்கிறது'' என்று அது நியாய வாதம் பேசுகிறது. ஜல்லிக்கட்டு காட்டு மிராண்டித்தனமானது என்றால், அதை விடக் காட்டுமிராண்டித்தனமான சாதி யும் தீண்டாமையும் தலைவிரித்தாடுவ தைத் தடுக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுக்காதது ஏன்? பாசிச ஜெயா ஆடு-கோழி வெட்டத் தடை விதித்து கிராமக் கோயில்களைப் பார்ப்பனமய மாக்க முயற்சித்தார் என்றால், நீதிமன் றமோ ஜல்லிக்கட்டு போட்டியை உலக மயமாக்கலுக்கு ஏற்ப மறுவார்ப்பு செய்ய முயற்சிக்கிறது. அதனால்தான் முதலில் தடை விதித்துவிட்டு பின்னர் எட்டுக் கட்டுப்பாடுகளை விதித்து, ஜல் லிக்கட்டை நடத்த அனுமதித்துள்ளது.

''ஜல்லிக்கட்டை மனிதத்தன்மை கொண்டதாகவும், நாகரீகமான முறை யில் நடத்தப்படும் நிகழ்ச்சியாகவும் மாற்றப்பட வேண்டும்'' என்று உத்தர வில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகம், நீதி மன்றத்திற்கு வேறு உள்நோக்கம் இருப் பதை உணர்த்துகிறது. இதற்கேற்ப மதுரை மாவட்ட ஆட்சியரும், ''ஜல்லிக் கட்டை முறைப்படுத்தி நடத்திட அரசு விரைவில் அவசரச் சட்டம் பிறப்பிக்க வுள்ளதாக'' அறிவித்துள்ளார்.

இந்த அவசரச் சட்டம் எவ்வாறு இருக்கும்? உலகமயமாக்கலுக்கு ஏற்ப ஜல்லிக்கட்டு போட்டியை மாற்றிய மைக்கும் வகையிலே இருக்கும். ''இந்த நிகழ்ச்சியை உங்களுக்கு வழங்குபவர் கள் கோக்'' என தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரம் போல, இனி அலங் காநல்லூர் ஜல்லிக் கட்டை வழங்குவது பெப்சி, டாடா என்று மாற்றப்படலாம். ''சென்னை சங்கமம்'' போல, 'நாட்டுப் புறக் கலை மற்றும் விளையாட்டுக்க ளைப் பாதுகாத்து வளர்த்திட ஃபோர்டு பவுண்டேசன், பில்கேட்ஸ் பவுண்டே சன் என அனைத்து ஏகாதிபத்திய நிறுவ னங்களும் தரகு முதலாளிகளும் தயா ராகவே உள்ளனர். இதனால்தான் நீதி மன்றம் ஜல்லிக்கட்டை ஒழுங்குபடுத்தி 'மனிதத்தன்மை - நாகரிகம்' கொண்ட தாக மாற்றச் சொல்கிறது.

இதன்படி, இனி வாடிவாசல் ''பெப்சி'' வாசலாகலாம். ''நைக்'' பனி யன் அணிந்த ஜல்லிக்கட்டு வீரர்கள், ''கோக்''கைப் புரவலராகக் கொண்ட மாட்டையும், ரிலையன்ஸ் பிரஷ் வளர்த்த மாட்டையும் அடக்கும் வீர விளையாட்டை தொலைக்காட்சிகள் ஒளிபரப்பலாம்.

இவை மிகைப்படுத்தல்கள் அல்ல. ஏற்கெனவே ''சென்னை சங்கமம்'' நிகழ்ச்சிகள் நடந்த விதத்தைப் பார்த் தாலே இதனைப் புரிந்து கொள்ள முடி யும். சென்னை சங்கமம் நிகழ்ச்சிகளை பன்னாட்டு - தரகு முதலாளித்துவ நிறு வனங்கள் தத்தெடுத்துக் கொள்ள, இந் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளில் தமி ழர்களின் பாரம்பரிய உணவுகள் விற் கப்பட்டதைப் போல, கடைசியில் தமி ழர்களின் 'பாரம்பரிய' ஜல்லிக்கட்டும் உலகமயமாக்கலுக்கு ஏற்ப மறுவார்ப்பு செய்யப்பட்டு வருகிறது.

• இரணியன்

www.padippakam.com

# மலேசியா:
# தமிழர்களின் உரிமைப் போராட்டம்

மலேசியாவில் கடந்த இரு மாதங்களாக இந்திய வம்சா வளித் தமிழர்கள் தமது உரிமைகளுக்காக நடத்திவரும் போராட்டம், மலேசியாவில் நிலவும் இனப் பாகுபாட்டை யும் அடக்குமுறையையும் உலகிற்கு நிரூபித்துக் காட்டி விட்டது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், தோட்டத் தொழிலில் ஈடு படுத்துவதற்கென்று தமிழகத்திலிருந்து தமிழர்கள் மலேசியா வுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். காடுகளைத் திருத்தி ரப்பர் தோட்டங்களாக மாற்றி மலேசியாவின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர்கள் தமிழர்களே. 1957-இல் மலேசியா பெயரளவிலான சுதந்திரமடைந்த போது, அரசியல் சட்ட வரைமுறைகளுக்காக ரீட் என்பவர் தலைமையில் பிரிட்டிஷ் அரசு ஒரு கமிசன் அமைத்தது. அதில் தமிழர்கள் சார்பில் சமத்துவ உரிமைகளுக்காக வைக் கப்பட்ட கோரிக்கைகளைப் பிரிட்டிஷ் அரசு புறக்கணித்து விட்டது.

மலேயரும் தமிழரும் சீனரும் கொண்ட மலேசியாவில் 1970-களிலிருந்து மண்ணின் மைந்தர் கொள்கை பின்பற்றப் பட்டு, மலாய்காரர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்கும் சட்டமியற்றப்பட்டு, தமிழர்களும் சீனர்களும் இரண்டாம்தர குடிமக்களாக்கப்பட்டனர். காலனியாதிக்கத்திற்கெதிராகச் செம்படைகளைக் கட்டி ஆயுதப் போராட்டம் நடத்திய மலே சியக் கம்யூனிஸ்டுக் கட்சி தடைச் செய்யப்பட்டு, கம்யூனிஸ் டுகள் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டனர். தொழிற்சங்க உரி மைகள் பறிக்கப்பட்டன. பாசிச சர்வாதிகார பிரதமர் மகாதிர் முகம்மது, மலேசியாவை இஸ்லாமிய நாடாக அறிவித்தார். மலாய் மொழியே ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. அதற்கடுத்த நிலையில் ஆங்கிலம்தான் அரசின் செல்வாக் கைப் பெற்றுள்ளது. தமிழ், அலுவல் மொழியாகக்கூட இல்லை. தமிழ் புறக்கணிக்கப்படுவதால் தமிழ்ப் பள்ளிகூடங் கள் மதிப்பிழந்துள்ளதோடு, அரசு போதிய நிதியுதவி செய் யாததால் படிப்படியாக மூடப்பட்டு வருகின் றன. 'மண்ணின் மைந்தர்' சட்டப்படி, சீனரோ தமிழரோ வெளிநாட்டினரோ மலேசியாவில் தொழில் தொடங்கினால், மலேயாக்காரர் களுக்கு 30% பங்கு மூலதனமும், ஊழியர் களில் 30% மலேயாக்காரர்களாகவும் இருக்க வேண்டும்.

காலனிய ஆட்சிக் காலத்தில் ரப்பர் தோட் டத் தொழிலாளியாக உரிமைகளற்ற அடிமை களாக உழன்ற தமிழர்கள், பின்னர் மகாதிர் முகம்மது ஆட்சிக் காலத்தில் ஏகாதிபத்திய மறுகாலனியாக்கத்திற்கேற்ப மேற்கொள்ளப் பட்ட பெருந்திட்டங்கள், பாமாயில் பண்ணை களால் ரப்பர் தோட்டத் தொழிலிலிருந்து பிடுங்கப்பட்டு மாற்று நிலமின்றி நகர்ப்புறங் களுக்கு விரட்டப்பட்டனர். இடம் பெயர்ந்த வர்கள் நகர்ப்புறத்தில் வேலையின்மையாலும், புதிய நிலை மைக்கேற்ப மாறிக் கொள்ள முடியாமலும் ஏமாற்றமும் விரக் தியும் அவர்களைக் கவ்வியுள்ளது. இதன் காரணமாக சம்சு (சாராயம்) மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையா வதும் சிலர் குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் தொடர்கிறது. இதனால் தமிழர்கள் என்றாலே மோசமானவர்கள், கிரி மினல்கள் என்ற தோற்றம் மலேசிய அரசால் உருவாக்கப் பட்டுள்ளது. அரசுத்துறைகள் மட்டுமின்றி, பொது இடங் களில் தமிழர்கள் மீதான அணுகுமுறை மோசமாக உள்ளது. தமிழர்களை ''கெலிங்'' என்று நாக்கூசும் கெட்ட வார்த்தை யால் மலேசியர்கள் அழைக்குமளவுக்கு அங்கே இனவெறி யூட்டப்பட்டுள்ளது.

குமுறிக் கொண்டிருந்த மலேசியத் தமிழர்கள், ''இன்று அனுபவிக்கும் புறக்கணிப்புக்கும் இன்னல்களுக்கும் பிரிட் டிஷ் அரசின் காலனியக் கொள்கையே காரணம்; அந்தக் குற் றத்துக்காக பிரிட்டிஷ் அரசு மலேசியத் தமிழர் ஒவ்வொருவ ருக்கும் ஏறத்தாழ எட்டேகால் கோடி ரூபாய் இழப்பீடாகத் தர வேண்டும்'' என்று கோரி பிரிட்டன் உயர்நீதி மன்றத்தில் சிவில் வழக்கொன்றை கடந்த 30.8.07 அன்று பதிவு செய்து, இதையொட்டி ஒரு லட்சம் தமிழர்கள் கையெழுத்திட்ட மனுவை பிரிட்டிஷ் மகாராணியிடம் சமர்ப்பிக்க மலேசிய பிரிட்டிஷ் ஆணையர் அலுவலகத்தை நோக்கி கடந்த நவம் பர் 25-ஆம் நாள் ஊர்வலம் நடத்தத் தீர்மானித்தனர்.

மலேசியாவில் எவ்வித ஊர்வலமோ, ஆர்ப்பாட்டமோ, பொதுக்கூட்டமோ நடத்த அனுமதியில்லாத 'ஜனநாயகம்' நிலவுவதால், தடையை மீறி பல்லாயிரக்கணக்கில் திரண்ட தமிழர்கள் மீது மிருகத்தனமான அடக்குமுறையை ஏவிய மலேசிய அரசு, தமிழர்களை அமைப்பாக்கிப் போராடி வரும் ''இந்து உரிமைகள் நடவடிக்கைப் படை'' (Hindraf)யின் முன்னணித் தலைவர்கள் ஐந்துபேரை ''இசா'' எனப்படும் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையி

இனப்பாகுபாடு - அவமதிப்புகளுக்கெதிராக பிரிட்டிஷ் ஆணையர் அலுவலகம் முன்பாக தமிழர்களின் ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com

லடைத்துள்ளது. நூற்றுக்கணக்கான தமிழர்கள் மீது பொய் வழக்குகள் சோடிக்கப்பட்டுள்ளன.

இவ்வளவுக்குப் பின்னரும், மலேசியத் தமிழர்கள் சமத்துவமாக நடத்தப்படுவதாகவும் ''ஹிண்ட்ராப்'' அமைப்பினர் சமய ஒற்றுமையைச் சீர்குலைப்பதாகவும், கூசாமல் புளுகிய மலேசிய இந்திய காங்கிரசின் தலைவரும் தமிழ் அமைச்சருமான டத்தோ சாமிவேலு அம்பலப்பட்டுத் தனிமைப்பட்டு போயுள்ளார். இதே கருத்தோடு, இஸ்லாமிய அரசை முட்டுக் கொடுத்து ஆதரிக்கும் இங்குள்ள சில இஸ்லாமிய அடிப்படைவாத பிற்போக்கு பத்திரிகைகள், இந்தியாவிலிருந்து மலேசியாவுக்கு சுற்றுலாப் பயணிகள் பெயரில் வரும் இந்துத்துவவாதிகள் ''ஹிண்ட்ராப்'' அமைப்பை நிறுவித் தூண்டிவிட்டுள்ளதாகக் கூசாமல் புளுகுகின்றன. இந்து பெயரில் போராடுகிறார்கள் என்பதாலேயே, தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தைப் புறக்கணித்துவிட முடியாது.

மலேசிய அரசின் அடக்குமுறைகளையும் பிழைப்புவாதிகளின் அவதூறுகளையும் துச்சமாக மதித்து தமிழர்கள் தொடர்ந்து அமைதியான முறையில் போராடி வருகின்றனர். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னணித் தலைவர்களை விடுவிக்கக் கோரி சிறப்புப் பிரார்த்தனைகள், மலேசிய அரசின் ஒடுக்குமுறையை எதிர்த்து கனடா வாழ் தமிழர்களின் ஆர்ப்பாட்டம், ஹிண்ட்ராப்-பின் தலைவர் வேதமூர்த்தி வெளிநாடுகளில் ஆதரவு திரட்டும் முயற்சிகள், தமிழக அரசியல் தலைவர்களின் கண்டன அறிக்கைகள் முதலானவற்றால் உலகின் கவனத்தை ஈர்ப்பதில், போராடிவரும் மலேசியத் தமிழர்கள் முதற்கட்ட வெற்றியைச் சாதித்துள்ளனர்.

அதேசமயம் மதச்சார்பின்மை, ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து இந்திய வம்சாவளியினரையும் மலேய, சீன உழைக்கும் மக்களையும் இந்நியாயமான போராட்டத்துக்கு ஆதரவாக அணிதிரட்டி எதிரிகளையும் துரோகிகளையும் தனிமைப்படுத்துவது மலேசியத் தமிழர்களின் உடனடிக் கடமையாகும். தற்போதைய முதற்கட்ட வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளவும் அடுத்தகட்ட வெற்றியை அறுவடை செய்யவும் இது மிகவும் அவசிய மாகும்.

● தனபால்

## தில்லைக் கோவில்

# தமிழை அரங்கேற்றுவோம்! தீட்சிதர்களை வெளியேற்றுவோம்!

தீட்சிதப் பார்ப்பனக் கும்பலின் திரைமறைவுத் தில்லுமுல்லுகள், நீதிமன்றத் தடையாணைகள் ஆகிய அனைத்தையும் மீறி முன்னேறிக் கொண்டிருக்கிறது சிற்றம்பல மேடையில் தமிழ் முழங்கும் போராட்டம். ''சிற்றம்பல மேடையில் தமிழ் பாடலாம்'' என்ற இந்து அறநிலையத்துறை ஆணையரின் உத்தரவுக்கு எதிராக, தமிழக அரசிடம் மேல்முறையீடு செய்திருக்கிறார்கள் தீட்சிதர்கள். ஆணை கிடைத்த மறுகணமே பாடத் தயாராகக் காத்து நிற்கிறார் முதியவர் ஆறுமுகசாமி. நீதிமன்றத்தில் மீண்டும் தடையாணை வாங்கத் தயாராக இருக்கிறார்கள் தீட்சிதர்கள்.

இந்த நெடிய போராட்டத்தின் இறுதிக் கட்டத்தைக் குறிக்கும் விதமாக ''தில்லைக் கோயிலில் தமிழ் முழங்குவோம்! தீட்சிதர் சொத்தல்ல தில்லைக் கோயில் - கோயிலை அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவோம்!'' என்ற முழக்கங்களின் கீழ் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சனவரி 26 அன்று சிதம்பரத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தியது. கூட்டத்தின் அவசியத்தையும், இதுநாள் வரை நடத்தப்பட்ட போராட்டங்களை விளக்கியும் தலைமையுரை ஆற்றினார், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் இராஜு. ''தீட்சிதர்களின் எடுபிடிகளாகச் செயல்படும் சிதம்பரம் போலீசு இனி ஆறுமுகசாமியைக் கைது செய்தால், அங்கே தமிழ் ஒலிக்கும் வரை மக்கள் கோயிலை விட்டு அகலக் கூடாது'' என்று மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

''பூணூலும் குடுமியும் அறுபடாமல் இருக்க வேண்டுமானால், தமிழ் பாடுவதைத் தடுக்காதே'' என்று தீட்சிதர்களை எச்சரித்தார், முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் வி.வி.சாமிநாதன்.

''ஏமாளி நந்தன் எரிக்கப்பட்ட காலம் மலையேறி விட்டது. அந்த நந்தன் நுழைந்த தெற்கு வாயிலைத் தகர்க்காமல் ஓயமாட்டோம்'' என்றார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் காவியச் செல்வன்.

''ஒரு மனித உரிமை அமைப்பு தமிழுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது, தமிழ் அமைப்புகள் என்று கூறிக் கொள்வோர் முகத்துதியில் மூழ்கிக் கிடக்கிறார்கள்'' என்று சாடினார் கடலூர் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் இராச.குழந்தைவேலனார்.

பு.ஜ.தொ.மு.வின் மாவட்டச் செயலர் காதர் பாஷா, ''இந்தப் போராட்டம் இறுதி வெற்றி பெறும்

பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் ம.க.இ.க. பொதுச் செயலர் தோழர் மருதையன்.



www.padippakam.com

வரை நாங்கள் முன்னணியில் இருப்போம்'' என்று வலியுறுத்தினார்.

''இது வெறும் ஆத்திகர் பிரச்சினை அல்ல, தமிழ் உரிமை குறித்த பிரச்சினை என்பதால்தான் நாத்திகர்களும் களத்தில் முன் நிற்கிறோம்'' என்றார் பகுத்தறிவாளர் கழகத்தின் மாநில இணைச்செயலர் பேரா.பு.ச.இளங்கோவன்.

சிறப்புரையாற்றிய ம.க.இ.க. பொதுச் செயலர் மருதையன், ''தில்லைக் கோயிலில் தமிழ் அரங்கேறுவது மட்டுமன்று, தீட்சிதர்கள் வெளியேறவும் வேண்டும். அதுவரை ஓயமாட்டோம்'' என்றார். இந்தக் கோயிலுக்குச் சொந்தம் கொண்டாட அவர்களிடம் துரும்பளவு ஆதாரம் கூட இல்லை என்பதை நிறுவியதுடன், தீட்சிதர்களின் தீண்டாமைக்கு அரசியல் சட்டம் காவல் நிற்பதையும் சுட்டிக் காட்டினார்.

பெரிய புராணத்திலிருந்தும், தேவாரம், திருவாசகத்திலிருந்தும் மேற்கோள் காட்டி தீட்சிதர்களின் பார்ப்பனப் புரட்டுகளை அம்பலப்படுத்தினார் பேராசிரியர் பெரியார்தாசன். ''பூசலார் நாயனார் போல மானசீகமாகத் தமிழ் பாடச் சொல்லும் திமிர் பிடித்த தீட்சிதப் பார்ப்பனர்களே, கண்ணப்ப நாயனார் போல பன்றிக் கறியைப் படையல் வைக்க வருகிறோம், அல்லது சாக்கிய நாயனார் போல இறைவனைக் கல்லெறிந்து பூசிக்க வருகிறோம். நீங்கள் தயாரா?'' என்று எள்ளி நகையாடினார். வழிபாட்டுரிமை என்ற ஜனநாயக உரிமைக்காகக் குரல் கொடுக்கும்போது அந்தக் குரல் பார்ப்பன எதிர்ப்பையும், சுயமரியாதையையும், நாத்திகத்தையும் தவிர்க்கவியலாமல் ஒலித்துத்தான் தீரும் என்பதைப் பக்தர்களுக்கு மிகவும் இயல்பாக உணர்த்தியது பெரியார்தாசனின் உரை. அந்த நாத்திகரின் உரையை மேடையில் அமர்ந்து ரசித்துச் சிரித்தபடியே கேட்டுக் கொண்டிருந்தார் சிவனடியார் ஆறுமுகசாமி.

நூற்றாண்டுகளாகத் தில்லையைக் கவ்வியிருக்கும் சாதிஇருள் கலைந்து, விடியப்போகும் நேரம் நெருங்கிவிட்டது என்ற நம்பிக்கையை பெற்றார்கள் மக்கள்.

● பு.ஜ. செய்தியாளர்கள்





பார்ப்பனப் புரட்டுகளை அம்பலப்படுத்திப் பேசும் பேராசிரியர் பெரியார்தாசன் (மேல்படம்); பொதுக்கூட்டத்திற்கு ஆதரவளித்துத் திரண்டிருந்த மக்கள் திரளின் ஒரு பகுதி.


## தில்லைச் சிற்றம்பல மேடையில் தமிழ் முழங்குவோம்!

**சனவரி 26, 2008 அன்று சிதம்பரத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்ட உரைகள்.**

**மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வெளியீடு**

● வழக்குரைஞர் **இராஜு** ● முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் **வி.வி.சாமிநாதன்**
● ம.க.இ.க. பொதுச்செயலர் தோழர் **மருதையன்** ● பேராசிரியர் **பெரியார்தாசன்**

ஆகியோரின் உரைகள் அடங்கிய ஒலிக்குறுந்தகடு விலை: ரூ. **30/-** (அஞ்சல் செலவு தனி)

**கிடைக்குமிடங்கள்:**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,** 10 அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002. தொலைபேசி: 044-28412367

**புதிய கலாச்சாரம்,** 16, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை - 600 083. தொலைபேசி: 044-23718706

www.padippakam.com

# வறட்சி மக்களுக்கு! தண்ணீர் தாகு முதலாளிகளுக்கு!

**நீர்நிலைகளைப் பாதுகாப்பது என்ற போர்வையில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள அவசரச் சட்டம், தண்ணீரை வியாபாரப் பொருளாக்க முயலுகிறது.**

தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசு ஓர் அவசரச் சட்டம் இயற்றி, அதனைக் கடந்த அக்டோபர் ஒன்றாம் தேதி முதல் நடைமுறைப்படுத்தத் தொடங்கி விட்டது. அச்சட்டம்தான், "தமிழ்நாடு குளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு தடைச் சட்டம்". இனிமேல் தமிழ்நாட்டில் உள்ள ஏரிக்கரைகளிலோ, குளத்தின் அருகிலோ மானாவரிப் பயிர் செய்தால் இச்சட்டத்தின்படி 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை கிடைக்கும்.

ஏரிகள்-குளங்களை ஒட்டி இருக்கும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள், கரைகளில் எல்லாம் நீர் வற்றி முழுவதுமாய் அந்நீர் நிலைகள் காய்ந்து போகும் வரை, அப்பகுதியில் நிலமற்றவர்கள் குறுகிய காலத்துக்குச் சாகுபடி செய்து வாழ்வதென்பது பாரம்பரியமாய் நடைமுறையில் இருந்து வரும் வழக்கம். ஏழை மக்கள் அனுபவித்து வரும் இந்த உரிமை கூட இனி அவர்களுக்குக் கிடையாது. இதுதவிர, ஊருணிகள், குளங்களில் உள்ளூர் மக்கள் மீன்பிடித்து வந்த பாரம்பரிய உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடெங்கும் உள்ள நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பை அகற்றுதல் எனும் பெயரில், பயிரிடப்பட்டிருந்த சாகுபடிகள் எல்லாம் பொக்லைன் எந்திரங்களால் அழிக்கப்பட்டுள்ளன. கடலூர் மாவட்டத்தில் விவசாயிகள் ஏரிக்கரையில் போட்டிருந்த கரும்பை பொதுப் பணித்துறை அழித்ததும், மக்கள் கிளர்ந்தெழுந்து மறியல் செய்ய முற்பட்ட போது போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

எதற்காக இந்தக் கடுமையான சட்டம் அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது?

இதுபற்றித் தெளிவாகப் புரிந்துக் கொள்ள வேண்டுமானால், அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் தண்ணீர் சார்ந்த திட்டங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும்.

அமெரிக்காவின் ஃபோர்டு அறக்கட்டளை, தமிழக அரசின் பொதுப் பணித்துறையுடன் இணைந்து 1994-இல் இருந்து 2003 வரை தமிழ்நாட்டின் நிலத்தடி நீர்வளம், கிணறுகளில் ஊறும் நீரின் தன்மை போன்ற அனைத்து புள்ளிவிவரங்களையும் ஆராய்ச்சி செய்து, அவற்றை ஆவணப்படுத்தி உள்ளது. முதலில் மதுரை மாவட்டத்தையும், பின்னர் படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆற்று நீர் வளம், நிலத்தடி நீர்வளம், நீர் குடிக்கத் தக்கதா - இல்லையா ஆகிய ஆய்வுத் தகவல்களை ஆவணப்படுத்தி உள்ளனர்.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் நெருங்கிய கூட்டாளியான ஃபோர்டு நிறுவனத்துக்கு தமிழக நீர் வளம் பற்றி அப்படி என்ன அக்கறை?

ஃபோர்டு நிறுவனத்தின் ஆராய்ச்சிக்குப் பின்னர்தான் நெல்லை-கங்கை கொண்டானுக்கு கொக்கோ-கோலாவும், சிவகங்கை படமாத்தூருக்கு பெப்சி கோலாவும் வந்தன என்பதிலிருந்தே அதன் அக்கறையைப் புரிந்து கொள்ள முடியும்.

ஃபோர்டின் காட்டிக் கொடுப்பு வேலையைத் தவிர, "நீரியல் திட்டம்-1" எனும் 51.149 கோடி ரூபாய் மதிப்புள்ள உலக வங்கித் திட்டத்தை தமிழக அரசு 1995-இல் இருந்து 2003 வரை நடைமுறைப்படுத்தியது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள நிலத்தடி நீர் வளத்தையும் நீரோடைகளையும் மேம்படுத்துவது, கிடைக்கும் நீரைச் சுத்திகரிப்பது போன்ற அடிக்கட்டுமான வேலைகளைச் செய்தது.

இத்திட்டம் முடிவடையும்போது மேலும் கூடுதலாக ரூபாய் 52 கோடியை உலக வங்கி வழங்கியது. தமிழக அரசு இந்த நிதியைப் பயன்படுத்தி நீரியல் ஆய்வகங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள் மற்றும் தண்ணீர்க் கட்டுப்பாட்டு ஆய்வகங்களை மதுரை, திருச்சி, பொள்ளாச்சி, சென்னை ஆகிய இடங்களில் நிறுவியது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடெங்கிலும் உள்ள ஆற்று நீரின் வரத்து, கிணறுகளின் நீர்மட்டம் ஆகியன அளவிடப்பட்டன. தொலைதூரக் கிராமங்களின் நிலத்தடி நீர் மட்டத்தை அறிந்திட



www.padippakam.com

''நாட்டு நலப்பணித்திட்டம்'' எனும் பெயரில் சில மிசனரி பள்ளிகளின் மாணவர்கள் கூட இந்த வேலைகளில் ஈடுபடுத்தப் பட்டனர்.

உலக வங்கியும், தமிழக அரசும் இந்தத் தகவல்களைத் தங் களுக்குள் பறிமாறிக் கொள்ள 'தகவல் மையங்களை' உருவாக் கிக் கொண்டன.

''நீரியல் திட்டம்-1'' இன் ஒரு பகுதியாகத்தான் 2002-03-இல் மழைநீர் சேகரிப்புப் பிரச்சாரம் இங்கே மேற்கொள்ளப்பட்டது. உலகில் எங்கெல்லாம் உலக வங் கியின் மேலாதிக்கம் நிலவு கிறதோ, அங்கெல்லாம் அதே காலகட்டத்தில் மழைநீர் சேக ரிப்பு பிரச்சாரம் செய்யப்பட்டது என் பது குறிப்பிடத்தக்கது.


பொதுவாக, அரசின் எந்த ஒரு திட் டத்திற்கும் ஆய்வுக் கூடங்களை அந்தத் துறையின் பொறியாளர்களும், மேலாளர்களும்தான் நடத்துவது வழக் கம். ஆனால், ''நீரியல்-1'' திட்டத்தின் ஆய்வுக் கூடங்களை நமது பொறி யாளர்கள் உலக வங்கி அதிகாரிகள் தலைமையில்தான் நடத்தி வந்தனர்.

அத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், உலக நிதிமூலதனத்தின் மற்றும் ஓர் அவதாரமான ''சர்வதேச மறுகட்டமைப்பு வளர்ச்சி வங்கி'' 2006-இல் இரண்டாம் நீரியல் திட்டத்தை வகுத்துத் தந்து, தமிழக அரசுக்கு 20.65 கோடி ரூபாயைக் கடனாகத் தந்துள்ளது.

முதல் திட்டம் நிலத்தடி நீர் மேம் பாடு, பழைய அணைகளின் நீர்க்கசிவு ஆகியவற்றினைப் பொதுவாக ஆராய்ந் துள்ளது. இரண்டாம் திட்டமோ தாமிர பரணி, வைப்பாறு, அக்னி ஆறு ஆகிய வற்றைக் குறிவைத்துத் தீட்டப்பட் டுள்ளது.

இதனைத் தவிர, காவிரியைக் காக் கும் திட்டம் ஒன்றை உலக வங்கி செயல்படுத்தி வருகிறது. பவானி, ஈரோடு, குமாரபாளையம், திருச்சி, பள்ளிபாளையம் ஆகிய நகரங்களின் வழியே செல்லும் காவிரியில் கலக்கும் கழிவுகளைச் சுத்திகரிக்கிறது அத்திட்டம்.

வைகை, தாமிரபரணி, காவிரியைக் காக்க அந்த ஆறுகளின் கரையோர நக ரங்களான மதுரை, திருநெல்வேலி, திருச்சி, கும்பகோணம், மயிலாடுதுறை ஆகிய ஊர்களில் பாதாளச் சாக்கடை



''வைகை ஆற்றைக் காப்போம்'' என்ற முழக்கத்தின் கீழ், ''தான்'' அறக்கட்டளை மதுரையில் நடத்திய மாரத்தான் ஓட்டப்பந்தயப் போட்டி.

களைக் கட்டி வருகிறது, இன்னொரு உலக வங்கித் திட்டம்.

இதனைத் தவிர ஊட்டி ஏரியை ஆக் கிரமித்துள்ள வெங்காயத் தாமரையை அகற்றி அழகுபடுத்துவதும் உலகவங்கி தான். இதில் கொடுமை என்னவென் றால், நீர் நிலைகளைப் பாழாக்கும் அந் நிய தாவரமான வெங்காயத் தாம ரையை இந்தியாவுக்கு 1896-இல் வங் காளம் வழியாகக் கொண்டு வந்ததும், அதை அகற்றிடக் கடன் கொடுப்பதும் அந்நிய ஏகாதிபத்தியங்கள்தான்.

இவ்வாறு தமிழகத்தின் நீர்நிலை கள் முழுவதும் உலக நிதிமூலதனத்தின் கைப்பிடிக்குள் சென்று கொண்டி ருக்கும்போது, தமிழ்நாடெங்கும் நச்சுக்கொடிகளாகப் படர்ந்திருக் கும் ஏகாதிபத்தியக் கைக்கூலி நிறு வனங்களோ நீர்நிலை பற்றிய திட் டங்களில் பிரச்சாரம், கருத்த ரங்கு, பேரணி எனப் பொதுமக் கள் மத்தியில் செயல்பட்டு, ''தண் ணீரைத் தனியார்வசம் ஒப்படைப் பதே நியாயம்'' என ஏற்க வைத்து, அதனைப் பொதுக்கருத்தாக மாற் றும் செயலில் இறங்கியுள்ளன.

''தான் பவுண்டேசன்'' எனும் தன்னார்வ நிறுவனம், மதுரை வட் டாரத்தில் கருத்தரங்குகள் பல வற்றை நடத்தி, ''கிராமக் குளங்க ளில் மீன் பிடித்தல் என்பது பாரம் பரிய உரிமையாக இருக்கலாம். ஆனால் இந்த உரிமைகள் ஒருபோதும் சட்ட உரிமையாகாது. 1994-ஆம் ஆண்டு சட்டத்தின்படி இந்த உரிமை களை மக்கள் இழந்து விட்டனர்'' என மக்களிடம் சட்ட விழிப்புணர்வூட்டி, கடன் வழங்கும் உலக நிதி மூலதன வள்ளல்களிடம், நமது பாரம்பரிய நீர்நி லைகளை மக்களின் எதிர்ப்பேதும் இன் றிக் கைமாற்றி விடுவதற்கு 'அகிம்சை' வழியில் வேலை செய்து வருகிறது.

இந்நிறுவனம் தேனி மாவட்டம் ராசிங்கபுரம் கண்மாயில் 3.75 ஏக்கர் ஆக்கிரமிப்பை அகற்ற அரசுடன் இணைந்து செயல்பட்டுள்ளது. ''தான்

## ''பெப்சி''யின் தண்ணீர்க் கொள்ளை

புவிப் பரப்பெங்கிலும் தற்போது ஓடிக் கொண்டிருக்கும் ஆறுகள் எப் போதும் ஒரே தடத்தில் ஓடிக் கொண் டிருப்பதில்லை. நிலத்தடியில் நிகழும் புவித்தட்டு நகர்வு, நில நடுக்கம் போன்ற இயற்கையின் இயக்கப் போக் கால், புவிப்பரப்பின் ஏற்ற இறக்கங்கள் தாறுமாறாவதும் அதனால் ஆறுகள் தங்கள் தடத்தை மாற்றுவதும் புவி யின் இயக்கவியல்.

இவ்வாறு ஆறுகள் தங்கள் தடங் களை மாற்றிக் கொண்டாலும் பழைய தடத்தின் அடிப்பரப்பில் அதன் இன் னொரு நகலாக, அதே ஆறு நிலத்தடி நீராக பல கோடி காலன் நீரைச் சேக ரித்து வைத்துள்ளன. இதனை செயற் கைக் கோள் படங்கள் மூலம் அறிந்து கொள்வது இன்றைக்கு சாத்தியம்.

செங்கல்பட்டை ஒட்டி இன் றைக்கு ஓடிக் கொண்டிருக்கும் பாலாறு முன்னொரு காலத்தில் சென் னைக்கு வடக்குத் திசையில் எண் ணூர் - மீஞ்சூர் பகுதிகளில் ஓடியிருப் பதை 20 ஆண்டுகளுக்கு முன் கண்ட றிந்தனர். சென்னையின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற் கென்று அப்பகுதிகளில், பத்துக்கும் மேற்பட்ட மிகப் பெரிய கிணறுகள் தோண்டப்பட்டன. அவற்றின் பயன் பாட்டை 80-களின் இறுதியில் நிறுத் திக் கொண்ட அரசு, 'அங்கு நிலத்தடி நீர் முழுக்க உறிஞ்சப்பட்டு விட்ட தாக' அதற்குக் காரணம் சொன்னது.

ஆனால், அதே பகுதியில் இன்று ''பெப்சி''யின் ''அக்வா பீனா'' தண் ணீர் நிறுவனம் தனக்கென்று ஆழ் துளைக் கிணறுகளை அமைத்து நிலத் தடி நீரை வரைமுறையின்றி உறிஞ் சிக் கொண்டிருக்கிறது. இது தற்செய லாக நடந்ததா? அல்லது அரசின் காட் டிக் கொடுத்தலால் நடந்ததா?

www.padippakam.com

பவுண்டேசனின்'' உடன்பிறப்பான ''களஞ்சியம்'', ''நீர்நிலைகளை ஆக்கிரமிப்பது கொடுங்குற்றம்'' என்றும், ''வைகை ஆற்றைக் காப்போம்'' என்றும் மக்களிடம் பிரச்சாரம் செய்ய சென்ற ஆண்டு ஜனவரியில் மதுரையில் ''மாரத்தான்'' ஓட்டத்தை நடத்தியது. கண்காட்சி ஒன்றையும் நடத்தியது. இந்தப் பிரச்சாரத்திற்குப் புரவலராக இருப்பதோ ''வாட்டர் ஃபார் லைஃப்'' எனும் தேசம் கடந்த நீர் மேலாண்மை நிறுவனம். தண்ணீர் வியாபாரியிடம் இருந்து பணம் வாங்கிக் கொண்டு, ''தண்ணீரைப் பாதுகாக்கத் தவறியது நாம்தான்'' என்று நம்மை நம்பச் சொல்லி ஒரு பிரச்சாரம்!

''வைகையைப் பாதுகாக்க வேண்டும்'' என்று முழங்கும் இவர்கள், படமாத்தூர் பெப்சியை என்றும் எதிர்க்க மாட்டார்கள். நீரை விரயமாக்கி வக்கிர நீர் விளையாட்டுக்களை நடத்தி வரும் ''அதிசயம்'' போன்ற உல்லாசப் பூங்காக்களை எதிர்க்க மாட்டார்கள். நீரினைப் பாதுகாக்காமல் விட்ட குற்ற உணர்ச்சியில் மக்களைத் தள்ளிவிடும் வேலையை, வாஜ்பாயியை தனது காலில் விழ வைத்த சின்னப்பிள்ளையும், மதுரை மாவட்ட ஆட்சியரும் தலைமை ஏற்றுச் செய்து வருகின்றனர்.

''நீர்நிலை ஆக்கிரமிப்பை அகற்றச் சட்டமியற்று'' என்று அரசை நிர்ப்பந்திக்கும் நோக்கத்தோடு, பொதுமக்கள் கருத்தை உருவாக்கும் வேலையில் ''தான் பவுண்டேசன்'' மதுரைப் பகுதியிலும், ''சிறு துளி'' நிறுவனம் திருப்பூர் - கோவைப் பகுதிகளிலும், ''நீர் எக்ஸ்னோரா'' நிறுவனம் சென்னையை ஒட்டிய பகுதியிலும் செயல்பட்டு வந்தன. ஆக்கிரமிப்பை அகற்றி விட்டு முழுவதுமாய் நீர்நிலைகளைப் பன்னாட்டு நீர் வியாபாரிகளிடம் ஒப்படைக்கத்தான் இப்பிரச்சாரங்கள் என்பதில் சந்தேகமே இல்லை. இல்லாவிட்டால் ''சிறு துளி'' நிறுவனம், நொய்யல் ஆற்றைச் சாகடித்த ஏகாதிபத்தியத்தையும், அன்னியச் செலாவணியையும் காரணம் காட்டிப் போராடாமல், ''நொய்யல் கெட்டது ஆக்கிரமிப்பால்'' என்று பிரச்சாரம் செய்திருக்குமா? தன்னார்வ நிறுவனங்கள் இவ்வகைப் பிரச்சாரங்களில் இறங்கிய அதேபோதில், சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி நீர்த்தேக்கத்தைப் பலப்படுத்திட பிரான்சு நாடு கடன் கொடுத்துள்ளது. இவை அனைத்துமே 'தண்ணீரை தனியார்மயமாக்குதல்' எனும் ஒரே நோக்கில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த செயல்பாடுகள்தான்.

மராட்டியத்தில் ''நீரா'' எனும் ஆற்றுக்கு நிதி உதவி செய்து அதனை தனியாருக்கு விற்றுவிடும்படி சொல்லும் உலக வங்கி, அதே வழிமுறையை தமிழ்



**தண்ணீரை வியாபாரப் பண்டமாக்கித் தனியாரிடம் ஒப்படைக்கும் பொழுது, பொதுக்குழாய்கள் என்பதே இல்லாமல் போய்விடும்.**

நாட்டில் கடைபிடிக்கவில்லை. அதற்கு சில காரணங்கள் உள்ளன.

ஒன்று: தமிழகத்தில் பாயும் பெரிய ஆறுகள் அனைத்தும் மாநிலங்களிடையேயான சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளன. இரண்டு: இங்கு ஏரிகள், ஏந்தல்கள், தாங்கல்கள், தருவைகள், குளங்கள், கண்மாய்கள் என மிகச் சிறப்பான அடிக்கட்டுமானங்கள் கொண்ட நீர்நிலைகளின் எண்ணிக்கை அதிகம்.

அதனால்தான் தமிழகமெங்கும் உள்ள ஏரி-குளங்களை மேம்படுத்துவதற்கென மராட்டியத்தைக் காட்டிலும் அதிகமாய் ஆயிரம் கோடி ரூபாயை உலக வங்கி கடனாகத் தந்துள்ளது. ப.சிதம்பரம் அந்த வங்கியின் ஏஜெண்டாக மாறி, ''இந்நிதியை முறையாகப் பயன்படுத்தி முன்னேறுங்கள்'' எனப் பிரச்சாரம் செய்கிறார்.

இந்தக் கடனுதவியின் பின்னணியில்தான் நீர்நிலைகளைப் பாதுகாக்கும் அவசரச் சட்டத்தை தமிழக அரசு நிறைவேற்றி, காலங்காலமாகத் தமிழ் மக்கள் அனுபவித்து வந்த ஏரி-குளங்களின் மீதான உரிமையைப் பிடுங்கி, அதனை உலக வங்கியின் கையில் கொடுத்

## வந்துவிட்டது கட்டணக் குடிநீர்!

**அண்மையில், சென்னை மாநகரில் குடிநீருக்கு மீட்டர் பொருத்தும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளனர். இனிமேல் குடிநீர் இணைப்புகளுக்கெல்லாம் ஒரே மாதிரியான கட்டணம் இல்லை. ஒவ்வொரு இணைப்பிற்கும் ஒரு மீட்டர் பொருத்தப்படும். முதல் பத்தாயிரம் லிட்டர்களுக்கு ரூபாய் 250-ம், அதற்கு அதிகமான அளவில் பயன்படுத்தும் நீருக்கு மின் கட்டணத்தைப் போல அடுக்குமுறை (ஸ்லாப்)யினையும் அறிமுகப்படுத்தி உள்ளனர். வள்ளுவர் கோட்டம் பகுதியில் மட்டும் சுமார் 15 ஆயிரம் குடிநீர் இணைப்புகள் இவ்வாறு மாற்றப்பட்டு விட்டன.**

**பத்தாயிரம் லிட்டர்தானே என நமக்கு எண்ணத் தோன்றலாம். ஆனால் 4 பேர்கள் கொண்ட குடும்பம் ஒன்றின் சராசரி மாதப் பயன்பாடென்பது இந்த அளவினை விட அதிகமாகவே உள்ளது. ஆக, சென்னையில், குளிக்க, குடிக்க, சமைக்க வேண்டுமானால் நீருக்கு மட்டும் 250 ரூபாயை மாதா மாதம் செலவழித்தாக வேண்டும் எனும் நிலைமை ஏற்பட்டுள்ளது.**

**ஆரம்பத்தில் ரூ. 250/- என்ற அளவில் வசூலிக்கப்படும் இக்கட்டண விகிதம், படிப்படியாக பின்னர் உயர்த்தப்பட்டு விடும் என்பதற்கு தென்னாப்பிரிக்க அனுபவம் சான்றாக உள்ளது. 1978-இலேயே உலக வங்கி, இத்தகைய மீட்டர்கள் பொருத்த வேண்டும் என்று சட்டத்தை இயற்றச் செய்துதான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு கடன் கொடுத்தது. அச்சட்டத்தை இப்போது நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. இனி படிப்படியே செல்போன் இணைப்புகளைப் போல ''பிரி-பெய்டு'' கார்டுகளையும் குடிநீர் இணைப்புக்குக் கொண்டு வரப் போகின்றனர். தண்ணீர் என்பது இனியும் தாகத்துக்கல்ல. லாபத்துக்குத்தான் என்பது விதியாக்கப்பட்டு விட்டது.**

www.padippakam.com

துள்ளது. பல ஆண்டுகளாகக் குளங்க ளைத் தூர் வாராமல் போட்டு வந்த அர சுக்கு நீர்நிலைகளின் மீது இன்றைக்கு திடீரென கரிசனம் வந்திருப்பதன் பின் னணி இதுதான்.

எனவேதான் குளம், ஏரிகள் பக்கம் மக்களை அண்ட விடாமல் இருக்கும் வகையில் சட்டத்தைத் தீவிரமாக அமல் படுத்திட அனைத்து மாவட்ட ஆட்சியர் களுக்கும் அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த நாட்டின் இயற்கை வளமான தண்ணீரைக்கூட விட்டு வைக்காமல் அந்நிய நிதி மூலதனம் கைப்பற்றுவ தற்கு இங்குள்ள பொம்மை அரசுகள் சட்டங்களைப் பிறப்பித்து வருகின்றன. இந்தச் சதியைத்தான் நாம் கடந்த 17 ஆண்டுகளாக ''மறுகாலனியாதிக்கம்'' என்று சொல்லி வருகிறோம்.

கடந்த 20 ஆண்டுகளாகவே சுற்றுச் சூழல் அறிவியலாளர்களும், சமூகவி யல் அறிஞர்களும் ''மூன்றாம் உலகப் போர், தண்ணீருக்குத்தான்'' எனச் சொல்லி வந்துள்ளனர். இப்போது போர் தொடங்கி விட்டது.

உலக நிதி மூலதனமும், அதன் எடு பிடிகளான தன்னார்வத் தொண்டு நிறு வனங்களும், ஏகாதிபத்திய கைக்கூலி அரசும், அது இயற்றுகின்ற சட்டங்களும் ஓரணியில் கைகோர்த்து மக்கள் மீது போரைத் தொடுத்து விட்டன என்பது வெளிப்படையாகத் தெரிந்து விட்டது.


நமது பாரம்பரிய அறிவினால் உரு வாக்கப்பட்ட நமது ஏந்தல்களையும் தாங்கல்களையும் எதிரி போர் தொடுத்து கைப்பற்றிக் கொண்டிருக்கும்போது, நாம் என்ன செய்யப் போகின்றோம்?

● இரணியன்

# "குஜராத்: திட்டமிட்ட இனப்படுகொலை"

## – இந்துவெறி பாசிச பயங்கரவாதத்தைத் தோலுரித்துக் காட்டும் புதிய நூல்

இரத்தக் கவிச்சு வீசும் இந்துவெறி கொலைகாரர்களின் வாக்குமூலங்கள் வழியாக, 2002-இல் நடந்த குஜராத் இனப்படுகொலையை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது, ''டெகல்கா'' ஆங்கில வார இதழின் நவம்பர் மாத சிறப்பு வெளியீடு. ஒரு கிரிமினல் குற்ற விசார ணைக்குத் தேவைப்படும் துல்லியத் துடன் இந்துவெறி பயங்கரவாதிக ளின் வாக்குமூலங்களை உயிரைப் பணயம் வைத்துப் பதிவு செய்திருக் கிறார், ''டெகல்கா''வின் சிறப்புச் செய்தியாளர் அசிஷ்கேதான். எனி னும், மைய அரசோ, நீதித்து றையோ இந்து வெறியர்களின் இந்த ஒப்புதல் வாக்குமூலங்களை பொருட்படுத்தவில்லை. செய்தி ஊடகங்கள் கட்டுப்பாடாக இப்புல னாய்வை இருட்டடிப்பு செய்தன; அல்லது இதன் முக்கியத்துவத்தைக் குறைத்துக் காட்டின.




தமிழக மக்களில் பலருக்கு இந் துவெறி பயங்கரவாதிகள் அளித்த வாக்குமூலங்கள் பற்றிய உண்மைச் செய்திகள் இன்னும் போய்ச் சேர வில்லை. பார்ப்பன எதிர்ப்புப் போராட்ட மரபைக் கொண்டுள்ள தமிழக மக்களிடம் இவற்றைக் கொண்டு செல்வதன் மூலம், பார்ப் பன பாசிசத்துக்கு எதிரான போராட் டத்துக்கு வலுசேர்க்க முடியும் என்ப தால், சற்றே சுருக்கியும் கட்டமைப்பு மாற்றம் செய்தும் ''டெகல்கா'' சிறப்பிதழை மொழியாக்கம் செய்து மனித உரி மைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) திருச்சி கிளை வெளி யிட்டுள்ளது.

''குஜராத்: திட்டமிட்ட இனப்படுகொலை'' என்ற இந்த மொழியாக்க நூலின் அறிமுகக் கூட்டம் திருச்சி-சந்தன மகால் அரங்கில் கடந்த 5.1.08 அன்று மாலையில் நடைபெற்றது. மனித உரிமை பாதுகாப்பு மையத் தின் திருச்சி மாவட்ட அமைப்பாள ரான வழக்குரைஞர் ஆதிநாரா யணமூர்த்தி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், கர்நாடக உயர்நீதி மன்ற வழக்குரைஞர் எஸ்.பாலன், ம.க.இ.க. மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர், இந்துவெறி பாசிச பயங்கரவாதத் துக்கு எதிராக எந்த நடவடிக்கையு மின்றிச் சரணடைந்துவிட்ட இந்திய அரசியலமைப்பு முறையின் தோல் வியை விளக்கியும், மீண்டும் குஜ ராத்தில் பயங்கரவாத மோடி ஆட் சிக்கு வந்துள்ள நிலையில் இந்துத் துவ பாசிச பரிவாரங்களுக்கு எதி ராக மதச்சார்பற்ற சக்திகள் கூடுதல் வேகத்துடன் போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் சிறப்புரை யாற்றினர். திரளான உழைக்கும் மக் கள் பங்கேற்ற இக்கூட்டத்தில் ரூ. 20 விலையுள்ள இந்நூல் பரபரப்பாக விற்பனையானதோடு, ஓரிரு வாரங் களில் மறுபதிப்பு செய்யுமளவுக்கு வரவேற்பைப் பெற் றுள்ளது.

**நூல் கிடைக்குமிடங்கள்:**

**எஸ்.ராஜு,**
**வழக்குரைஞர்,**
**702/A, ஜங்ஷன் ரோடு,**
**விருத்தாசலம் – 606 001.**
**தொலை பேசி: 9443260164**

**இரா. ஆதிநாராயணமூர்த்தி,**
**வழக்குரைஞர்,**
**19, டைமண்ட் பஜார்,**
**திருச்சி – 620 008.**
**தொலைபேசி: 0431–2706879**

**கீழைக்காற்று,**
**10, அவுலியா சாகிபு தெரு,**
**எல்லீசு சாலை,**
**சென்னை – 2.**
**தொலைபேசி: 044–28412367**

www.padippakam.com



## பேநசீர் புட்டோ:

# ஜனநாயகத் தேவதையா? அமெரிக்க அடிவருடியா?

**இறந்து போனவர்களை விமர்சிக்கக் கூடாது என்ற ஒப்பாரியின் மூலம், பேநசீர் புட்டோவின் துரோகங்களும், ஊழல் கொள்கையும் மூடி மறைக்கப்படுகின்றன.**

மூன்றாம் முறையாக பாகிஸ்தானின் பிரதமராகி விட வேண்டும் என்ற பேநசீர் புட்டோவின் பேராசை, டிச.27, 2007 அன்று மாலை சூரியன் மறையும் நேரத்தில், நடுவீதியில் நிரந்தரமாக முடிந்து போனது. அவர் துப்பாக்கி ரவைக்குப் பலியானாரா அல்லது மனித வெடிகுண்டுக்கு இரையானாரா என்பது இன்றும் 'மர்மமாக' இருந்து வருகிறது. எனினும், பேநசீர் புட்டோ அல்-காய்தாவோடு தொடர்புடைய இசுலாமிய பயங்கரவாதிகளால்தான் கொல்லப்பட்டார் என பாக். அரசு மட்டுமல்ல, மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளும், அவரின் இரத்தம் உறைவதற்கு முன்பே உலகுக்கு அறிவித்து விட்டன.

புலன் விசாரணை தொடங்குவதற்கு முன்பே, குற்றவாளிகளை அடையாளம் காட்டும் இந்த 'தீர்க்க தரிசனத்தை' என்னவென்பது? ''அமெரிக்காவின் மதிப்பு வாய்ந்த சொத்தை நாங்கள் அழித்து விட்டோம்'' என அல்-காய்தா அமைப்பைச் சேர்ந்த முஸ்தபா-அபு அல்-யாசித் கூறியதாக ''தி ஏசியன் டைம்ஸ்'' என்ற நாளிதழில் வெளியான செய்தியும்; ''அல்-காய்தா தலைவர்களுக்கு இடையே நடந்த உரையாடல்களை ஒட்டுக் கேட்டதில் இருந்து, ''அல்-காய்தாவின் தலைவர்களுள் ஒருவரான பைதுல்லா மெஹ்சுத் தான் பேநசீரின் படுகொலைக்குக் காரணம்'' என பாக். அரசு வந்தடைந்துள்ள முடிவும்தான், அல்-காய்தாவைக் குற்றஞ்சுமத்துவதற்கு ஆதாரங்களாகக் காட்டப்படுகின்றன.

பாகிஸ்தானின் ஓட்டுக்கட்சித் தலைவர்களிலேயே முற்போக்கானவர், மதச்சார்பற்றவர் என வியந்தோதப்படும் பேநசீர் புட்டோவை அல்-காய்தா கொலை செய்திருக்கக் கூடும் என நம்பும் பாகிஸ்தானியர்கள் கூட, அதிகாரத்தில் இருப்பவர்களின் உதவியின்றி இப்படுகொலை நடந்திருக்க முடியாது என்ற சந்தேகத்தை எழுப்புகிறார்கள்.

பேநசீர் துப்பாக்கியால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என உலகமே நம்பிக் கொண்டிருந்த நிலையில், பாக். அரசு, ''பேநசீர் பயணம் செய்த வேனின் மேற்கூரை ஜன்னலின் இரும்புக் கம்பியில் அவர் மோதிக் கொண்டதால், தலையில் அடிபட்டு இறந்து போனதாக'' புதுக்கதையைப் பரப்பியது. கொலையாளி பேநசீரை நோக்கித் துப்பாக்கியில் சுடும் வீடியோ பட ஆதாரங்களைப் பத்திரிகைகள் வெளியிட்ட பிறகு, தனது கதையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது, பாக். அரசு.

சம்பவம் நடந்த இடத்தில் தடயங்களைச் சேகரிப்பதற்கு முன்பாகவே, ராவல்பிண்டியின் தீயணைப்புத் துறை அதிகாரிகள் அந்த இடத்தில் தண்ணீரைப் பீச்சியடித்துச் சுத்தம் செய்துவிட்டனர். இந்தத் தடய அழிப்பை, அதிகாரிகளின் திறமையின்மை எனக் கூறிச் சமாளித்தார், அதிபர் முஷாரப். இதற்கு முன்பாக, பேநசீர் பாகிஸ்தான் திரும்பிய அன்று கராச்சி நகரில் அவரைக் குறிவைத்து நடத்தப்பட்ட குண்டு வெடிப்புத் தாக்குதல் நடந்த இடமும், தண்ணீரால் சுத்தம் செய்யப்பட்டு, தடயங்கள் அழிக்கப்பட்டன.

பேநசீரின் கணவர் கேட்டுக் கொண்டார் என்ற காரணத்தைக் கூறி, பேநசீரின் சடலத்தை பிரேதப் பரிசோதனை செய்யாமலேயே அடக்கம் செய்ய அனுமதித்திருக்கிறது, பாக். அரசு.

— இவையாவும் பேநசீரின் படுகொலையில் அரசு அதிகாரிகளுக்குத் தொடர்பிருக்குமா என்ற பொதுமக்களின் சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளன.

அரசியல் தலைவர்கள் மர்மமான முறையில் படுகொலை செய்யப்படுவது பாகிஸ்தானின் அரசியல் களத்தில் புதிய விசயமல்ல. ஆப்கானில் நடந்து வந்த போலி கம்யூனிச ஆட்சியை எதிர்த்து அமெரிக்கா நடத்திய ''ஜிகாதி'' போரில், அமெரிக்காவுக்கு அடியாளாக வேலை பார்த்த பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ சர்வாதிகாரி ஜியா-வுல்-ஹக், அந்தப் பணி முடிந்தவுடன் ஒரு விமான 'விபத்தில்' மர்மமான முறையில் இறந்து போனார். இச்சம்பவம் பற்றிய புலன் விசாரணையை அமெரிக்காவின் உளவு அமைப்பான எஃப்.பி.ஐ.தான் ஏற்று நடத்தியது.

பேநசீர் புட்டோ இரண்டாம் முறை பிரதமராக இருந்தபொழுது, அவரது சகோதரர் மிர் முர்தாஸா, அவரது வீட்டு வாசலிலேயே போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இம் ''மோதல்'' கொலை பற்றிய விசாரணையும் ஸ்காட்லாந்து போலீசாரிடம்தான் ஒப்படைக்கப்பட்டது. இந்த இரண்டு வழக்குகள் பற்றிய உண்மைகள், இதுநாள்வரை வெளியுலகுக்குத் தெரியவில்லை. பேநசீரின் படுகொலை பற்றிய மர்ம முடிச்சுகளும் அவிழ்க்கப்படாமலேயே எதிர்காலத்தில் மறைந்து போகலாம்.

•••

நம்மைப் பொறுத்தவரை அவரது மரணம் குறித்த மர்மங்களைவிட, அவரது அரசியல் ஆளுமை குறித்த கருத்துக்கள் தான் பரிசீலனைக்குரியவை. பெரும்பாலான முதலாளித்துவ பத்திரிகைகள், பாகிஸ்தானைச் சேர்ந்த அரசியல் தலைவர்களிலேயே பேநசீர் புட்டோதான் சிறந்த ஜனநாயகவாதி எனப் புகழ்ந்து தள்ளியுள்ளன. அவரைக் கொன்றதன் மூலம், பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகம் தழைப்பதற்கான


படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்பையே தடுத்து விட்டதாக, இசுலாமிய பயங்கரவாதிகள் மீது குற்றஞ் சுமத்தியுள்ளன.

கடந்த அறுபது ஆண்டுகளாக பாகிஸ்தானில் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்படுவதற்கு, அந்நாட்டை ஆண்ட இராணுவ சர்வாதிகாரிகளையும்; ஓட்டுக் கட்சித் தலைவர்களையும்; எல்லாவற்றுக்கும் மேலாக அமெரிக்காவின் ஜனநாயகத்தையும் தான் குற்றம் சுமத்த முடியுமே தவிர, இசுலாமிய பயங்கரவாதிகள் மீது பழிபோட்டுத் தப்பித்து விட முடியாது. சொந்த நாட்டு மக்களின் மீது பாசிசக் கொடுங்கோன்மையைத் திணிப்பதற்கு, தீவிரவாதத்தைக் காரணமாகக் காட்டுவது இன்று அனைத்துலக அரசியல் விதியாகி விட்டது.



அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தால் பேநசீர் வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, அவரைச் சந்தித்து உரையாடும் பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் ஆனி டபிள்யூ. பாட்டர்ஸன் (இடது).

பேநசீர் புட்டோவின் அரசியல் அரங்கேற்றம் கூட ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை. அவரது தந்தை ஜுல்பிகர் அலி புட்டோ தூக்கலிடப்பட்டதையடுத்து, அவரது மகள் என்ற ஒரே தகுதியின் காரணமாக, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராக பேநசீர் முடி சூட்டிக் கொண்டார்; ''பேநசீர் புட்டோவாகிய நான்தான் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் நிரந்தரத் தலைவி'' என கட்சி விதியையும் உருவாக்கிக் கொண்டார். எந்த நேரத்திலும் தான் கொல்லப்படலாம் என்ற பயத்தில் வாழ்ந்து வந்த அவர், தனக்குப் பிறகு தனது கணவர் ஆஸிப் அலி ஜர்தாரிதான் கட்சியின் தலைவராக வேண்டும் என உயில் எழுதி வைக்கும் அளவிற்கு, கட்சியைப் புட்டோ குடும்பச் சொத்தாகக் கருதியிருக்கிறார். பேநசீரின் கணவர் ஜர்தாரி மிகப் பெருந்தன்மையோடு, கட்சித் தலைமையை தனது மகன் பிலால் ஜர்தாரிக்கு விட்டுக் கொடுத்து விட்டார். பாகிஸ்தான் அரை நிலப்பிரபுத்துவ சமூகமாக இருப்பதால், இந்த வாரிசு அரசியல் எதிர்ப்பின்றி இயல்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பேநசீர், இராணுவ சர்வாதிகாரி ஜியா-வுல்-ஹக்கை எதிர்த்துப் போராடியதில் கூட, பொதுநலனைவிட சுய நலமே அதிகம் இருந்தது. புட்டோ குடும்பத்தை அடியோடு அழிக்க ஜியா-வுல்-ஹக் முயன்றதால், அவரை எதிர்த்துப் போராடினால்தான், தனது அரசியல் எதிர்காலத்தை மட்டுமல்ல, தனது குடும்பச் சொத்துக்களையும் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நிர்ப்பந்தம் அவருக்கு இருந்தது. ஜியா-வுல்-ஹக் ஆட்சி நடந்த சமயத்தில் வெளிநாட்டில் தஞ்சம் அடைந்திருந்த பேநசீர் புட்டோ பாகிஸ்தானிய மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல், அமெரிக்கா ஜியா-வுல்-ஹக்கைக் கைகழுவி விட்டுத் தேர்தல் நடத்தவிருந்த சமயத்தில்தான், பாகிஸ்தானுக்குத் திரும்பி வந்து, ஜனநாயகப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்.

பேநசீரின் தந்தை ஜுல்பிகர் அலி புட்டோ, ஜியா-வுல்-ஹக்கால் தூக்கிலிடப்பட்டதற்கு அமெரிக்கா எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. ஆனாலும், இந்த சொந்த இழப்புகூட பேநசீரை அமெரிக்க எதிர்ப்பாளராக மாற்றவில்லை. மாறாக, அமெரிக்காவிற்கும், இராணுவத்திற்கும் தலையாட்டவில்லையென்றால், தனக்கு அரசியலில் எதிர்காலம் கிடையாது எனப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப மாறிக் கொண்டார், பேநசீர். இளம் வயதில் அவரிடம் காணப்பட்டதாகக் கூறப்பட்ட இடதுசாரிக் கருத்துக்கள், பாம்புச் சட்டையைப் போல உரித்துப் போடப்பட்டன. இந்த மாற்றத்தின் பயனாக, பாக்.மக்கள் கட்சி 1988-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அமோகமாக வெற்றி பெறவும்; பேநசீர் பிரதமர் நாற்காலியில் அமரவும் பாக். இராணுவமும், அமெரிக்காவும் வழி ஏற்படுத்திக் கொடுத்தன. இதற்குப் பிரதிபலனாக, இராணுவத்தின் கையாள் குலாம் இஷாக் கானை அதிபராக்க பேநசீர் சம்மதித்தார்.

பேநசீர் புட்டோ, இரண்டு முறை பாகிஸ்தானின் பிரதமராக இருந்துள்ளார். இடதுசாரித் தன்மை கொண்டதாகவும்; சோசலிசக் கொள்கை கொண்டதாகவும் கூறப்பட்ட அவரது கட்சி உண்மையில் அ.தி.மு.க.வைப் போன்று பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்கும் திருட்டுக் கும்பல் என்பது ஆட்சியில் இருந்தபொழுது அம்பலமானது. கமிசன் அடிப்பதற்காகவே, பேநசீரின் கணவர் ஜர்தாரி, பேநசீரின் இரண்டாம் தவணை ஆட்சியின் பொழுது முதலீட்டுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். ''திருவாளர் பத்து சதவீதம்'' என நக்கல் செய்யப்படும் அளவிற்கு, அதிகார முறைகேடுகள் அம்பலப்பட்டு நாறின. இலஞ்சம் - ஊழலின் மூலம் மட்டும் பேநசீரின் குடும்பம் 150 கோடி அமெரிக்க டாலர் (இந்திய ரூபாயின் மதிப்பில் ஏறத்தாழ 6,000 கோடி ரூபாய்) பெறுமானம் அளவிற்கு சொத்து சேர்த்துக் கொண்டதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டது. ஜர்தாரியின் மீது பாகிஸ்தானில் மட்டுமின்றி; இங்கிலாந்து, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளிலும் ஊழல் கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டன.

மத அடிப்படைவாதத்திற்கு எதிரானவர் எனப் புகழப்படும் பேநசீர் புட்டோதான், தனது இரண்டாவது தவணை ஆட்சியின்பொழுது இசுலாமிய மத அடிப்படைவாத அமைப்பான தாலிபான்கள், ஆப்கானில் ஒரு அதிரடிப் புரட்சியின் இசுலாமிய ஆட்சியை நிறுவுவதற்கு உறுதுணையாக இருந்தார். இதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஒத்துழைத்தது தனிக் கதை. காசுமீரின் சுயநிர்ணய உரிமைப் போரை பாக். உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. மூலம், இசுலாமிய மத அடிப்படைவாத ஜிகாதிப் போராகவும் தனிநபர் பயங்கரவாத இயக்கமாகவும் மாற்றியதில்

www.padippakam.com



பேநசீரின் இடத்தை நிரப்பப் போகும் ஜனநாயக முகமூடி, ஊழல் பேர்வழியும் பேநசீரின் கணவருமான ஜர்தாரியா? அல்லது ஐ.எஸ்.ஐ-ஆல் ஊட்டி வளர்க்கப்பட்ட நவாஸ் ஷெரீபா? (வலது) என்பதுதான் அமெரிக்காவின் கவலை.

பேநசீர் புட்டோவுக்கு பெரும் பங்குண்டு. பேநசீரின் ''ஜனநாயக'' ஆட்சியில்தான், சட்டவிரோதக் காவல், சித்திரவதை, கொட்டடிக் கொலைகளை நடத்துவதில், பாகிஸ்தான் உலகின் முன்னணி நாடாக மாறியது.

1999-ஆம் ஆண்டு இராணுவத் தளபதி பர்வேஷ் முஷாரப் அதிகாரத்தைக் கைப்பற்றி கொண்டவுடன், தன் மீது ஊழல் கிரிமினல் வழக்குகள் பாயும் எனப் பயந்து போன பேநசீர், அதிலிருந்து தப்பிக்கவே துபாய்க்குத் தப்பியோடினார். அவர் அங்கிருந்து கொண்டு, முஷாரபின் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக எவ்விதப் போராட்டத்தையும் தூண்டிவிட்டு நடத்தவில்லை. மாறாக, அமெரிக்காவின் மூலமாக முஷாரப்போடு சமரசம் செய்து கொள்ள முயன்று வந்தார். அவரது எட்டு ஆண்டு காலத் தவத்திற்கு 2007-ஆம் ஆண்டு இறுதியில் பலன் கிடைத்தது.

''இராணுவத் தளபதி முஷாரப் மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு பேநசீரும், அவரது கட்சியும் ஒத்துழைக்க வேண்டும்; இதற்குக் கைமாறாக, பேநசீர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பிரதமராகவும்; அவர் மீதான ஊழல் வழக்குகளைச் சட்டப்பூர்வமாகத் திரும்பப் பெறவும் முஷாரப் உதவுவார்'' என்ற சமரச ஒப்பந்தத்தின் கீழ்தான் பேநசீர் பாகிஸ்தான் திரும்புவதற்கு அனுமதிக்கப்பட்டார்.

இராணுவத் தளபதி பதவியைத் ''துறந்து'' விட்ட முஷாரப், தனது அதிபர் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள உச்சநீதி மன்ற நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்ததையும்; அவசரகால ஆட்சியை அறிவித்ததையும் பேநசீர் எதிர்த்துப் போராடவில்லை. முஷாரப் நெருக்கடி நிலையை அறிவிப்பதற்கு முன்பாக, மேற்காசியாவில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி வில்லியம் ஃபாலோன் முஷாரப்பைச் சந்தித்ததையும்; அதனைத் தொடர்ந்து நெருக்கடி நிலை அறிவிப்பதற்கு முதல் நாள் பேநசீர் துபாய்க்குச் சென்றுவிட்டதையும் தற்செயலானதாகப் பார்க்க முடியாது. ஊழல் வழக்குகளில் இருந்து பேநசீரை மன்னித்து விடுவிப்பதற்காக முஷாரப் கொண்டு வந்த சட்டத்தை ''உச்சநீதி மன்றம் ஆராயும்'' என நீதிபதிகள் கூறியிருந்ததால், இந்த நெருக்கடி நிலையைத் தனக்குச் சாதகமானதாகத்தான் பார்த்தார், பேநசீர்.

நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு நான்கு நாட்கள் கழித்து, தேர்தலில் ஓட்டுப் பொறுக்க வேண்டிய நிர்பந்தம் காரணமாக நெருக்கடி நிலையை எதிர்த்துப் பேரணி நடத்த முயன்றபொழுதுதான், பேநசீர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். இந்தக் கைதும் கூட, பேநசீரின் அரசியல் கவுரவத்தைக் காப்பாற்றும் நாடகமாகவே பாகிஸ்தானிய மக்களால் பார்க்கப்பட்டது. அமெரிக்க அரசின் துணைச் செயலர் ஜான் நெக்ரோபோண்டே பேநசீரைச் சந்திக்கப் போவதாகத் தகவல் வந்தவுடன், பேநசீர் வீட்டுக் காவலில் இருந்து உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்.

ஆப்கானை ஒட்டியுள்ள பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணத்தில், போட்டி அரசாங்கம் நடத்தும் அளவிற்கு, தாலிபான்-அல்-காய்தா அமைப்புகளின் செல்வாக்கு வளர்ந்து விட்டது. இந்தப் பகுதியில்தான் அல்-காய்தாவின் தலைவன் பின்லேடன் ஒளிந்திருக்கக் கூடும் என அமெரிக்கா சந்தேகிக்கிறது. இந்தப் பகுதியில் இருந்து தீவிரவாதிகளை அப்புறப்படுத்த பாக். இராணுவம் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் பெரும் தோல்வியில் முடிந்துவிட்டன. எனவே, அமெரிக்கப் படைகளையே பாகிஸ்தானுக்குள் இறக்கிவிட அனுமதிக்க வேண்டும் என அமெரிக்கா நிர்பந்தம் கொடுத்து வருகிறது.

தான் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அமெரிக்கப் படைகளைப் பாகிஸ்தானுக்குள் அனுமதிக்க பேநசீர் ஒத்துக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், பாகிஸ்தானைச் சேர்ந்த அணு விஞ்ஞானி ஏ.க்யூ. கானை, அணுகுண்டு தொழில் நுட்பத்தை ஈரானுக்கு இரகசியமாக விற்றக் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரிப்பதற்கு சர்வதேச அணுசக்தி முகமையிடம் ஒப்படைக்க பேநசீர் சம்மதித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில்தான் பேநசீர் புட்டோ அழித்தொழிக்கப்பட்டுள்ளார். அவர் உயிருடன் இருந்திருந்தால், அவரின் சுயநல - பிழைப்புவாத அரசியலும்; அமெரிக்க அடிவருடித்தனமும் மேலும் மேலும் அம்பலமாகியிருக்கும். எனவே, இந்த அமெரிக்கக் கைக்கூலியின் அகால மரணத்திற்காக உழைக்கும் மக்கள் அனுதாபப்படத் தேவையில்லை.

பாக். அதிபர் பர்வேஸ் முஷாரப் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து, செல்லாக்காசாகிவிட்ட போதிலும், அமெரிக்கா அவரைக் கைவிடத் தயாராக இல்லை. தேர்தலை நடத்தி, ஒரு ஜனநாயக முகமூடியை மாட்டிவிட்டு, முஷாரபின் இராணுவ சர்வாதிகார ஆட்சி தொடர வேண்டும் என்றுதான் அமெரிக்கா விரும்புகிறது. பேநசீர் இறந்து போய்விட்ட நிலையில், அந்த முகமூடி யார்? பேநசீரின் கணவர் ஜர்தாரியா? அல்லது, பாக். உளவு நிறுவனத்தால் வளர்க்கப்பட்டவரும், பாக். முசுலீம் லீக் (என்) பிரிவு தலைவருமான நவாஸ் ஷெரீப்பா என்பதுதான் இப்பொழுது அமெரிக்காவின் முன்னுள்ள பிரச்சினை. பேநசீரின் மரணத்தைவிட, இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான பாகிஸ்தான் மக்களின் வெறுப்பை, போராட்டத்தை ஓட்டுக் கட்சிகள் அறுவடை செய்து வருவது தான் துயரமானது!

• ரஹீம்

www.padippakam.com



# ஒய்யாரக் கொண்டையில் தாழம் பூவாம் உள்ளே இருப்பது ஈரும் பேனாம்!

2007-ஆம் ஆண்டுக்கான மனிதவள மேம்பாடு குறித்த தர வரிசைப்பட்டியலை, ஐ.நா. அமைப்பு இரண்டு மாதங்களுக்கு முன்பு வெளியிட்டது. மனிதவள மேம்பாடு தரவரிசை என்பது, ஒவ்வொரு நாடும் தனது குடிமக்களின் நீண்ட, ஆரோக்கியமான வாழ்விற்கும்; முதியோர் கல்வி மற்றும் ஆரம்ப - இடைநிலைக் கல்விக்கும்; மக்களின் வாங்கும் திறனை அதிகரிப்பதற்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை வைத்து மதிப்பிடப்படுகிறது. இந்த மதிப்பீட்டின்படி, 177 நாடுகளை உள்ளடக்கிய பட்டியலில், இந்தியா 128 ஆவது இடத்தைத்தான் பிடித்திருக்கிறது.

இந்தியப் பொருளாதாரம் இப்பொழுதுதான் ''வளர''த் தொடங்கியிருக்கிறது; வல்லரசான பிறகு, மனிதவள மேம்பாட்டிலும் முதலாவது இடத்தைப் பிடித்துவிடும் என்ற நொண்டிக் காரணத்தைக் கூறி, இந்தப் பின்தங்கிய நிலையை நியாயப்படுத்திவிட அனுமதிக்க முடியாது. ஏனென்றால், இந்தியாவைவிட மனித ஆற்றலும், வளமும் குறைவாக இருக்கும் நாடுகளும்; இந்தியப் பொருளாதார ''வளர்ச்சி''யை ஒப்பிடும் பொழுது பின்தங்கி இருக்கும் பல ஏழை நாடுகளும் மனிதவள மேம்பாட்டில் இந்தியாவை முந்திச் சென்றுள்ளன.

● 1980-ஆம் ஆண்டு தொடங்கி பத்தாண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போரில் சிக்கிச் சின்னாபின்னமாகிப் போன எல்சல்வடார் மனிதவள மேம்பாட்டில் 103-ஆம் இடத்தில் இருக்கிறது.

● தென் அமெரிக்கக் கண்டத்திலேயே மிக வறிய நாடாக அறியப்படும் பொலிவியா, 117-ஆம் இடத்தில் இருக்கிறது.

● தர வரிசையில் கடந்த ஆண்டு (2006) 131-ஆம் இடத்தில் இருந்த போட்ஸ்வானா என்ற ஏழை ஆப்பிரிக்க நாடு, இந்த ஆண்டு (2007) 124-ஆம் இடத்திற்கு முன்னேறியிருக்கிறது. இந்தியாவோ, கடந்த ஆண்டு 126-ஆம் இடத்தில் இருந்து, இந்த ஆண்டு 128-ஆவது இடத்திற்குச் சரிந்து விழுந்திருக்கிறது.

● இசுரேலின் ஆக்கிரமிப்பின் கீழ் சிக்கித் தவிக்கும் பாலஸ்தீனம் கூட, 'சுதந்திர' இந்தியாவைவிட மனிதவள மேம்பாட்டில் அதிக அக்கறை செலுத்துவதால் 106-ஆம் இடத்தில் இருக்கிறது.

● சின்னஞ்சிறு நாடான இலங்கை 99-ஆம் இடத்திலும்; கஸகஸ்தான் 73-ஆம் இடத்திலும் இருப்பதைப் பார்த்து, நாம் பொறாமைதான் கொள்ள வேண்டும்.

● அமெரிக்காவின் பல்வேறு பொருளாதாரத் தடைகளைச் சந்தித்து வரும் கியூபா 51-ஆம் இடத்தில் இருக்கிறது. மனிதவள மேம்பாட்டில் உயர் வளர்ச்சி அடைந்த நாடுகளின் குழுவில் கியூபாவும் இடம் பிடித்துள்ளது. இந்திய அரசோ, தனது குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை விட்டுவிட்டு, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இடம் கிடைக்குமா, ஜி-8 நாடுகளின் குழுவில் இடம் கிடைக்குமா என வெட்டியாய் அலைந்து கொண்டிருக்கிறது.

● சியாரா-லியோன், பர்கினோ ஃபாஸோ, எத்தியோப்பியா ஆகிய பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட மிகவும் வறிய நாடுகளை ஒப்பிடும் பொழுது, சத்தான உணவு கிடைக்காமல் நோஞ்சான்களாகத் திரியும் குழந்தைகளின் எண்ணிக்கையும்; ஆரம்பக் கல்வி கூடக் கிடைக்காமல் தற்குறிகளாகத் திரியும் சிறுவர்களின் எண்ணிக்கையும் (சதவீதத்தில்) இந்தியாவில்தான் அதிகம் எனக் குறிப்பிடுகிறது, ஐ.நா.வின் மனிதவள மேம்பாட்டு நிறுவனம்.

இந்தியாவைவிட மனிதவள மேம்பாட்டில் முன்னேறியுள்ள இந்த ஏழை நாடுகளில், எந்தவொரு நாடும் 9 சதவீதப் பொருளாதார வளர்ச்சியை எட்டிப் பிடிக்கவில்லை; எந்தவொரு நாட்டிலும் அந்நியச் செலாவணி கையிருப்பு இந்தியாவைப் போல் இல்லை; எந்தவொரு நாடும் அணுசக்தி வல்லரசாகவோ, கணினி மென்பொருள் ஜாம்பவானாகவோ இல்லை.

முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு ஒவ்வொரு நிமிடமும் 40 இலட்சம் ரூபாய் அளவுக்கு அதிகரிப்பதைக் கொண்டாடும் இந்தியாவில்தான், 84 கோடி இந்தியர்களின் தினக்கூலி இருபது ரூபாயைத் தாண்டவில்லை. (ஆதாரம்: தேசிய மாதிரிப் புள்ளிவிவரப் பட்டியல்) என்பதும்; பட்டினிச் சாவிற்குள் சிக்கித் தவிக்கும் 118 நாடுகளில் இந்தியா 94-ஆம் இடத்தில் இருப்பதும் (ஆதாரம்: சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம், வாஷிங்டன்) கசப்பான உண்மையல்லவா?

● குப்பன்

www.padippakam.com

# ஒரிசா:
# இந்து மதவெறி பயங்கரவாதத்தின் இரண்டாவது பரிசோதனைச் சாலை

குஜராத் தேர்தலில் பார்ப்பன பாசிச மோடியின் வெற்றியை குறித்து பத்திரிகையாளர் குல்தீப் நய்யார் எழுதிய ஒரு கட்டுரையில், ''குஜராத் இனிமேலும் ஒரு மாநிலமல்ல, அது ஒரு சித்தாந்தம்'' எனக் குறிப்பிட்டார். 'இனிமேல்' என்பது 2002-லேயே துவங்கி விட்டது. மேற்கு இந்தியாவில் நிலை பெற்றுள்ள அப்பாசிச சித்தாந்தத்தின் இன்னொரு சோதனைச் சாலை கிழக்கு இந்தியாவில், ஒரிசாவில் 'வளர்ந்து' வருகிறது.

குஜராத் இனப் படுகொலையை இன்னமும் 'சூறாவளி' என்றே குஜராத்திகள் அழைக்கிறார்கள். அத்தகையதொரு சூறாவளியை, புயல், வெள்ளம் என இயற்கைச் சீற்றங்களுக்காக மட்டுமே பெரும்பாலும் செய்தி ஊடகங்களில் இடம் பெறும் ஒரிசா, கடந்த ஆண்டின் டிசம்பர் மாத இறுதியில் கண்டது. இதே ஒரிசாவில், 1999-இல் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரகாம் ஸ்டெயின்ஸ் என்ற கிறிஸ்தவ சேவை நிறுவன ஊழியரும், அவரது இரு பச்சிளம் பாலகர்களும் ஒரு வேனில் வைத்து உயிரோடு கொளுத்தப்பட்டதும், 2002-இல் ஒரிசா சட்டசபைக்குள்ளேயே சங்கப் பரிவார கும்பல் புகுந்து எதிர்க்கட்சியினரைத் தாக்கியதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அடுத்த படிநிலை வளர்ச்சியாக, கந்தமால் மாவட்டம் முழுவதும் தலைவிரித்தாடியது 'சூறாவளி'!

கந்தமால் மாவட்டம் தாழ்த்தப்பட்ட பனா கிறிஸ்தவர்களும், கந்தா பழங்குடியினரும் வசித்து வரும் மலைப்பகுதிகள் அடங்கிய பின்தங்கிய மாவட்டமாகும். கடந்த பத்தாண்டுகளாகவே பழங்குடி மக்கள் அதிகம் நிறைந்த ஒரிசாவில், கட்டாய மதமாற்ற எதிர்ப்பு என்ற நச்சுப் பிரச்சாரத்தை முன் வைத்து, விசுவ இந்து பரிசத் (வி.இ.ப.), வனவாசி கல்யாண் ஆசிரமம் (வ.க.ஆ.), பஜ்ரங் தள் போன்ற அமைப்புகள் இடைவிடாத மதவெறிப் பிரச்சாரத்திலும் தாக்குதல்களிலும் ஈடுபட்டு வந்துள்ளன.

கடந்த டிசம்பர் 20-ஆம் தேதியன்று அம்மாவட்டத்திலுள்ள பாமுனிகான் என்ற சிற்றூரில், தாழ்த்தப்பட்ட பனா கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்காக ஊரை அலங்கரிக்கத் தொடங்கியதற்கு, வி.இ.ப. எதிர்ப்பு தெரிவித்தது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்குத் தடைகளை ஏற்படுத்துவோம், கிறிஸ்தவர்களுக்குப் பாடம் கற்பிப்போம் எனப் பகிரங்கமாக அறிவித்தது. அதன்படி, டிசம்பர் 24-ஆம் தேதியன்று, கோடாரிகள், கழிகள், நாட்டு வெடி குண்டுகள், துப்பாக்கிகளோடு, பாமுனிகோன் வாரச் சந்தையில் கூடிய 3000-க்கும் மேற்பட்ட வி.இ.ப. குண்டர்கள் கடைகளை மூடுமாறு வியாபாரிகளை அச்சுறுத்தினர். இதனை அங்கிருந்த தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ இளைஞர்கள் எதிர்க்க, கல்லெறி சம்பவங்கள் நிகழ்ந்தன. வி.இ.ப. குண்டர்கள் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டதில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர். கிறிஸ்தவர்களின் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. கிறிஸ்துமஸ் பந்தல் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

மறுநாள் சில வி.இ.ப. குண்டர்கள் கைது செய்யப்பட்டனர். உடனடியாக, 1000-க்கும் மேற்பட்ட வி.இ.ப., பஜ்ரங் தள் வெறியர்கள் பாமுனிகான் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு போலீசை மிரட்டினர். தீ வைப்புகளும், தாக்குதல்களும் தொடங்கின. இந்நிலையில் லக்கானந்தா சரஸ்வதி எனும் வி.இ.ப. சாமியாரின் சில ஆதரவாளர்கள், தாசிங்பதி எனும் ஊரின் தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை நிறுத்துமாறு தகராறு செய்தனர். எண்ணிக்கையில் அதிகமாயிருந்த கிறிஸ்தவர்கள் திருப்பித் தாக்கவே, பின் வாங்கி ஓடினர்.



பாமுனிகான் என்ற சிற்றூரில் தாக்கப்பட்ட தேவாலயம்.

சிறு கீறல்கூடப் படாமல், தாரிங்பதி வட்டத்தை அடைந்த லக்கானந்தா சரஸ்வதி, தான் தாக்கப்பட்டதாக மருத்துவமனையில் சென்று அமர்ந்து கொண்டான். உடனடியாக சாமியார் தாக்கப்பட்டதாக வதந்தி தொற்றிக் கொண்டது. அங்கே கூடிய பத்திரிகையாளர்கள்- போலீசு முன்னிலையிலேயே, ஏற்கெனவே தாக்குதல்களில் ஈடுபடத் தொடங்கியிருந்த தனது ஆதரவாளர்களைத் தூண்டும் விதத்தில் அவன் செல


படிப்பகம்

www.padippakam.com

போனில் வெறியை கக்கினான். "நீங்கள் வெறுமனே டயர்களை எரித்துக் கொண்டிருக்கிறீர்கள். எத்தனை கிறிஸ்தவ வீடுகளும் தேவாலயங்களும் கொளுத்தப்பட்டிருக்கின்றன? கலகமில்லாமல் அமைதி இல்லை. மோடி குஜராத்தில் கலகம் செய்தார். அதனால்தான் அங்கே அமைதி இருக்கிறது."

இதனை ஒரு உள்ளூர் ஆர்.எஸ்.எஸ். வெறியன் ஒளிப்பதிவு செய்ய, உடனடியாக கொந்தளிப்பான சூழ்நிலையில் லக்கானந்தாவின் வெறிக் கூச்சல் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது. தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள்கூட இன்றி, லக்கானந்தா தாக்கப்பட்டார் என ஈ-டிவியின் ஒரியா மொழி சேனல் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பியது.

இதனைத் தொடர்ந்து, ஏறத்தாழ 72 மணி நேரத்திற்கு பாமுனிகான், தாரிங்பதி, புல்பானி, ஜிஞ்சிர்குடா, பல்லிகுடா முதலான ஒட்டுமொத்த கந்தமால் மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான வி.இ.ப. குண்டர்களின் காட்டுமிராண்டித் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டது. 5 பெரிய தேவாலயங்கள், 48 கிராமப்புற தேவாலயங்கள், 5 கான்வெண்டுகள், 7 விடுதிகள், 7 தேவாலய நிறுவனங்கள், 500-க்கும் மேற்பட்ட வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டு, முற்றிலுமாகத் தரைமட்டமாக்கப்பட்டன. திக்காபாலி எனுமிடத்தில் காவல் நிலையமே சூறையாடப்பட்டது. தேசிய நெடுஞ்சாலை 217-இல் பெரும் மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு மாவட்டமே தனித் தீவானது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ மக்கள் குடும்பங்களோடு காடுகளுக்குத் தப்பியோடினர். பல நாட்களுக்கு உணவின்றி, கடும் குளிரில் காடுகளில் தலைமறைவாக குழந்தைகளோடு பரிதவிக்க விடப்பட்டனர். 11 பேருக்கும் மேல் கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வமற்ற அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆளும் கட்சியான பிஜூ ஜனதா தள்-இன் பத்தாண்டு நிறைவையொட்டி புவனேஸ்வருக்கும், வேறு சில நிகழ்ச்சிகளுக்கும் பாதுகாப்பு பணிக்கு போலீசு சென்று விட்டதால்தான், இவ்வெறியாட்டத்தை தடுக்க இயலவில்லையென முதலமைச்சர் நவீன் பட்நாயக் நாடகமாடினார். ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ஜ.க.வோ கட்டாய மத மாற்றம்தான் இவ்வன்முறை நிகழக் காரணமென்றும், அங்கே அமலில் இருக்கும் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தில் மேலும் கடுமையான விதிகள் கொண்டு வர வேண்டுமென்றும் கூச்சல் போட்டது. வழக்கம் போல நீதி மன்ற விசாரணைக்கு உத்தரவிட்டதோடு, ஆளும் கட்சி இப்பிரச்சினையைக் கை கழுவியது.

இம்முறையும், லக்கானந்தா தாக்கப்பட்டதற்கு 'இயல்பான எதிர்வினையாகவே' வன்முறை நிகழ்ந்ததாக தனது வழக்கமான 'வினை-எதிர்வினை' வாதத்தை வி.இ.ப. முன் வைத்து நியாயம் கற்பித்தது. ஆனால், இத்தாக்குதல்கள் குஜராத்தைப் போன்றே திட்டமிட்ட தயாரிப்புகளோடு கன கச்சிதமாக நிறைவேற்றப்பட்டன என்பதுதான் உண்மை. டாக்டர் ஜான் தயாள் தலைமையிலான உண்மை அறியும் குழு சமர்ப்பித்துள்ள அரசுசாரா வெள்ளை அறிக்கையானது, டிசம்பர் 9-ஆம் தேதியன்றே பாமுனிகானில் லக்கானந்தா நடத்திய இரகசியக் கூட்டம், டிசம்பர் 21-23 வரை பாபா ராம்தேவின் 'யோகா பயிற்சி', டிசம்பர் 22-ம் தேதியன்று அனைத்துப் பஞ்சாயத்து ஆர்.எஸ்.எஸ். தலைவர்களின் இரகசியக் கூட்டம் எனத் திட்டமிட்ட முறையில் தாக்குதல்களுக்கான ஏற்பாடுகள் நடந்ததை சுட்டிக் காட்டுகிறது. இக்கலவரத்தில் காலாட்படையாக நின்று தாக்குதல் தொடுத்தவர்கள் கந்தா பழங்குடியினர்.



இந்து மதவெறி பயங்கரவாதத்தைத் தூண்டிவிட்டு நடத்திய லக்கானந்தா சரஸ்வதி.

2002-இல் குயி மொழி பேசும் மக்கள், அட்டவணைப் படுத்தப்பட்ட பழங்குடியினர் என மத்திய அரசு வரையறுத்தது. தாழ்த்தப்பட்ட பனா கிறிஸ்தவர்கள், கந்தா பழங்குடியினர்கள் இருவருமே குயி மொழிதான் பேசுகின்றனர். ஆனால், பனா கிறிஸ்தவர்களைப் பழங்குடியாக அங்கீகரிக்கக் கூடாது என கந்தா பழங்குடியினரின் குயி சமாஜ் அமைப்பு, திட்டமிட்டு டிசம்பர் 25,26 தேதிகளில் பந்த் அறிவித்தனர். வி.இ.ப.-வின் தூண்டுதலின் பேரிலேயே இவ்வாறு அறிவிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக கந்தா பழங்குடியினரை 'இந்து மயமாக்கும்' வேலைகளில் ஈடுபட்ட வனவாசி கல்யாண் ஆசிரமத்தின் 'சேவை', இத்தாக்குதல்களில் அறுவடை செய்யப்பட்டது.

பழங்குடியினரை ஏமாற்றி, மிஷனரிகள் கட்டாய மதமாற்றம் செய்வதாக வெறிக்கூச்சல் போடும் சங்கப் பரிவாரக் கும்பல்தான், பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் 340 ஏகலைவன் கல்விச் சாலைகள், வனவாசி நல அமைப்புகள், விவேகானந்தா கேந்திரங்கள், சேவா சமிதிகள் என பல வண்ணப் பெயர்களில் இயங்குகிறது. இவ்வமைப்புகள் அனைத்தும் பழங்குடியினரின் மரபுகள், வழிபாட்டு முறைகளை அழித்து, அவர்களை இந்துமயமாக்கும், சமஸ்கிருதமயமாக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஒரிசா முழவதும் 6,000 "ஷாகா"க்களில் 1.5 லட்சம் பேரை அணிதிரட்டியுள்ளது ஆர்.எஸ்.எஸ். ஒரிசாவின் பஜ்ரங் தள் தலைவன் சுபாஷ் சௌகான், ஒரிசா இரண்டாவது இந்து ராஷ்டிரம் என எக்காளமிடுகிறான். பசு வதைத் தடைச் சட்டம், கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் என மேலிருந்தும், வெள்ள நிவாரண நிதி என்ற போர்வையில் வசூலிக்கப்பட்ட கோடிக்கணக்கான அமெரிக்க டாலர்களின் நிதியோடு இயங்கும் வனவாசி கல்யாண் ஆசிரமம் போன்ற பல அமைப்புகள் கீழிருந்தும் இயங்க, ஒரிசா சோதனைச்சாலை மேலும் பல பரிசோதனைகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. மற்றொரு புறத்தில் சத்தமின்றி கலிங்கா நகர் நிலப் பறிப்பு முதல் காடுகள், கனிமவளங்கள் அனைத்தையும், டாடா, வேதாந்தா, எஸ்ஸார் போன்ற இந்தியத் தரகு முதலைகள் சுற்றி வளைத்து ஏப்பமிட்டு வருகின்றன. மறுகாலனியமும், பார்ப்பன பாசிசமும் தட்டிக் கேட்பாரின்றி தலைவிரித்தாடும் ஒரிசா, 'வளர்ந்து' வரும் குஜராத் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

● கவி

www.padippakam.com

# ஐ.ஏ.எஸ் – ஐ.பி.எஸ். அதிகாரிகள் கடைந்தெடுத்த கிரிமினல்கள்

## ஊழல் – அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டுச் சொத்துக்களை வாங்கிக் குவிப்பதில், நாட்டின் உயர் அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்குச் சற்றும் சளைத்தவர்கள் கிடையாது.

அரசு அதிகாரிகள் அனைவரும் ஒரு தனிவகை சாதி (caste) என்றார் லெனின். ஒட்டுமொத்த சிவில் சமுதாயத்துக்கும் (நாட்டின் மக்கள் அனைவருக்கும்) பகையான எதிரி சாதி இதுவே ஆகும் என்றார் லெனின்.

நாட்டின் அரசு அங்கங்களான, உள்நாட்டு-வெளிநாட்டு நிர்வாகிகளாக உள்ள அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதித்துறை, சிறைத்துறை ஆகிய அனைத்துப் பிரிவு அதிகாரிகளையும் இவ்வாறு தனிவகை சாதி என்று லெனின் வகைப்படுத்துகிறார்.

நமது நாட்டில் பிறப்பால் தீர்மானிக்கப்படும் பரம்பரை-சமூக ரீதியிலான சாதியைப் போன்றதல்ல இந்தச் சாதி. படிப்பு-பயிற்சி, பதவி இவற்றால் கிடைக்கும் அதிகாரம், சமூக-அரசியல் தகுதி ஆகியவற்றால் இவர்கள் தனிவகைச் சாதியாக அமைகிறார்கள்.

இந்தச் சமூகத்தில் சாதி ரீதியாகப் பார்க்கப் போனால் பெரும்பாலும் மேட்டுக்குடி, மேல் சாதியினர், குறிப்பாக பார்ப்பனர் உள்ளிட்ட முற்பட்ட சாதியினரே இந்தப் புதிய வகை சாதியில் இருக்கின்றனர். என்றாலும், வர்க்க ரீதியில் நடுத்தர வர்க்க அறிவுஜீவிகள் இந்தச் சாதியில் சேருவதற்கு மிகவும் ஆசைப்படுகின்றனர்.

பிறப்பால் வெவ்வேறு சாதிகளில் இருந்து தனித்தனி நபர்களாகச் சேர்ந்து ஒரு புதிய சாதியாகும் இவர்கள், படிப்பு-பயிற்சி, பதவி-அதிகாரத்தால் ஒரே வகையான பண்புகளைப் பெறுகிறார்கள். நாட்டையும் மக்களையும் நிர்வகிக்கும் பொறுப்புமிக்க கடமையாற்றுவது என்கிற பெயரில் ஆளும் வர்க்கங்கள், ஆளும் சாதிகளின் சார்பாக நாட்டுக்குத் துரோகம் செய்வதும், பரந்துபட்ட மக்களை ஒடுக்குவதும் இந்தச்சாதியின் கடமையாக உள்ளன. அதற்காகவே இந்தச் சாதி அடிப்படையில் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளுக்கு அப்பாற்பட்டது என்றும், ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள்தாம் இந்தச் சாதியைத் தவறாக வழி நடத்துகின்றனர் என்றும் ஒரு பொய்யான, அரசியலற்ற வாதத்தை ஆளும் வர்க்கங்களும், ஆதிக்க சாதிகளும் அவர்களின் செய்தி ஊடகங்களும் திரும்பத் திரும்ப முன் வைத்து வருகின்றன.

''எந்தவொரு பிரச்சினையிலும் ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளின் தலையீடு மட்டும் இல்லாமல் இருந்தால், அரசை நிர்வகிக்கும் அரசியல்வாதிகளின் கைகள் கட்டப்படாமல் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்படுவார்களேயானால் எல்லாம் சரியாக இருக்கும்; நிர்வாகம் சரியாக நடப்பது மட்டுமல்ல, நாட்டில் இலஞ்ச ஊழலும், அதிகார முறைகேடுகளும் கூட இருக்காது'' என்று கூறப்படுகிறது.

அரசியல் விழிப்புணர்வோ, அரசியல் அறிவோ இல்லாத, படித்தும் பாமரர்களாக உள்ள பிழைப்புவாத நடுத்தர வர்க்கத்தினருக்கும், உதிரித் தொழிலாளர்களுக்கும் இந்த அரசியலற்றவாதம் கவர்ச்சிகரமானதாக இருக்கிறது. அதனால்தான் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, விஜயகாந்த், சரத்குமார், ரஜினி போன்றவர்கள் இந்த அரசியலற்றவாதத்தை வைத்து அரசியல் ''பண்ணுகிறார்கள்.''

தங்கள் தொழில் சார்ந்த துறையில் மட்டும் குந்திக் கொண்டு அறிவைச் செலுத்தும் அறிவியலாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் கூட அரசியலற்ற பிழைப்புவாதக் கண்ணோட்டம் காரணமாக, அரசு அதிகாரச் சாதி பற்றிய மேற்கண்ட கருத்தையே கொண்டிருக்கிறார்கள். மேலும் இத்தகைய அறிஞர்கள் குடும்ப ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அரசு அதிகார சாதியோடு நெருங்கிய உறவு கொண்டிருக்கிறார்கள். ஒன்று, அவர்களின் பெற்றோர்கள் அரசு அதிகாரச் சாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்; அல்லது, அவர்களின் பிள்ளைகளை அரசு அதிகாரச் சாதியில் சேர்த்து விடுகிறார்கள்.

தமிழ்நாட்டிலோ, பார்ப்பனியமயமாக்கப்பட்ட செய்தி ஊடகங்கள், இன்னொரு கோணத்திலிருந்து, இந்த அரசு அதிகாரச் சாதியைப் புனிதப்படுத்துகின்றன. அதாவது, தேசியக் கட்சிகள் தேர்தல்களில் தோல்வியுற்று ஆட்சியதிகாரத்தை இழந்த பிறகுதான் தமிழ்நாட்டில் இலஞ்ச ஊழலும், அதிகார முறைகேடுகளும் பன்மடங்கு பெருகி விட்டன; இராஜாஜி, காமராஜர் ஆட்சிக் காலத்தில் எல்லாம் அரசு அதிகாரிகள் அரசியல் தலையீடின்றிச் சுதந்திரமாக செயல்பட்டு வந்தார்கள்; திராவிடக் கட்சிகளின் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் எல்லாம் கெட்டுப் போய்விட்டன என்று திரும்பத் திரும்ப சொல்லப்படுகின்றது. அதாவது, தேசியக் கட்சிகள் ஆட்சி செலுத்தியபோது, பார்ப்பன மற்றும் பிற முற்பட்ட சாதியினர் பெரும்பாலும் அரசு அதிகார சாதியின் இடத்தில்

சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் வீட்டு மனைகளை வாங்கிக் குவித்துள்ள மகாராட்டிர மாநில ஐ.பி.எஸ். அதிகாரி பர்வீந்தர் சிங் பாஸ்ரிகா.



www.padippakam.com

ஆதிக்கம் வகித்தபோது, இலஞ்ச ஊழலும் அதிகார முறைகேடுக ளும் கிடையாது என்பதுதான் பார்ப்பனமயமாக்கப்பட்ட செய்தி ஊடகங்களின் வாதம்.

இன்னொரு தவறான கருத்தும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அதாவது, அரசு அதிகாரச் சாதியைச் சேர்ந்தவர்களிலேயே, கீழ் மட்டத்தில் உள்ளவர்களிடையே தான் இலஞ்ச ஊழலும், அதிகார முறைகேடுகளும் நடக்கின்றன. நல்ல படிப்பும் பயிற்சியும், தகுதியும் பொறுப்பும் கொண்டவர்களாகிய மேல்மட்டத்தில் உள்ளவர்கள் நேர்மையாகவும், திறமையாகவும் இருப்பார்கள் என்ற மூடநம்பிக்கை பரப்பப்படுகிறது. அதனால்தான் ஒவ்வொரு முறையும் அரசியல்வாதிகளும், அரசு அதிகாரச் சாதியினரும் சம்பந்தப்பட்ட இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் மற்றும் பிற கிரிமினல் குற்றங்கள் நடப்பது வெளிவரும் போதெல்லாம் மூத்த, மேல்மட்ட அரசு அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது.

ஆனால், நாளும் வெளியாகும் உண்மைத் தகவல்கள் மேற்கண்ட கருத்துக்கள் எல்லாம் தவறானவை என்றே நிரூபிக்கின்றன. அதாவது தமிழ் நாட்டை விட, பிற மாநிலங்களில்; திராவிடக் கட்சிகள் மற்றும் பிற மாநிலக் கட்சிகள் அல்லாத தேசியக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள் மற்றும் பிற கிரிமினல் குற்றங்கள் ஒன்றும் குறைவானவைகளாக இல்லை. அதே போன்று அரசு அதிகாரச் சாதியின் கீழ் மட்டத்திலுள்ளவர்களை விட, மேல் மட்டத்தினர் அளவிலும் தன்மையிலும் அதிகமான இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளிலும் பிற கிரிமினல் குற்றங்களிலும் ஈடுபடுகின்றனர்.

நாட்டின் அரசுத் துறைத் தலைநகர் தில்லியும், பொருளாதாரத் தலைநகர் என்றழைக்கப்படும் மும்பையும்தான் முறையே நாட்டின் முதல் மற்றும் இரண்டாவது கிரிமினல் குற்றத் தலைநகரங்களாக அறியப்படுகின்றன.

மராட்டிய மாநிலத் தலைமைப் போலீசு அதிகாரியும், புதுதில்லி உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியும் கோடிகோடியாய் சொத்துக்களைக் குவிக்கும் அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தனர் என்ற இரண்டு விவகாரங்கள் மேற்கண்ட உண்மைகளைத் தெளிவாகக் காட்டியுள்ளன.



சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் சொத்துக்களை வாங்கிக் குவித்தக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மகாராட்டிர மாநில போலீசு அதிகாரி தயாநாயக் மற்றும் அவரது மனைவி கோமல். (கோப்புப் படம்).

பர்வீந்தர் சிங் பாஸ்ரிகா, மகாராட்டிர மாநிலப் போலீசுத் துறையின் முக்கியமான உயர் போலீசு அதிகாரியாக பல்வேறு பொறுப்புகளில் 35 ஆண்டுகள் ''பணியாற்றி'' இருக்கிறார். அவற்றுள், மும்பை மாநகர போலீசு ஆணையாளர், இலஞ்ச ஒழிப்புத் துறைத் தலைமை போலீசு அதிகாரி மற்றும் மகாராட்டிர மாநில பொதுத் தலைமை போலீசு இயக்குநர் (டி.ஜி.பி.) ஆகியவை மிகமிக முக்கியமானவை.

மும்பை மற்றும் மகாராட்டிர போலீசின் முக்கியத்துவம், பொறுப்புகள் குறித்து, மற்றவர்களைவிட அதிக அளவு அக்கறை இந்திய தேசிய அறிவு ஜீவிகளுக்கு உண்டு. ஏனென்றால், இவர்கள் மிகவும் பீதியடைந்துள்ள பயங்கரவாதம் மற்றும் கிரிமினல் குற்றக் கும்பல்கள் நிறைந்த இரகசிய உலகம் இரண்டையும் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டிய ''கடமை'' மும்பை மற்றும் மகாராட்டிர போலீசுக்கு அதிகமாகவே உள்ளது என்று இவர்கள் கருதுகிறார்கள். ''இந்தியப் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்காக, . அதன் நரம்பு மண்டல மையமாகக் கருதப்படும் மும்பையைத்தான் அந்நிய மண்ணிலிருந்து ஏவிவிடப்படும் பயங்கரவாதிகள் மீண்டும் மீண்டும் குறி வைத்துத் தாக்குகிறார்கள்'' என்று இந்திய தேசிய அறிவுஜீவிகள் நம்புகிறார்கள். அந்தப் பயங்கரவாதிகளுடன் கூட்டு வைத்துள்ள மும்பை மாஃபியா தாதாக்களின் இரகசிய உலகம் மிகவும் சக்தி வாய்ந்த ஆபத்தானது என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

அவை இரண்டையும் ''அடக்கி ஒடுக்கவேண்டிய பொறுப்புள்ள பதவி வகிக்கும் டி.ஜி.பி. பர்வேந்தர் சிங் பாஸ்ரிகா. பயங்கரவாதிகள் மற்றும் மாஃபியா தாதாக்களின் கூட்டாளிகளான கட்டுமானத் தொழிலதிபர்களின் பங்காளிகளாக மாறி, பலநூறு கோடி ரூபாய் சொத்து மதிப்புடைய வீடு மற்றும் வீட்டுமனைத் தொழிலைத் தானே நடத்தி வருகிறார். அதற்காகத் தனது உயர் போலீசுப் பதவியையும் கேடாகப் பயன்படுத்தி வருகிறார். அவரது தொழிலில் கருப்புப் பணம் கரைபுரண்டு ஓடுகிறது.

2001-ஆம் ஆண்டு மும்பை சட்டம்-ஒழுங்கு இணை ஆணையாளராக இருந்தபோது, கோலாப்பூர் நகரில் 8000 சதுர அடி அளவுள்ள, கட்டி முடிக்கப்பட்ட வணிக வளாகத்தின் 2 கோடி ரூபாய் சந்தை மதிப்புடைய அடித்தளம் முழுவதையும் 1.16 கோடி ரூபாய்க்கு வாங்கினார். அதன் தற்போதைய மதிப்பு 6 கோடி ரூபாய் ஆகும். மும்பை நகர ஆணையாளராகப் பதவியேற்ற நாளன்றே 2004-ஆம் ஆண்டு ஔரங்காபாத் நகரில் 3.5 கோடி ரூபாய் சந்தை மதிப்புடைய 3.25 ஏக்கர் நிலத்தை 2.25 கோடி ரூபாய்க்கு வாங்கினார். அதன் தற்போதைய மதிப்பு 10 கோடி ஆகும். 2005-ஆம் ஆண்டு மகாராட்டிரா மாநில ஊழல் தடுப்பு பொது இயக்குநராகப் பதவியேற்ற பிறகு மும்பை நகரின் அந்தேரி பகுதியில் 5 கோடி ரூபாய் சந்தை மதிப்புடைய சுமார் 7000 சதுர அடியுள்ள நான்கு தளங்களை வெறும் 50 லட்சம் ரூபாய்க்கு பாஸ்ரிகா வாங்கினார்; அதன் தற்போதைய மதிப்பு 6.5 கோடி ரூபாய் ஆகும். 2004-ஆம் ஆண்டே 1.35 கோடி ரூபாய் சந்தை மதிப்புடைய 4,700 சதுர அடித் தளங்களை 7 கோடி ரூபாய்க்கு வாங்கினார்; அதன் தற்போதைய மதிப்பு 7 கோடி ரூபாய் ஆகும். 2001-ஆம் ஆண்டு மும்பை வோர்லி குடிசைப் பகுதி புனரமைப்பு திட்டத்தின் கீழ் சுமார் 2000 சதுர அடிகள் பரப்புடைய இரண்டு தளங்களை 96 இலட்சம் ரூபாய்க்கு வாங்கி 1.5 கோடி ரூபாய்க்கு விற்றுள்ளார்; மேலும் இதற்கு ஏராளமாக கருப்புப் பணமாகப் பெற்றுள்ளார்.

இவை தவிர, நாசிக் நகரில் 485 சதுர மீட்டர் அளவு வீட்டுமனையும், நேருல் நகரில் 3,600 சதுர மீட்டர் வீட்

www.padippakam.com

டுமனையும், பூனே நகரில் ஒரு ஏக்கர் பரப்புடைய தொழிற்சாலைக்கான மனையும், பேலாப்பூர் நகரில் பிரம்மா வணிக வளாகத்தில் இரண்டு அலுவலகங்களும், மும்பை, சர்ச் கேட் பகுதியில் தில்வாரா குடியிருப்பில் ஒரு தளமும் சொந்தமாக வைத்திருக்கிறார்.

இவ்வளவு சொத்துக்களையும் தனது மனைவி, மகன், மகள் பெயரில் மட்டுமல்ல, நேரடியாகத் தனது பெயரிலேயே வாங்கிக் குவித்துள்ளார். இவ்வளவு சொத்துக்கள் வாங்கியதையும் குறைவான மதிப்புப் போட்டு வருமான வரிக் கணக்கில் காட்டியுள்ளார். இந்த வருமானத்திற்கே கூட மூலாதாரம் என்னவென்றோ, இவ்வளவு சொத்துக்களை வாங்கிக் குவித்தது குறித்தோ விசாரணையும் தண்டனையும் இன்றி திமிரோடும், ஆடம்பரமாகவும் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்.

பர்வீந்தர் சிங் பாஸ்ரிகா தனது வீடு - வீட்டுமனைத் தொழிலைப் பெருக்கிக் கொள்ளவும், சொத்துக்களை வாங்கிக் குவிப்பதற்கும் போலீசு உயர் பதவியைக் கேடாகப் பயன்படுத்திக் கொண்டு, மும்பை மாஃபியா - தாதாக்களுடன் நேரடித் தொடர்புடைய கட்டுமானத் தொழிலதிபர்களைப் பல குற்ற வழக்குகளில் இருந்து தப்புவித்தும் வருகிறார்.

மேற்கு மும்பையின் பிரபலமான கட்டுமானத் தொழிலதிபர் ''எவர் சைன்'' நிறுவன முதலாளி ராஜ்குமார் ராமச்சந்திரா லுத்வானி. இவர் மும்பை தாதாக்கள் தாவூத் இப்ராகீம் மற்றும் சோட்டா ஷகீல் ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து, போட்டியாளர்களை உருட்டி மிரட்டிக் கட்டுமான இடங்களை அடாவடியாகப் பிடுங்கிக் கொள்ளும் வழக்கில் ஆதாரங்களுடன் கைது செய்யப்பட்டார். லுத்வானியை பயாந்தர் போலீசு நிலையத்திலிருந்து தானே மாஜிஸ்ட்ரேட் வழக்குமன்றத்தில் ஆஜர்படுத்த அழைத்துச் சென்றபோது, தானே போலீசு மேலாளர் ராமராவ் பவார் மூலமாக தலையீடு செய்த ஊழல் தடுப்புப் பொது இயக்குநர் பாஸ்ரிகா, குறுக்கீடு செய்தார். லுத்வானி மீது மிகச் சாதாரண வழக்கொன்றைப் போட்டு, 24 மணி நேரத்தில் விடுதலை செய்ய வைத்தார். இதற்காக பயாந்தர் போலீசு நிலைய ஆவணப் பதிவேடுகளைத் திருத்தவும், கிழித்தெறியவும் வைத்தார். இவ்வாறு இரகசிய உலகத் தொடர்புடைய கட்டுமானத் தொழிலதிபர், பாஸ்ரிக்காவுக்கு, மும்பை வோர்லி பகுதியில் உள்ள 25 அடுக்குமாடிக் குடியிருப்பில் 1.5 கோடி ரூபாய் மதிப்புடைய 7000 சதுர அடி தளத்தை வெறும் 50 இலட்சம் ரூபாய்க்கு வழங்கினார்.

மும்பை மாநகர குடிசைப் பகுதி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் எவ்வளவு குடிசைவாசிகள் புனரமைக்கப்படுகிறார்களோ, அதற்கேற்ப வர்த்தக ரீதியிலான கட்டுமான அதிபர்கள் மனைகளைப் பெறலாம். ஊழல்-முறைகேடுகளில் ஈடுபடும் இன்னொரு கட்டுமானத் தொழிலதிபர் சைலேஷ் சாவ்லா இந்தத் திட்டத்தின் கீழ், சினிமா நடிகர் சஞ்சய் தத் மற்றும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் பெயரில் 68 குடிசை பகுதிகளை வளைத்துப் போட்டார் சாவ்லா. மாநில முதல்வரின் உத்தரவின் பேரில் நடந்த விசாரணையில் இந்த உண்மை வெளியானது. சாவ்லா தனது ''கார்டியன்'' என்று சொல்லிக் கொள்ளும் டி.ஜி.பி. பாஸ்ரிகா இந்த விசாரணையில் குறுக்கிட்டு முதல்வரிடமே பரிந்துரை செய்து சாவ்லாவுக்கு எதிரான விசாரணையை நிறுத்தி வைத்துள்ளார். மும்பை, வோர்லி பகுதியில் குடிசைப் பகுதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 2000 சதுர அடி பரப்புள்ள இரண்டு தளங்களைப் பெற்றுக் கொண்ட டி.ஜி.பி. பாஸ்ரிகா, அதற்காக இவ்வாறு கைமாறு செய்துள்ளார்.

இவ்வளவு அதிகார முறைகேடுகள் செய்த பின்னரும் எவ்விதப் பாதிப்புமில்லாமல், தொடர்ந்து மகாராட்டிரா போலீசு உயரதிகாரியாகவே நீடித்து வருகிறார். மும்பை மற்றும் மகாராட்டிரா போலீசில் இத்தகைய ஊழல் உயரதிகாரிகள் நீடிப்பது ஒன்றும் வியப்புக்குரியதில்லை. ஏற்கெனவே, மும்பை நகர போலீசு ஆணையாளராக இருந்த சர்மா என்பவர் போலிப் பத்திர பதிவு ஊழல் வழக்கில் மோசடி மன்னன் தெல்ஜியுடன் கூட்டுச் சேர்ந்ததற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார். மும்பையில் பல இரகசிய உலகப் பேர்வழிகளை போலி மோதல்களில் (என் கவுண்டர்) கொலை செய்தவன் தயா நாயக் என்ற போலீசு அதிகாரி. இவன் பல கோடி ரூபாய் சொத்துக்களை வாங்கிக் குவித்துள்ளான் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மும்பை, மகாராட்டிரா போலீசு தான் இப்படி; மற்ற மாநிலங்களில் இவ்வாறு இல்லை என்பதல்ல. இன்னொரு சான்றாக ஒரிசா டி.ஜி.பி., பி.பி., மொகந்தி என்பவனின் கிரிமினல் குற்றத்தைப் பார்ப்போம். இவரது மகன் பிட்டி மொகந்தி. ஜெர்மனியிலிருந்து இந்தியாவுக்கு சுற்றுலாப் பயணம் வந்த ஒரு இளம் பெண்ணை, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினான். குற்றம் நிரூபிக்கப்பட்டு, ஏழாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் அவன் சிறையிலடைக்கப்பட்டான். தனது மகனது செயலுக்காக வெட்கித் தலைகுனிய வேண்டிய டி.ஜி.பி., பி.பி.மொகந்தி, அதற்கு மாறாக, அவன் சிறைத்தண்டனை அனுபவிப்பது கண்டு துடிதுடித்துப் போனார்.

உடனடியாகவே, தனது மனைவியான பிட்டி மொகந்தியின் தாயார் மிக மோசமான உடல்நிலை பாதிப்புக்குள்ளாகி மருத்துவமனையில் இருப்பதாகப் போலி ஆவணங்களைத் தயார் செய்து, தனது சொந்தப் பிணையில் மகனைப் பரோலில் எடுத்து, ஒரிசா தலைநகர் புவனேசுவருக்கு அழைத்துச் சென்றார். அதன் பின் உரிய காலத்தில் ஜெய்ப்பூர் சிறைக்கு அனுப்பி வைக்காமல், தலைமறைவாக இருக்கும்படி செய்தார். ஜெய்ப்பூரில் பிடிவாரண்டு பிறப்பித்தும், பிட்டி மொகந்தியை ஒரிசா, ராஜஸ்தான் போலீசு பிடிக்கவில்லை. டி.ஜி.பி. தன் வீட்டிலேயே கற்பழிப்புக் குற்றவாளியான மகனை ஒளித்து வைத்துக் கொண்டு, தனக்குத் தெரியாது என்று சாதித்தார்.

செய்தி ஊடகங்களில் பரபரப்பாக செய்திகள் பரவியபிறகு, டி.ஜி.பி. தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது அவரும் தலைமறைவானார். ஏழு மாதங்களுக்குப் பிறகு ஒரிசா, ராஜஸ்தான் போலீசு மற்றும் அரசு உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உடன்பாடு ஏற்படுத்திக் கொண்ட பிறகு ஜெய்ப்பூர் நீதிமன்றத்தில் சரணடைந்தார். இன்னமும் அவரது கற்பழிப்புக் குற்றவாளி மகன் தலைமறைவாகவே உள்ளான். இந்நேரம் அவன் எந்த வெளிநாட்டுக்கும் ஓடிப்போய் சொகுசாக வாழலாம்.

பயங்கரவாதி, தீவிரவாதி என்று முத்திரை குத்தி போலி என்கவுண்டர் மூலம் படுகொலை செய்யப்படும் இந்த நாட்டில், மாநில டி.ஜி.பி.யே கிரிமினல் குற்றவாளிகளாக அறியப்பட்ட பிறகும், தண்டனையின்றி வாழ முடிகிறது; காரணம், அவர்கள் அரசு சாதியின் செல்லப் பிள்ளைகள்!

● ஆர்.கே.

www.padippakam.com

# தண்ணீர்: இயற்கையின் கொடையா? மேல்சாதியினரின் தனிச் சொத்தா?



சக்வாரா கிராமப் பொதுக் குளத்தில் நீர் எடுக்கும் தாழ்த்தப்பட்டோர்.

இராசஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் இருந்து 50 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது, சக்வாரா கிராமம். இங்கு வசித்து வரும் 700 குடும்பங்களில், 70 குடும்பத்தினர் ''பைரவா'' என்ற தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். இக்கிராமத்திலுள்ள பொதுக்குளம், அரசின் உதவியோடும், மக்களின் பங்களிப்போடும் - தாழ்த்தப்பட்டவர்கள் கொடுத்த நன்கொடை, அவர்களின் உடல் உழைப்பையும் பயன்படுத்திதான் - கட்டப்பட்டது. எனினும், இப்பொதுக்குளத்தைத் தாழ்த்தப்பட்டவர்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதித்து, பார்ப்பனர்களும், ஜாட் சாதியினரும் கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தீண்டாமையைக் கடைப்பிடித்து வந்தனர்.

இத்தீண்டாமைக்கு எதிராக மனதிற்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்டோர், டிசம்பர் 14, 2001 அன்று கலகத்தில் குதித்தனர். இத்தீண்டாமையை முறியடிக்கும் அடையாளமாக, பாபுலால், ராதேஷாம் என்ற இரண்டு தாழ்த்தப்பட்டோர் பொதுக்குளத்தில் இறங்கிக் குளித்தனர். ''அக்குளம் எங்களுக்குப் பயன்படுகிறதோ, இல்லையோ, தீண்டாமைக்கு எதிரான கோபத்தின் காரணமாகவே அக்குளத்தில் இறங்கிக் குளித்ததாக''க் கூறினார், ''கலகக்காரர்'' பாபுலால்.

இக்கலகத்தால் இரத்தம் கொதித்துப் போன பார்ப்பன - ஜாட் சாதி வெறியர்கள் சாதி பஞ்சாயத்தைக் கூட்டி, தாழ்த்தப்பட்டோர் சாதிக் கட்டுப்பாட்டை மீறியதற்கான தண்டனையாக 50,000 ரூபாய் அபராதம் கட்ட வேண்டும் எனக் கட்டளை போட்டனர்; மேலும், கிராமத்திற்குள் தாழ்த்தப்பட்டோருக்கு அத்தியாவசியப் பொருட்களை யாரும் விற்கக் கூடாது; அவர்களை வயல் வேலைக்குக் கூப்பிடக் கூடாது; அவர்களுக்கு கடன் தரக் கூடாது எனப் பல்வேறு ''ஃபத்வா''க்களையும் போட்டுச் சமூகப் புறக்கணிப்பும் செய்தனர்.

இந்த உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படாத பாபுலால், தனது மக்களின் ஆதரவோடு, மேல் சாதிவெறியர்களின் சட்டவிரோதச் சமூகப் புறக்கணிப்புப் பற்றி போலீசில் புகார் கொடுத்தார். ஆனால், மாவட்ட நிர்வாகமும், போலீசும் மேல்சாதி வெறியர்களுக்கு ஆதரவாக நின்றுகொண்டு, ''அந்தக் குளத்தை நீங்கள் பயன்படுத்தத் தேவையில்லை'' எனக் கட்டைப் பஞ்சாயத்து செய்தன.

சமாதானம் என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்தக் கட்டைப் பஞ்சாயத்துக்கும் தாழ்த்தப்பட்டோர் பணிந்து போகவில்லை. அவர்கள், பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் ஆதரவோடு, செப்.2002-இல் கிராமப் பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் உரிமை கோரி ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்தினார்கள். மேல்சாதி வெறியர்கள், இப்பேரணி மீது கல்வீச்சுத் தாக்குதலை நடத்திக் கலைக்க முயன்றதோடு, பேரணியில் கலந்து கொண்ட தாழ்த்தப்பட்டோரைக் குண்டாந்தடிகளைக் கொண்டு தாக்கவும் செய்தனர்.

இவ்வன்முறைத் தாக்குதலால் தாழ்த்தப்பட்டோர் அடங்கிப் போய்விடுவார்கள் என எதிர்பார்த்துக் காத்திருந்த மேல்சாதிவெறிக் கும்பல், ஏமாந்து போனது. தாக்குதல் நடந்த மறுநாளே சக்வாரா கிராமத் தாழ்த்தப்பட்டோர், கிராமப் பொதுக் குளத்தில் இறங்கியதோடு, அக்குளத்தைத் தங்களின் தேவைகளுக்காகத் தினந்தோறும் பயன்படுத்தத் தொடங்கினர்.

இதன்பின் மேல்சாதி வெறிக் கும்பலோ தீண்டாமையைப் புதிய வடிவில் கடைப்பிடிக்கச் சதித் திட்டம் போட்டது. இதன்படி, அக்கிராமக் குளம் புனிதத் தன்மையை இழந்து விட்டதாகப் பிரச்சாரம் செய்தனர். தீண்டாமைக்கு அங்கீகாரம் அளிக்கும் இந்து மத நம்பிக்கைகள், மேல்சாதி வெறிக்குக் கை கொடுத்தன. மேலும், தாழ்த்தப்பட்டோர் பயன்படுத்தத் தொடங்கிய அக்குளத்தில், காலைக் கடன்களைக் கழிப்பது; குப்பைகளைக் கொட்டுவது போன்ற அடாவடித்தனங்களில் இறங்கி, குளத்தையே மாசுபடுத்தத் தொடங்கினர். தற்பொழுது, கிராம கழிவுநீரெல்லாம் அந்தக் குளத்தில் போய் கலக்கும் வண்ணம் ஒரு வடிகாலையும் வெட்டி விட்டனர். இதன் மூலம், சக்வாரா கிராமத் தாழ்த்தப்பட்ட மக்கள் போராடி அடைந்த வெற்றியை, நடைமுறையில் அர்த்தமற்றதாகச் செய்யும் முயற்சியில் இறங்கியிருக்கிறது, பார்ப்பன - ஜாட் சாதிவெறிக் கும்பல்.

தண்ணீரைப் பயன்படுத்தும் சமூக உரிமையைக் கூட அனுபவிக்க விடாமல் தாழ்த்தப்பட்டோரைத் தடுக்கும் தீண்டாமைக் கொடுமைகள், இராசஸ்தான் போன்ற பின்தங்கிய மாநிலங்களில்தான் நடக்கும் என முடிவு செய்து விடாதீர்கள். எழுத்தறிவு பெற்றதில் நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழும் கேரளாவின் பாலக்காடு மாவட்டம் - சித்தூர் வட்டத்தில் அமைந்துள்ள பல கிராமங்களில், ''பொதுக் குழாய்களில் தண்ணீர் வரும் சமயங்களில், மேல்சாதியினர் பிடித்த பிறகு தான், தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் பிடிக்க வேண்டும்'' என்ற தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டு வருவது தற்பொழுது அம்பலமாகியிருக்கிறது.

அம்பேத்கர் தாழ்த்தப்பட்டோர் பொதுக் குளங்களில் தண்ணீர் எடுக்கும் உரிமையை அங்கீகரிக்கக் கோரி, எண்பது ஆண்டுகளுக்கு முன்பு ''மஹத்'' என்ற கிராமத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினார். காலனி ஆட்சியில் நடைபெற்ற அந்த உரிமைப் போர், இன்றும் தொடர்கிறது, இந்தியாவோ, தன்னை வெட்கமின்றி ''குடியரசு'' என்று கூறிக் கொள்கிறது.

● குப்பன்

www.padippakam.com

# வெனிசுலா:
# சாவேஸின் தோல்வி உணர்த்தும் உண்மைகள்

**நாடாளுமன்ற சீர்திருத்தங்கள் மூலம் மக்கள் நல அரசை (Welfare State) உருவாக்குவதைக் கூட ஏகாதிபத்தியவாதிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதுதான் வெனிசுலா தரும் படிப்பினை.**

தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள வெனிசுலா நாட்டின் அதிபரான சாவேஸ் முன்வைக்கும் சோசலிசத் திட்டங்களுக்கு ஏற்ப அந்நாட்டின் அரசியல் சட்டத்தைத் திருத்தியமைப்பதா, கூடாதா என்பதற்கான கருத்துக் கணிப்புத் தேர்தல் கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்றது. ஏறத்தாழ 90 லட்சம் வாக்காளர்களைக் கொண்ட வெனிசுலாவில், இக்கருத்துக் கணிப்புத் தேர்தலில் 45% பேர் வாக்களிக்கவில்லை. எஞ்சிய 55% வாக்காளர்களில் 28% பேர் சாவேசின் திட்டங்களுக்கு எதிராகவும், 27% பேர் ஆதரவாகவும் வாக்களித்துள்ளனர். மயிரிழைப் பெரும்பான்மையில் எதிர்ப்பாளர் தரப்பு வெற்றி பெற்றுள்ள நிலையில், அதிபர் சாவேசின் திட்டங்கள் இழுபறியில் சிக்கிக் கொண்டுள்ளது.

எண்ணெய் வளமிக்க வெனிசுலாவின் அதிபரான சாவேஸ், அமெரிக்க மேலாதிக்கத்தை எதிர்த்து நிற்பதோடு, மனிதநேய மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்துச் செயல்படுத்த விழைகிறார். எண்ணெய் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் தேசிய வருவாயில் பெரும் பகுதியை ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகநலத் திட்டங்களுக்கு ஒதுக்கி, ஏழைகளின் அன்புக்குரிய தலைவராக உயர்ந்து நிற்கிறார். எண்ணெய் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, விவசாயப் பொருளாதாரத்தை மீட்டுருவாக்கிச் சுயசார்பை நிறுவுவது, பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின் எண்ணெய் உற்பத்தி - சுத்திகரிப்பு நிறுவனங்களை நாட்டுடமையாக்குவது, அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிராக ஈரானுடன் சேர்ந்து எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் புதிய கூட்டமைப்பையும் தென்னமெரிக்கக் கண்டத்து நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பையும் நிறுவுவது எனும் தனது கனவுத் திட்டங்களைச் செயல்படுத்த விழையும் அதிபர் சாவேஸ், இதனை "21-ஆம் நூற்றாண்டுக்கான சோசலிசம்" என்றும் அறிவித்தார். வெனிசுலா ஒரு கம்யூனிச அரசு அல்ல என்ற போதிலும், வெனிசுலாவின் ஆளும் வர்க்கங்கள் அதிகாரத்திலிருந்து வீழ்த்தப்படவில்லை என்ற போதிலும், தனது நடவடிக்கைகள் மூலம் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராடிவரும் உலக மக்களுக்கு பெரும் உத்வேகத்தை வழங்கியிருக்கிறார், அதிபர் சாவேஸ்.

ஏகாதிபத்திய எதிர்ப்பும் ஜனநாயக உணர்வும் கொண்ட அதிபர் சாவேஸ், தனது சோசலிசக் கனவுத் திட்டங்களுக்கு ஏற்ப நாட்டின் அரசியல் சட்டத்தைத் திருத்த மக்களின் ஒப்புதலைப் பெறும் பொருட்டு கடந்த ஆண்டு டிசம்பரில் கருத்துக் கணிப்புத் தேர்தலை நடத்தினார். அதிபர் சாவேசின் பொருளாதாரக் கொள்கைகள் சோசலிசமல்ல; அவை முதலாளித்துவ சீர்திருத்தங்கள்தான் என்ற போதிலும், இந்தக் கருத்துக் கணிப்புத் தேர்தலில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களும் செய்தி ஊடகங்களும் கோடிக்கணக்கில் பணத்தை வாரியிறைத்து, எதிர்ப்பிரச்சாரத்தை வீச்சாக நடத்தி, தேர்தலில் மயிரிழைப் பெரும்பான்மையில் வெற்றி பெற்று சாவேசின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளன.

**"சாவேசுடன் உடன்படுகிறோம்" என்ற முழக்கத்தின் கீழ், அரசியல் சாசனத் திருத்தங்களை ஆதரித்து, அதிபர் சாவேசின் ஆதரவாளர்கள் தலைநகர் காரகஸில் நடத்திய பேரணி.**



www.padippakam.com

இத்தேர்தலில் சாவேஸ் அடைந்துள்ள தோல்வியைச் சாதகமாக்கிக் கொண்டு, அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பையும், ஜனநாயகத்தையும், மக்கள் நலத்திட்டங்களையும் ஒரேயடியாகக் குழி தோண்டி புதைத்துவிட அவை துடிக்கின்றன.

அதிபர் சாவேஸ், ஆகப் பெரும்பான்மையான வெனிசுலா மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர் தனது அதிகாரத்தைக் கொண்டு தனது விருப்பப்படி அரசியல் சட்டத்தைத் திருத்தியிருக்க முடியும். ஆனால், ஜனநாயக உணர்வு கொண்ட அதிபர் சாவேஸ், அரசியல் சட்டத் திருத்தத்திற்கு நாட்டு மக்களின் ஒப்புதலைப் பெறுவதற்காகவே இக்கருத்துக் கணிப்புத் தேர்தலை நடத்தினார். நிலப்பிரபுக்களின் பயன்படுத்தப்படாத பெரும்பண்ணைகளைக் கைப்பற்றி நிலச்சீர்திருத்தத்தின் மூலம் விவசாயப் பொருளாதாரத்தையும் சுயசார்பையும் கட்டியமைப்பது, கிராமங்களில் கூட்டுறவு முறை மூலம் கூட்டுச் சொத்துடைமை கவுன்சில்களை நிறுவுவது, ஆலைகளில் 8 மணி வேலை நேரத்தை 6 மணி நேரமாகக் குறைப்பது, பெண்களுக்குச் சட்டரீதியாக அனைத்துத் துறைகளிலும் சம உரிமையை நிலைநாட்டுவது உள்ளிட்டு அரசியல் சட்டத்தில் 69 வகையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அதிபர் சாவேஸ் விழைந்தார். இச்சீர்திருத்தங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் அதிகாரம் தேவை என்பதால், ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் அதிபராக முடியாது என்ற கால வரம்பை ரத்து செய்யும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவும் விரும்பினார்.



கருத்துக் கணிப்பு தேர்தலில் வாக்களிக்கும் அதிபர் ஹூகோ சாவேஸ்.

கருத்துக் கணிப்புத் தேர்தலில் வெற்றி பெற்று அதிபர் சாவேஸ் அரசியல் சட்டத்தைத் திருத்தினால், அது ஏகாதிபத்தியவாதிகளுக்கும் வெனிசுலாவின் ஆளும் வர்க்கங்களுக்கும் பேரிடியாக அமைந்து பெருத்த பாதிப்பை ஏற்படுத்தும். வெனிசுலா உழைக்கும் மக்களின் வாழ்வு மேம்படும். வெனிசுலாவை முன்மாதிரியாகக் கொண்டு தென்னமெரிக்க கண்டத்து இதர ஏழை நாடுகளும் அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பில் கூட்டுச் சேர்ந்து, மக்கள் நலனும் சுயசார்பும் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியமைக்க விழையும். இதனாலேயே, இக்கருத்துக் கணிப்புத் தேர்தலில் அரசியல் சட்டத்தைத் திருத்தக் கூடாது என்று அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களும் செய்தி ஊடகங்களும் மூர்க்கமான பிரச்சாரத்தில் இறங்கின.

வெனிசுலாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளிப்படையாகவே அரசியல் சட்டத் திருத்தத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தது. அமெரிக்கக் கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வும் அமெரிக்காவின் ''எயிட்'', ''நெட்'' முதலான நிறுவனங்களும் கோடிக்கணக்கான டாலர்களை வாரியிறைத்து பிரச்சாரம் செய்ததோடு, வதந்திகளைப் பரப்பி மக்களைப் பீதியூட்டின. ஏகாதிபத்திய கைக்கூலி நிறுவனங்களான தன்னார்வக் குழுக்களும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் சாவேசின் திட்டங்களை எதிர்த்துப் பிரச்சாரம், விளம்பரங்களில் ஈடுபட்டதோடு வீதிகளில் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தன.

வெனிசுலாவின் தரகு முதலாளிகள் சாவேஸ் எதிர்ப்புக் குழுக்களுக்கு வெளிப்படையாக நிதியுதவி செய்ததோடு, அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கிச் செயற்கையான தட்டுப்பாட்டையும் விலையேற்றத்தையும் உருவாக்கினர். வெனிசுலா உழைக்கும் மக்களின் குழந்தைகளைப் பெற்றோரிடமிருந்து பிரித்து, கட்டாயக் கல்வியின் பெயரால் குழந்தைகளைப் பள்ளிகளில் அடைக்கத் திட்டமிட்டுள்ளதாக வதந்திகளைப் பரப்பி, தனியார் தொலைக்காட்சிகள் அவதூறு பிரச்சாரம் செய்தன.

கத்தோலிக்க மதகுருமார்களும் திருச்சபைகளும் சாவேசுக்கு எதிராக அணிவகுத்துப் பிரச்சாரம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி, வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டன. இக்கும்பல் நடத்திய சாலை மறியல் போராட்டத்தைத் தடுத்த சாவேஸ் ஆதரவாளர், கிறித்துவ மதவெறி குண்டர்களால் கொல்லப்பட்டார். சாவேஸ் அரசின் ஆளுநர்களும் மாநகராட்சித் தலைவர்களும் ஏகாதிபத்தியாவதிகளால் விலை பேசப்பட்டனர்; அல்லது நடுநிலை வகிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் அதிபர் சாவேஸ் நிரந்தரமாகச் சர்வாதிகாரம் செய்யத் துடிப்பதாக எதிர்த்தரப்பினர் திரும்பத் திரும்பக் குற்றம் சாட்டினர்.

அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் அதிபர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான வரம்பை நீக்கிவிட சாவேஸ் விழைவதையே இப்படி சர்வாதிகாரியாகத் துடிப்பதாக ஏகாதிபத்தியவாதிகள் சித்தரித்து அவதூறு செய்கின்றனர். ஆனால் சாவேஸ் அரசியல் சட்டத்திருத்தத்தின் மூலம் தனிநபர் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட விழையவில்லை. மாறாக, 'ஏகாதிபத்திய எதிர்ப்பு கொண்ட மாற்றுப் பொருளாதார அரசியல்மைப்பு முறை தொடர்ந்து நீடிக்கவே விழைந்தார். அத்தகைய கொள்கைகளைச் செயல்படுத்தும் நிறுவனமாக அதிபர் பதவியைக் கருதி, அதனைக் காலவரம்பின்றி நீடிக்க விரும்பினாரே தவிர, தனிநபர் என்ற முறையில் பதவி சுகத்தை வரம்பின்றி அனுபவிப்பதற்காக அல்ல. ஏகாபத்தியக் கைக்கூலிகளை அதிபராகக் கொண்ட மறுகாலனியாதிக்கக் கொள்கை தொடர்ந்து நீடிப்பதா, அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களை அதிபராகக் கொண்ட சுயசார்பான கொள்கை தொடர்ந்து நீடிப்பதா என்பதுதான் இக்கருத்துக் கணிப்புத் தேர்தலில் மையமான விவகாரம்.

ஏகாதிபத்திய நாடுகளிலும் அதன் அடிமை நாடுகளிலும் 'ஜனநாயக' முறைப்படி அதிபர்களும் பிரதமர்களும்தான் மாறுகிறார்களே தவிர, அடிப்படையில் ஏகாதிபத்திய-காலனியாதிக்கத்தின் சர்வாதிகாரம்தான் காலவரம்பின்றி தொடர்ந்து நீடிக்கிறது. அதிபர்கள் மாறினாலும் ஏகாதிபத்தியக் கொள்ளையும் சூறையாடலும் மாறுவதில்லை. இச்சர்வாதிகாரிகள்தான், ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுடன் சுயசார்பை நிறுவ விழையும் அதிபர் சாவேசைக் கூசாமல் சர்வாதிகாரி என்றும் குற்றம் சாட்டுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்தியவாதிகள், இப்படி அவதூறு பிரச்சாரம் செய்து சாவேசை சர்வாதிகாரியாகச் சித்தரித்து வந்த நிலையில், போலி சோசலிஸ்டுகளும் போலி புரட்சியாளர்களும் இதற்குப் பக்க மேளம் வாசித்தனர். தமது கைக்கூலித்தனத்தை மூடி மறைத்துக் கொண்டு ''ஜனநாயகம்'', ''பன்மைவாதம்'' வேண்டுமென்று சித்தாந்த விளக்கமளித்தனர். உண்மையில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் பேரால், முதலாளித்துவ நாடுகளில் வர்க்க சர்வாதிகாரம் தான் நீடிக்கிறதே தவிர, அங்கு ஜனநாயகமோ, பன்மைவாதமோ கிடையாது. சொத்து, அதிகாரம் ஆகியவற்றில் முதலாளி வர்க்கத்தின் ஏகபோக ஆதிக்கம் நிலவும்போது அங்கு பன்மைவாதம் என்பது ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது. இருப்பினும், ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகளால் உருவாக்கப்பட்ட பன்மைவாதம் என்ற கோட்பாட்டைப் பிதற்றிக் கொண்டு, ஜனநாயக வேடங் கட்டிக் கொண்ட இப்போலி சோசலிஸ்டுகள் சாவேசின் திட்டங்களை சர்வாதிகாரம் என்று சாடி, எதிர்ப்பிரச்சாரம் - ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

ஆனால், சர்வாதிகாரியாகச் சித்தரிக்கப்பட்ட அதிபர் சாவேஸ், 2002-ஆம் ஆண்டில் சாவேஸ் அரசைக் கவிழ்க்க நடந்த எதிர்ப்புரட்சியில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யவோ தண்டிக்கவோகூட இல்லை. அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரிக்கவுமில்லை. இக்கருத்துக் கணிப்புத் தேர்தலில் இச்சதிகாரர்கள் பிரச்சாரம் செய்யவும் தடை விதிக்கவில்லை. அந்த அளவுக்கு அதீத ஜனநாயகம் வழங்கி தாராளவாதமாக நடந்து கொண்டார். அவ்வளவு ஏன்? மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஏகாதிபத்தியக் கைக்கூலி நிறுவனங்களான தன்னார்வக் குழுக்களும் எவ்விதத் தடையுமின்றி எதிர்ப்பிரச்சாரம் செய்ய அனுமதித்தார். இப்படி எல்லையற்ற ஜனநாயகத்துடன் நடந்து கொண்ட அதிபர் சாவேசைத்தான் இவர்கள் 'சர்வாதிகாரி' என்று அவதூறு செய்தனர்.

ஏகாதிபத்தியவாதிகள், அவர்களது கைக்கூலிகள், ''பன்மைவாதம்'' பேசும் போலி சோசலிஸ்டுகளின் மூர்க்கமான எதிர்ப்பிரச்சாரம் - போராட்டங்களின் விளைவாக இக்கருத்துக் கணிப்புத் தேர்தலில் அதிபர் சாவேஸ் தோல்வியடைந்துள்ளார். 2006-ம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தலில் 63% வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்த அதிபர் சாவேஸ். இப்போது 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை இழந்துள்ளார்.




**பாட்டாளி வர்க்க சித்தாந்தமோ, பாட்டாளி வர்க்கப் புரட்சியோ, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமோ இல்லாமல் சோசலிசத்தை நிறுவ முடியாது; தனிநபரின் உயர்ந்த நோக்கங்களால் சோசலிசத்தைக் கட்டியமைக்கவும் முடியாது. இந்த உண்மைகளை மீண்டும் மீண்டும் உலகிற்கு உணர்த்தி வருகிறது வெனிசுலா.**

ஏகாதிபத்தியவாதிகளின் எதிர்ப்பிரச்சாரம் ஒருபுறமிருக்க, மக்களிடம் பேராதரவையும் செல்வாக்கையும் பெற்றுள்ள அதிபர் சாவேஸ் இக்கருத்துக் கணிப்புத் தேர்தலில் தோல்வியடையக் காரணம் என்ன? இம்முறை, அதிபர் சாவேஸ் மீது வெனிசுலாவின் கணிசமான உழைக்கும் மக்கள் அதிருப்தியடையக் காரணம் என்ன?

வெனிசுலாவின் தரகுப் பெருமுதலாளிகளும் வர்த்தக சூதாடிகளும் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி, செயற்கையான தட்டுப்பாட்டையும் விலையேற்றத்தையும் செய்தபோது, அதற்கெதிராக சாவேஸ் அரசு உறுதியான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. தட்டுப்பாட்டைப் போக்க பல கோடிகளைச் செலவிட்டு வெளிநாடுகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்தபோதிலும், ஊழல் மிகுந்த அதிகார வர்க்கத்தின் இழுத்தடிப்புகளால் அவை உழைக்கும் மக்களுக்குப் போய்ச்சேரவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டால் உழைக்கும் மக்களிடம் நிலவிய அதிருப்தியானது, தேர்தலிலும் எதிரொலித்தது.

அரசியல் சட்டத்தைத் திருத்தக் கூடாது என்று எச்சரிக்கும் வகையில், தரகுப் பெருமுதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் வெனிசுலாவில் போட்டுள்ள முதலீடுகளை திரும்பப் பெறப் போவதாக வதந்தியைப் பரப்பி பீதியூட்டின. தனியார் வங்கிகளும் இதற்குப் பக்கபலமாக நின்று நாட்டின் பொருளாதாரத்தையே அச்சுறுத்தின. ஆட்சிக் கவிழ்ப்பு நடக்குமோ எனுமளவுக்குப் பீதி நிலவியது. இருப்பினும், இதற்கெதிராக சாவேஸ் அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க முடியாமல் தடுமாறியது.

வெனிசுலாவின் பணவீக்கம் 18%-க்கு மேல் யானைக்காலாக வீங்கி விட்ட நிலையில் அதைக் கட்டுப்படுத்த சாவேஸ் அரசு உருப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பணவீக்கத்தால் சாமானிய மக்களின் வருவாய் வீழ்ச்சியடைந்து, அதிருப்தியே நிலவியது. இதுதவிர, மருத்துவம்-சுகாதாரம், குடிநீர் வழங்கல்-கழிவுநீர் வெளியேற்றம், சாலை-மின்வசதி-போக்குவரத்து முதலான அடிப்படைத் தேவைகள் பல ஆண்டுகளாகியும் இன்னமும் நிறைவேற்றப்படாததால், பல பகுதிகளில் சாமானிய மக்களிடம் அதிருப்தியையே சாவேஸ் அரசு சம்பாதித்தது. தனியார்துறையும், அரசுத்துறையும் கொண்ட கலப்புப் பொருளாதாரம், அதுவே 21-ஆம் நூற்றாண்டின் சோசலிசம் என்று அதிபர் சாவேஸ் பல திட்

www.padippakam.com

டங்களைச் செயல்படுத்த விழைந்த போதிலும், தனியார் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் ஒத்துழைக்க மறுத்து எதிர்த்திசையில் சென்றதால், இக்கலப்புப் பொருளாதார சோசலிசத் திட்டங்கள் முடங்கிப் போயின. எல்லாவற்றுக்கும் மேலாக, சாவேஸ் அரசின் அமைச்சரவையே ஒருங்கிணைந்த கண்ணோட்டமோ, செயல்பாடோ இன்றி அரசியல்-சித்தாந்த ரீதியாகப் பிளவுபட்டுப் போயுள்ளது. இவையனைத்தின் விளைவுதான். இக்கருத்துக் கணிப்புத் தேர்தலில் சாவேசுக்குக் கிடைத்த தோல்வி.

மக்கள் நலன், சுயசார்பு, அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பு எனும் உயர்ந்த நோக்கங்களைக் கொண்ட அதிபர் சாவேஸ், வரம்புக்குட்பட்ட சில சீர்திருத்தங்களை மேற்கொண்ட போதிலும், அவரது கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கான அரசியல் கட்சி அவருக்கு இல்லை. அவரால் உருவாக்கப்பட்ட "ஐந்தாவது குடியரசு இயக்கம்" என்ற கட்சியானது ஆரம்ப நிலையிலேயே உள்ளது. அதுவும் சந்தர்ப்பவாத-சட்டவாத சக்திகளைக் கொண்டதாகவே உள்ளது.

அதிபர் சாவேஸ் தேர்தல் மூலம் பதவிக்கு வந்துள்ளாரே தவிர, அந்நாட்டின் ஆளும் வர்க்கங்களான ஏகாதிபத்தியவாதிகளும் தரகு முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் வீழ்த்தப்படவில்லை. அவர்களது சொத்துக்கள் நட்ட ஈடின்றிப் பறிமுதல் செய்யப்படவுமில்லை. இந்த ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்யும் வகையில் கட்டியமைக்கப்பட்டுள்ள அரசு எந்திரம் தூக்கியெறியப்பட்டு புரட்சிகர வர்க்கங்கள் தமது அதிகாரத்தை நிறுவவுமில்லை. மக்கள் போராட்டங்களால் தற்காலிகமாக ஆளும் வர்க்கங்கள் பின்வாங்கிக் கொண்டுள்ளனவே தவிர, அவற்றின் அதிகாரமும் பொருளாதார பலமும் ஆதிக்கமும் வீழ்த்தப்படவில்லை. கிராமப்புற விவசாயிகளும் நகர்ப்புற ஏழைகளும் அதிபர் சாவேசுக்கு ஆதரவாக உள்ள போதிலும் அவர்கள் புரட்சிகர-வர்க்கப் போராட்ட அமைப்புகளில் அணிதிரட்டப்படவில்லை.

இத்தகைய சூழலில்தான் அதிபர் சாவேஸ் தனது வரம்புக்குட்பட்ட அதிகாரத்தைக் கொண்டு மக்கள் நலன் கொண்ட சில சீர்திருத்ங்களைச் செயல்படுத்தி, அதனை "21-ஆம் நூற்றாண்டுக்கான சோசலிசம்" என்றழைத்தார். தற்போதைய கருத்துக் கணிப்புத் தேர்தலில் அவர் தோல்வியுற்றதும், அவரது சோசலிசம் பொய்த்துப் போய்விட்டதாக ஏகாதிபத்தியவாதிகளால் எள்ளிநகையாடப்படுகிறது. ஏறத்தாழ ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு நடந்ததைப் போல, இக்கருத்துக் கணிப்புத் தேர்தல் மூலம் வெற்றி பெற்றுள்ள ஏகாதிபத்தியவாதிகள், அடுத்த கட்டத் தாக்குதலைத் தொடுக்க ஆயத்தமாகி விட்டனர். சாவேசின் வரம்புக்குட்பட்ட சீர்திருத்தங்களைக் கூட செயல்படுத்துவதற்கான வாய்ப்புகளும் அருகி வருகின்றது. இயல்பாகவே சோசலிசத்தின்பால் ஈர்க்கப்பட்ட வெனிசுலாவின் உழைக்கும் மக்கள், ஆரவாரமாக அறிவிக்கப்பட்ட அதிபர் சாவேசின் சோசலிசக் கொள்கைகளும் திட்டங்களும் செயலிழந்து விட்டதைக் கண்டு அதிருப்தியுற்று, சோசலிசம் என்றாலே வெறுப்பாக பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சோசலிசம் என்பது பாட்டாளி வர்க்கக் கட்சியால் தலைமை தாங்கப்படும் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் மலர்வதேயின்றி, தேர்தல் மூலம் அதிகாரத்துக்கு வருவதல்ல. அதிகாரத்திலிருந்து வீழ்த்தப்பட்ட ஏகாதிபத்தியவாதிகள், தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களின் சொத்துக்களையும், உரிமைகளையும் பறித்து, உழைக்கும் மக்கள் தமது சர்வாதிகாரத்தைச் செலுத்தி அதிகாரம் செய்வதுதான் சோசலிசமே அன்றி, சுரண்டும் வர்க்கங்களுக்கு ஜனநாயகம் - பன்மைவாதம் அளிப்பதல்ல. பாட்டாளி வர்க்க சித்தாந்தமோ, பாட்டாளி வர்க்கப் புரட்சியோ, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமோ இல்லாமல் சோசலிசத்தை நிறுவ முடியாது; தனிநபரின் உயர்ந்த நோக்கங்களால் சோசலிசத்தைக் கட்டியமைக்கவும் முடியாது. - இந்த உண்மைகளை உலகிற்கு உணர்த்திவிட்டு வெனிசுலாவும் அதிபர் சாவேசின் சோசலிசமும் மீள முடியாத நெருக்கடியில் மூழ்கிக் கொண்டிருக்கின்றன.

● பாலன்

# ராமன் பாலம் புராணப் புரட்டு! பார்ப்பன மதவெறிக் கும்பலை விரட்டு!

## — தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் தொடர் பிரச்சாரம்

கடந்த அக்டோபர் மாதம் முதலாக பார்ப்பன-இந்துவெறி பாசிசத்துக்கு எதிராக "ராமன் பாலம் புராணப் புரட்டு; பார்ப்பன மதவெறிக் கும்பலை விரட்டு" எனும் முழக்கத்துடன் தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன. இதன் ஒரு பகுதியாக கோவை-கணபதியில் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து கடந்த நவம்பர் 25 அன்று பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சி நடத்த ஏற்பாடுகளைச் செய்து வந்த நிலையில், சட்டம்-ஒழுங்கு பிரச்சினையைக் காட்டி போலீசார் கலைநிகழ்ச்சிக்கு அனுமதி மறுத்து பின்னர் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கினர். இப்பொதுக் கூட்டத்திற்கான விளம்பர தட்டிகளைக் கிழித்து இந்துவெறி கும்பல் ரவுடித்தனத்தில் இறங்கியதும் "சேது சமுத்திர திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி" என்று முழக்கத்தை மாற்றி கூட்டம் நடத்துமாறு போலீசு கூறியது. அரசியல் ரீதியிலான முழக்கத்தை மாற்ற இப்புரட்சிகர அமைப்புகள் மறுத்துவிட்டதால், பொதுக்கூட்ட அனுமதியை போலீசு ரத்து செய்தது.

கருத்துரிமையைப் பறிக்கும் இந்த அடாவடித்தனத்திற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் முறையிட்டும்கூட, நீதிமன்றமோ போலீசின் வாதத்தை நியாயப்படுத்தி, கணபதியில் அல்லாமல் வேறிடத்தில் கூட்டம் நடத்த அனுமதிக்குமாறு போலீசுக்கு உத்தரவிட்டது. இப்படி பல்வேறு இடர்ப்பாடுகள் - தடைகளைக் கடந்து இப்புரட்சிகர அமைப்புகள் கடந்த 12.1.08 அன்று கோவை-ஒண்டிப்புதூரில் எழுச்சிமிகு பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சிகளை நடத்தின. ம.க.இ.க. மாநிலச் செயலர் தோழர் மருதையன் ஆற்றிய சிறப்புரையும், மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகப் போராட அறைகூவுவதாக அமைந்தன.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் 20.1.08 அன்று பு.ஜ.தொ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து ராமன் பாலம் புராணப் புரட்டை அம்பலப்படுத்தி நடத்திய பொதுக்கூட்டம் பகுதிவாழ் இளைஞர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. பார்ப்பன கும்பலின் சூழ்ச்சிகள்-சதிகளைத் திரைகிழித்துக் காட்டிய ம.க.இ.க. தோழர் துரை.சண்முகத்தின் சிறப்புரையும், ஓசூர் இளந்தோர்கள் நடத்திய "ராமனுக்குத் தூக்கு!" எனும் ஓரங்க நாடகமும், ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய கதாகாலட்சேபம் மற்றும் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் பார்ப்பன எதிர்ப்பு அரசியலை மக்களின் நெஞ்சிலே பதிய வைத்தன.

● பு.ஜ. செய்தியாளர்கள்


படிப்பகம்

www.padippakam.com



# அம்பலம் ஏறாத ஏழைகளின் சாட்சியம்

**வீரப்பன் தேடுதல் வேட்டையின்பொழுது அதிரடிப்படை நடத்திய பல்வேறு அட்டூழியங்கள் சதாசிவம் கமிசனாலும் ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டன.**

**ச**ந்தன மரக் கடத்தல் வீரப்பனைத் தேடுவது என்ற பெயரில், கர்நாடகா - தமிழ்நாடு கூட்டு அதிரடிப் படைகள் நடத்திய மனித உரிமை மீறல்களை விசாரிக்க சதாசிவம் கமிசன் அமைக்கப்பட்டு, அக்கமிசன் அளித்தத் தீர்ப்பின்படி தேடுதல் வேட்டையால் பாதிக்கப்பட்ட 89 பேருக்கு 2.8 கோடி ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்டதோடு, இப்பிரச்சினைக்கு மங்களம் பாடிவிட்டது, ஆளுங் கும்பல். பொதுமக்களும் கூட, இப்பிரச்சினையில் பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் வழங்கப்பட்டு விட்டதாகவே எண்ணிக் கொண்டுள்ளனர். ஆனால், சதாசிவம் கமிசன் அளித்த ''நீதி''யின் பின்னே, மிகப் பெரும் அநீதி மூடி மறைக்கப்பட்டுள்ளது. சதாசிவம் கமிசன் இழைத்துள்ள இந்த அநீதி, அதிரடிப் படை கிரிமினல்கள் இழைத்த கொடூரங்களுக்கு இணையானது மட்டுமல்ல; பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகள் என்பதனாலேயே அவர்களின் நேர்மையையும், நாணயத்தையும் கேள்விக்குள்ளாக்கி, அவர்களை மீண்டுமொருமுறை கேவலப்படுத்தி விட்டது.

அதிரடிப் படையின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட மக்கள், மனித உரிமை அமைப்புகள் - தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு இணைந்து பல்வேறு போராட்டங்களை நடத்திய பிறகுதான், தேசிய மனித உரிமை கமிசன் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட சதாசிவம் கமிசனை அமைத்தது. 1999-ஆம் ஆண்டு ஜூன் 28 அன்று சதாசிவம் கமிசன் அமைக்கப்பட்ட பிறகு, அது பற்றி ''தி வீக்'' என்ற வார இதழுக்குப் பேட்டியளித்த தமிழ்நாடு-கர்நாடகா கூட்டு அதிரடிப்படைகளின் தலைவர் தேவாரம், ''சில சுயநலமிகள் பணத்தாசையைக் காட்டி, அப்பாவி மலைவாழ் மக்களை எங்களுக்கு எதிராகத் தூண்டிவிடுவதாக''க் குற்றஞ்சுமத்தினார்.

காக்கிச் சட்டை கிரிமினல் தேவாரத்திடம் மட்டுமல்ல, அதிரடிப்படை அட்டூழியங்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட சதாசிவம் கமிசனிடமும் இந்த போலீசு புத்தி இருந்தது என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்கது.

''போலீசு, வீரப்பனுக்கு எதிராக எடுத்தத் தீவிரமான நடவடிக்கைகள்... நியாயமான நடவடிக்கைகள்கூட, போலீசாருக்கும், மலைவாழ் மக்களுக்கும் இடையே நம்பிக்கையின்மை, தப்பெண்ணம், கோபம், ஏமாற்றம் ஆகியவற்றை ஏற்படுத்தியிருக்கும். இத்தகைய நிலையில் இரண்டு தரப்புமே ஒருவர் மற்றவருக்கு எதிராகப் பொய்யான, மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பழி தீர்த்துக் கொள்வதற்காகக் கூறுவது இயற்கையானது'' என சதாசிவம் கமிசன் தனது அறிக்கையில் தாரக மந்திரம் போலக் குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய ''நடுநிலையான'' பார்வையோடுதான், அக்கமிசன் விசாரணையை நடத்தியிருக்கிறது. இந்த நடுநிலை, ஒருபுறம் அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட பலருக்கு நீதி கிடைக்காமல் செய்துவிட்டது; மறுபுறம் அதிரடிப் படைகளைச் சேர்ந்த குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விட்டு விட்டது.

•••

**த**மிழ்நாடு-கர்நாடகா கூட்டு அதிரடிப் படைகளின் தேடுதல் வேட்டையால், ஏறத்தாழ 50 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. பல அப்பாவிகள் ''மோதல்'' என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டதோடு, அதிரடிப் படையால் பிடித்துச் செல்லப்பட்ட, 50 பேர் ''காணாமல்'' போய்விட்டனர். 121 பேர் ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்; அவர்களுள் 107 பேர் மீது தொடரப்பட்ட ''தடா'' வழக்குகள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டாலும், அவர்கள் ஆறு முதல் எட்டு ஆண்டுகள் வரை குற்றம் நிரூபிக்கப்படாமலேயே சிறைத்தண்டனை அனுபவித்தனர். ஏறத்தாழ ஐநூறுக்கும் மேற்பட்டோர் சட்ட விரோதக் காவலில் அடைத்து வைக்கப்பட்டு, சித்திரவதை, பாலியல் வன்புணர்ச்சி போன்ற கொடூரங்களுக்கு ஆட்படுத்தப்பட்டனர்.



பச்சை உடுப்புப் போட வைத்து, கையில் துப்பாக்கியைக் கொடுத்து வீரப்பனின் ஆளாகச் ''செட்டப்'' செய்து, ''தடா''வில் கைது செய்யப்பட்ட மலைமாக்கம் பாளையத்தைச் சேர்ந்த சிவண்ணா.

அதிரடிப்படைகளின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டவர்களுள் 140 பேர், போலீசாரின் அச்சுறுத்தலையும் மீறி சதாசிவம் கமிசன் முன் நேரடி சாட்சியம் அளித்தனர். இவர்களுள் 89 பேரின் சாட்சியத்தை மட்டுமே சதாசிவம் கமிசன் உண்மை என ஏற்றுக் கொண்டது. பாதிக்கப்பட்ட மீதிப் பேரின் வாக்குமூலங்களை, ஆதாரம் இல்லையென்றோ, மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு என்றோ; மருத்துவச் சான்றிதழ் இல்லை என்றோ கூறி நிராகரித்து விட்டது.

18 வயதான ரதினி என்ற இளம்பெண், தன்னை எம்.எம்.மலைக் குன்றில் உள்ள கொட்டடியில் அடைத்து வைத்து, 10 போலீசார் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தியதாகச் சாட்சியம் அளித்தார். ஆனால், ''இப்பாலியல் வன்புணர்ச்சித் தாக்குதலை, ரதினியின் கணவரின் சாட்சியம் உறுதி செய்யவில்லை; எனவே, ரதினியின் குற்றச்சாட்டுக்குப் போதுமான ஆதாரம் இல்லை'' எனக் கூறி, அவரது சாட்சியத்தை நிராகரித்து விட்டது, சதாசிவம் கமிசன்.

லெட்சுமி என்ற பழங்குடியினப் பெண், தான் கர்ப்பமாக இருந்ததைக் கூடப் பொருட்படுத்தாமல் கூட்டு அதிரடிப்

www.padippakam.com



மணல் மூட்டையைத் தலையில் சுமக்க வைத்து, வீரப்பனுக்கு அரிசி கொடுக்கப் போனதாக "செட்டப்" செய்து கைது செய்யப்பட்ட கொளத்தூர் தண்டாவைச் சேர்ந்த மணி.

படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தன்னைப் பாலியல் பலாத்காரப்படுத்தியதால், தனது கர்ப்பம் கலைந்து விட்டதாக சாட்சியம் அளித்தார். "லெட்சுமி, இப்பாலியல் வன்புணர்ச்சி குறித்து உடனடியாக யாரிடமும் கூறவில்லை; கர்ப்பம் கலைந்த பிறகு, தனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பெயரையும் அவரால் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை" எனக் கூறி, அவரது குற்றச்சாட்டு நம்பத் தகுந்தது அல்ல எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தங்கம்மாள் என்ற பெண், "பெரிய அய்யா என்று அழைக்கப்படும் அதிகாரி, தனது நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை வைத்து மிரட்டி, ஆடைகளைக் களைய வைத்து நிர்வாணப்படுத்தி, தொடர்ந்து மூன்று நாட்கள் தன்னைப் பாலியல் பலாத்காரப்படுத்தியதாக"ச் சாட்சியம் அளித்தார்.

கீழ் அதிகாரிகளால் 'பெரிய அய்யா' எனப் பணிவுடன் அழைக்கப்பட்ட கூட்டு அதிரடிப் படைகளின் தலைவர் வால்டர் தேவாரத்தைத்தான், தங்கம்மாள் குற்றவாளியாக அடையாளம் காட்டுகிறார் என்பது விசாரணையின் போக்கிலேயே நிரூபணம் ஆனது. எனினும் சதாசிவம் கமிசன், "தங்கம்மாள், குற்றவாளியை அவரது சொந்தப் பெயரால் அடையாளம் காட்டவில்லை. தமிழக அதிரடிப் படையில் "பெரியய்யா" என்ற பெயர் கொண்ட மற்றொரு உயர் அதிகாரி இருக்கும் பொழுது 'பெரிய அய்யா' எனக் கீழ் அதிகாரிகளால் அழைக்கப்பட்ட தேவாரம்தான் அவரைப் பாலியல் பலாத்காரப்படுத்தினார் என நிரூபிக்கும் அளவிற்கு அவரது சாட்சியம் போதுமானதாக இல்லை" எனக் கூறி தங்கம்மாளின் சாட்சியத்தை நிராகரித்து விட்டது.

மேலும், "தங்கம்மாள் இக்கமிசனின் முன் சாட்சியம் அளித்த தோரணையை வைத்துப் பார்க்கும் பொழுது, அவரை யாரும் மிரட்டி மௌனமாக்கிவிட முடியாது எனத் தெரிகிறது. அவர், கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்ட பொழுதே, இந்தப் புகாரை நீதிமன்றத்திடம் தெரிவிக்காமல், எட்டு ஆண்டுகள் கழித்துக் கூறுகிறார். இவரது குற்றச்சாட்டு உண்மையல்ல என்பதோடு, அனுதாபத்தைப் பெறும் நோக்கத்தோடு கற்பனையும் கலந்து கூறுகிறார்" எனக் கூறி, தங்கம்மாள் நாடகமாடுவதாகக் குற்றஞ் சுமத்தி, அவரை அவமானப்படுத்தியது, சதாசிவம் கமிசன்.

சதாசிவம் கமிசன் விசாரணையில் 11 பெண்கள், தாங்கள் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டதாகச் சாட்சியம் அளித்தனர். இவர்களுள் ஒரேயொரு பெண்தான் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டார்; மூன்று பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர் என்று தான் சதாசிவம் கமிசன் அறிக்கை அளித்தது. பாலியல் வன்புணர்ச்சியால் பாதிக்கப்பட்ட 10 பெண்களின் சாட்சியங்களை, "போதிய சாட்சியமில்லை; நீதிமன்றத்திடம் கூறவில்லை; பாலியல் பலாத்காரப்படுத்திய அதிகாரியின் பெயரைக் குறிப்பிடவில்லை" என மேலோட்டமான காரணங்களைக் கூறி நிராகரித்து விட்டது.




தனிக் கொட்டடியில் சட்டவிரோதமாக அடைக்கப்பட்டு, பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்ட பெண்களிடம், மனசாட்சியைத் தவிர, வேறென்ன சாட்சியத்தை எதிர்பார்க்க முடியும்? அதிரடிப்படையின் அட்டூழியங்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த நீதிபதிகளிடம், பாலியல் வன்புணர்ச்சி குறித்து முறையிட்டிருந்தால், குற்றவாளியான போலீசைக் கொண்டே ஒரு விசாரணை நாடகம் நடந்திருக்குமே தவிர, வேறென்ன நியாயம் கிடைத்திருக்கும்? வீரப்பன் நடமாடிய மலைவாழ் கிராமங்கள் அனைத்திலும் அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த வேளையில், பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை, எட்டு ஆண்டுகள் என்ன, எண்பது ஆண்டுகள் கழித்துச் சொல்வதற்குக் கூட கூட உரிமை உண்டு. இக்குற்றச்சாட்டுக்களைக் கால தாமதத்தைக் கூறிக் கழித்துக் கட்டுவது, அதிகாரவர்க்கத் திமிர்த்தனம் தவிர வேறெதுவுமாக இருக்க முடியாது.

கூட்டு அதிரடிப்படை எம்.எம். குன்றில் நடத்தி வந்த இரகசியக் கொட்டடியில் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட பலரும், "தாங்கள் அந்த ஒர்க்-ஷாப்பில் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டுத் தாக்கப்பட்டதாக"ச் சாட்சியம் அளித்தனர். 'ஒர்க்-ஷாப்' என அழைக்கப்பட்ட அந்த இரகசியக் கொட்டடி, அதிரடிப் படையால் கைவிடப்பட்ட பிறகு, அதனை நேரில் சென்று பார்வையிட்ட சதாசிவம் கமிசன், "தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுவதற்குத் தேவைப்படும் கொக்கியோ அல்லது வேறு வகையான பொருளோ, அந்த ஒர்க்-ஷாப்பின் மேற்கூரையில் காணப்படாததால், இப்படிப்பட்ட சித்திரவதை நடந்ததற்கான வாய்ப்பில்லை" எனக் கூறிவிட்டது.

மேலும், "சாட்சியம் அளித்தவர்கள் மற்றவர்களின் அனுதாபத்தைப் பெறும் நோக்கத்தோடுதான், தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு தாக்கப்பட்டதாக மிகைப்படுத்தி நாடகமாடுகிறார்கள்" என்றும் குறிப்பிட்டுள்ளது. ஓர் இரகசியச் சித்திரவதைக் கூடம் போலீசாரால் எப்படி இயக்கப்படும், அதில் எந்தெந்த வகையான சித்திரவதைகள் செய்யப்படும் என்பதை அறியாத அப்பாவிகள் போல நீதிபதிகள் நடந்து கொண்டதைவிடவா, வேறு நாடகம் இருந்துவிட முடியும்?

அதிரடிப்படை நடத்திய சித்திரவதையால் எலும்பு முறிவு உள்ளிட்டு, பல்வேறு வகையான உடற் காயம் அடைந்தவர்களுக்கும், மனநோய்க்கு ஆளானவர்களுக்கும் மேட்டூரில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க மறுக்கப்பட்டதால், பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்கள் தனியார் மருத்துவர்களிடம்தான் சிகிச்சை எடுத்துக் கொண்டனர். ஆனால், இதற்கான ஆதாரங்கள் எதுவும் அவர்களால் காட்ட இயலாத



அதிரடிப்படையால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு, போலி மோதலில் கணவரையும் பறிகொடுத்ததோடு, எட்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அனுபவித்த கொளத்தூரைச் சேர்ந்த சின்னப்பொண்ணு.

www.padippakam.com



தையே காரணமாகக் காட்டி, சித்தர வதையால் பாதிக்கப்பட்ட பலரின் சாட்சியங்கள் கமிசனால் நிராகரிக் கப்பட்டன.

மின் அதிர்ச்சி உள்ளிட்டு பல் வேறு வகையான சித்திரவதைக ளுக்கு ஆளாக்கப்பட்ட கோவிந்தம் மாளின் இடுப்பெலும்பு முறிந்து போனதோடு, அவர் மனநோய்க் கும் ஆளாகி, பலமுறை தற்கொலை செய்து கொள்ளவும் முயன்று இருக் கிறார். இதற்காக மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டபொழுது, அவர், தான் போலீசா ரால் சித்திரவதை செய்யப்பட்டதைச் சொல்லவில்லை. மருத் துவமனை ஆவணங்களில் அவரின் உடற்காயங்கள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்படாததையே ஆதாரமாகக் காட்டி, அவரின் சாட்சியத்தை நம்ப மறுத்துவிட்டது, சதாசிவம் கமிசன்.



அதிரடிப் படையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதியும், நிவாரணமும் வழங்கக் கோரி, சத்தியமங்கலத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற "பாதிக்கப்பட்டோர் வாழ்வுரிமை மாநாடு."

சதாசிவம் கமிசன் 89 பேரின் சாட்சியத்தை மட்டுமே உண்மை என ஏற்றுக் கொண்டது. இவர்களுள் 73 பேர், கர்நா டகா தடா நீதிமன்றத்தால், "தடா" வழக்கில் இருந்து விடு தலை செய்யப்பட்டவர்கள். இவர்கள் அதிரடிப்படையால் சட்டவிரோதக் காவலில் வைக்கப்பட்டு, சித்திரவதை செய் யப்பட்டது; தடா சட்டத்தின் கீழ் அவர்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டது ஆகிய அத்துமீறல்கள் "தடா" நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு விட்டதால், இந்த 73 பேரின் சாட்சியத்தை சதாசிவம் கமிசனால் நிராகரிக்க முடியாமல் போய்விட்டது. இந்த 73 பேரைக் கழித்துவிட்டுப் பார்த்தால், சதாசிவம் கமிச னால் "நீதி" கிடைக்கப் பெற்றவர்கள் 16 பேர்தான்.

சித்திரவதையால் பாதிக்கப்பட்ட வர்கள், கூட்டு அதிரடிப் படையைச் சேர்ந்த 38 அதிகாரிகளைக் குற்றவா ளிகளாக அடையாளம் காட்டினார் கள். இக்குற்றவாளிகளுள் கர்நாடகா அதிரடிப் படையின் தலைவர் சங்கர் பித்ரியும் ஒருவர். "சங்கர் பித்ரி, தன் னைக் கைது செய்த பிறகு, துப்பாக்கி யைக் காட்டிக் கொலை செய்து விடு வதாக மிரட்டியதை"ச் சாட்சியமாக அளித்தார், ஒருவர். சதாசிவம் கமி சனோ, "கீழ் அதிகாரியைக் கொண்டே இது போன்ற மிரட்டலை, சங்கர் பித்ரி செய்திருக்க முடியும்" எனக் கூறி, சங்கர் பித்ரியின் மீதான குற்றச்சாட்டை தள்ளுபடி செய்து விட்டது.


"ஓர்க்-ஷாப்பில் நடந்துள்ள சித் திரவதைகளால் பலரும் காயம் அடைந்திருப்பது உண்மை; குறிப் பாக, கண்கள் கட்டப்பட்ட நிலையில் பலர் ஓர்க்-ஷாப்பில் அடைத்து வைக் கப்பட்டுச் சித்திரவதை அனுபவித்தி ருப்பதும் உண்மை. எனினும், காலம் கடந்துவிட்ட நிலையில், 2000 அதிர டிப் படை வீரர்களுள், இந்தக் குற்றங் களை யார் செய்திருப்பார்கள் எனத் தற்பொழுது அடையாளம் காட்டுவது சாத்தியமில்லாதது" எனக் கூறி அடையாளம் காட்டப்பட்ட 40 காக்கிச் சட்டை கிரிமினல்களையும் தப்ப வைத்து விட்டது, சதாசிவம் கமிசன்.

குற்றம் நடந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாத சதாசி வம் கமிசன், குற்றம் குறித்த சாட்சியங்களை நைச்சியமாக ஒதுக்கித் தள்ளியிருப்பதை விநோதம் என்றோ முரண்பாடு என்றோ எளிமைப்படுத்திவிட முடியாது. இதுதான் வர்க்க நீதி. அதிரடிப்படையால் பாதிக்கப்பட்டவர்கள் கிராமத்து ஏழை விவசாயிகள்; தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள். அத னால் தான் அவர்களின் சாட்சியம் அம்பலம் ஏறவில்லை.

● செல்வம்


இப்போது விற்பனையில்

**மாவோயிஸ்டுகளின் ஆயுதப் போராட்ட முன்னெடுப்புகள் கருவிலே சிதைவது ஏன்?**




மக்கள்திரள் அடித்தளத்தைப் பெறாமலே, அதற்கான முயற்சிகள் ஏதுமின்றியே ஆயுதப் போராட்டத் தயாரிப்பு, ஆட்களையும் ஆயுதங்களையும் சேகரிப்பது, பயிற்சி எடுப்பது ஆகிய நடவடிக்கைகளைக் கொண்ட செயலுத்தி யைப் பின்பற்றிவரும் மாவோயிஸ்டு கட்சித் தலைமை யின் இடது சாகசவாதத்தின் மீதான விமர்சனம்.

புதிய ஜனநாயகம் வெளியீடு

நன்கொடை : ரூ. 15/-

நூல் கிடைக்குமிடங்கள்:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 9444632561


கீழைக்காற்று,
நூல் வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
தொலைபேசி: 044-28412367


Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

குஜராத்தில் 2002-ஆம் ஆண்டில் நடந்தது மதக் கலவரமல்ல; மாறாக, அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி போலீசு துணையுடன் இந்து மத வெறிக் குண்டர்களை அப்பாவி முஸ்லீம்கள் மீது ஏவிவிட்டு, நரேந்திர மோடி நடத்திய இனப்படுகொலை. அதில் தம் வீடு-வாசல், உற்றார்-உறவினர்களை இழந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் இன்றுவரை வீடு திரும்பவில்லை. சொந்த மண்ணிலேயே அகதி முகாம்களில் வதைபடுகின்றனர். இப்பயங்கரவாத வெறியாட்டத்துக்குப் பின்னரும் பெரும்பான்மை 'இந்து'க்களை இந்துவெறிக்கு ஆட்படுத்துவதன் மூலம் மீண்டும் முதல்வர் பதவியைக் கைப்பற்றியுள்ளார், மோடி. முதல்வர் பதவியில் அமர்ந்துவிட்டதனாலேயே ஒரு கொலைக் குற்றவாளி நிரபராதியாகி விட முடியாது. இந்த இனப்படுகொலை குற்றவாளி, இதுவரை தண்டிக்கப் படாதது இந்திய அரசியலமைப்பு முறையின் தோல்வியையே நிரூபித்துக் காட்டுகிறது.

மோடி, அமெரிக்காவில் கால் வைக்க முடியாது; அமெரிக்கா "விசா" வழங்க மறுத்துள்ளது. ஐரோப்பாவில் கால் வைத்தால், மறுகணமே அவர் கைது செய்யப்பட்டு பெல்ஜியம் நீதிமன்றத்தில் நிறுத்தப் படுவார். ஆனால், இங்கு அவருக்கு "இசட் பிளஸ்" பாதுகாப்பு!




# "இனப்படுகொலைக் குற்றவாளி நரேந்திர மோடியே, திரும்பிப் போ!"
## — மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) ஆர்ப்பாட்டம்

இந்து மதவெறி கிரிமினலுக்கு அங்கீகாரம் பெற்றுத் தரும் நோக்கத்துடன்தான் பா.ஜ.க.; ஜெயலலிதா, துக்ளக் "சோ" முதலானோர் இணைந்து திட்டமிட்டே மோடியைத் தமிழகத்துக்கு வரவழைத்திருக்கின்றனர். வலிமையான எதிர்ப்பின் மூலம் இதனை நாம் தடுத்து நிறுத்தாவிட்டால், தமிழகத்தையும் குஜராத் போன்றதொரு பாசிச பயங்கரவாதக் கொலைக்களமாக இவர்கள் மாற்றி விடுவார்கள்.

— இந்த உண்மைகளை விளக்கி பத்திரிகை செய்தி வெளியிட்டுப் பிரச்சாரத்தை மேற்கொண்ட மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC), கொலைகார மோடி சென்னைக்கு வந்த 14.1.08 அன்று சென்னை-சைதாப்பேட்டை நீதிமன்றம் முன்பாக காலை 11.30 மணியளவில் சாலையை மறித்து விண்ணதிரும் முழக்கங்களுடன் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. கொலைகார மோடிக்கு எதிராகக் கருப்புக் கொடி காட்டி, தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து அணிதிரண்ட இவ்வமைப்பின் முன்னணியாளர்களும் செயல்வீரர்களும் வழக்குரைஞர்களும் நடத்திய இப்போராட்டத்தால், சைதை முதல் மோடி கலந்து கொள்ளவிருந்த - "துக்ளக்" இதழின் ஆண்டு விழா நடக்கவிருந்த காமராசர் அரங்கம் வரை ஏறத்தாழ ஒரு மணி நேரத்துக்குப் போக்குவரத்து தடைபட்டு நின்றது. தடையை மீறிப் போராட்டம் நடத்திய குற்றத்திற்காக அனைவரையும் கைது செய்த போலீசு, கொலைகார மோடி விமானமேறிய பிறகுதான் பின்னிரவில் விடுவித்தது.

வீதியில் இறங்கி உணர்வுபூர்வமாக இவ்வமைப்பினர் நடத்திய இப்போராட்டம், உழைக்கும் மக்களிடமும் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் மதச்சார்பற்ற சக்திகளிடமும் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

ஓங்கட்டும் போராட்டம்! ஒழியட்டும் இந்துவெறி பாசிசம்!

— பு.ஜ. செய்தியாளர்கள்








படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# காராகிரகத்தில் வெடித்த கலகம்


நஜினா மஞ்சி என்ற புரட்சியாளரைத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டிய அதிகாரிகளைத் தண்டிக்கக்கோரி, பேயூர் சிறைச்சாலையில் மாவோயிசப் புரட்சியாளர்கள் நடத்திய கலகம்.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் உள்ள மையச் சிறைச்சாலையில், சில கைதிகள் இருட்டுக் கொட்டடியில் தனியாக அடைத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டதையும்; சீக்கிய கைதி ஒருவரைத் தண்டிப்பது என்ற பெயரில் அவரின் தலைமுடி - தாடியை மழித்து அவமானப் படுத்தியதையும் எதிர்த்து, அச்சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருந்த 1,500 கைதிகளும், கடந்த ஜனவரி மாதம் போராட்டத்தில் குதித்து, அரசை அலற வைத்தனர்.

இச்சம்பவம் நடப்பதற்கு ஒரு மாதம் முன்பாக, பீகாரில் உள்ள பேயூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நஜினா மஞ்சி என்ற மாவோயிஸ்டு புரட்சியாளரை சிறை அதிகாரிகள் தரக்குறைவாக நடத்தி அவமானப்படுத்தியதால், அவர் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார். இதற்கு நியாயம் கேட்டுச் சிறைக்குள் போராட்டத்தில் குதித்த மாவோயிஸ்ட் புரட்சியாளர்கள், சிறையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அரசை நடுங்க வைத்தனர்.

தண்டனைக் கைதிகள் / விசாரணைக் கைதிகள் என்றால், அவர்களை மிருகத்தை விடவும் கேவலமாக நடத்தலாம் என்ற பாசிசத் திமிர்த்தனத்திற்கு எதிராக நடந்துள்ள கலகங்கள் தான் இந்தப் போராட்டங்கள். அதனாலேயே, இந்தக் கலகங்கள் மிக விரைவாகவும், கொடூரமாகவும் காதும்காதும் வைத்தாற் போல ஒடுக்கப்பட்டன.

கைதிகளை அவமானப்படுத்தும் அதிகாரிகளை தண்டிக்கக்கோரி ஜலந்தர் சிறையில் நடந்த கலகத்தில் சிறைச்சாலையின் சொத்துக்களைத் தீவைத்துக் கொளுத்திப் போராடும் கைதிகள்.


சிறைச்சாலைகள் கொடிய சித்திரவதைக் கூடங்கள் என்பதையும்; சிறைத்துறை போலீசு, சட்டம்-ஒழுங்கு போலீசைப் போன்ற கிரிமினல்கள்தான் என்பதையும் புரிந்து கொள்வதற்கு திண்டிவனம் கிளைச் சிறையில் ரீத்தா மேரி என்ற இளஞ்சிறுமி சிறைத்துறை போலீசாரால் கும்பலாகப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, விபச்சார விடுதியில் தள்ளப்பட்ட சம்பவமே போதும். மேலும், ஒவ்வொரு சிறைச்சாலையும் கிரிமினல்களை உற்பத்தி செய்யும் பயிற்சிக் கூடமாகவே போலீசாரால் நடத்தப்படுகின்றன.

இந்தியச் சிறைச்சாலை பற்றி ஆராய நியமிக்கப்பட்ட நீதிபதி முல்லா கமிட்டி, ''சிறைச்சாலைகள் பிதுங்கி வழியும் அளவிற்கு கைதிகளை அடைக்கக் கூடாது; அவர்களுக்கு அடிப்படை வசதிகளும், உரிமைகளும் கிடைக்க வேண்டும். சிறைத்துறை போலீசாருக்கு மனித நேயம் பற்றி போதிக்க வேண்டும்'' எனப் பல்வேறு சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்தது.

நீதிபதி முல்லா கமிட்டியின் அறிக்கை வெளியாகி 25 ஆண்டுகள் கழிந்த பிறகும், அவர் பரிந்துரைத்த எந்தவொரு சீர்திருத்தத்தையும் நடைமுறைப்படுத்த இந்திய அரசு தயாராக இல்லை. இதன் மூலம், ''சிறைச்சாலை என்பது போலீசைப் போல, இராணுவத்தைப் போல, ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைக் கருவிகளில் ஒன்று'' என்ற கம்யூனிஸ்டுகளின் கூற்றை மெய்ப்பித்து வருகிறது.

படிப்பகம்